தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகள்

VOL. 6. MAR-1989 NO:3

D
V2ll,1
146357

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
11 சன 199
எழும்பூர், சென்னை-600008

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 31, 1989—தொகுதி 6—எண் 3
Friday, the 31st March, 1989—Volume 6—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

உள்ளடக்கம் | பக்கங்கள்

*31—3—1989*


1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. *221—248*

2. தகவல் கோரல்—

(அ) எதிர்க்கட்சித் தலைவர் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெறுவது பற்றி சென்னை நகரக் காவல்துறை ஆணையர் தெரிவித்துள்ள கருத்து .. .. .. *248—252*

(ஆ) சென்னை கிரிக்கெட் கிளப்பில் வேட்டி கட்டிச் சென்றவர்களுக்கு அனுமதி மறுப்பு .. *252—254, 261—262*

(இ) உறுப்பினர் திரு. கே. அர்ஜுனனின் இல்லம் தாக்கப்பட்டது குறித்து .. .. .. *254—259*

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் *259*

(உ) சென்னையிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் நெல்லூருக்கருகில் பிடித்து வைக்கப்பட்டுள்ளது குறித்து .. .. .. *260—261*

(ஊ) ஸ்டான்டர்டு மோட்டார் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து .. .. .. *262—263*

(எ) அடையாறு அருணாச்சலபுரத்தில் சுவர் இடிந்துவிழுந்ததால் மாண்ட இரண்டு குழந்தைகளின் குடும்பங்களுக்கு உதவி.. .. .. *272—274*

(ஏ) சேரன்மாதேவித் தொகுதியிலுள்ள வறட்சி நிலை குறித்து .. .. .. .. *274*

3. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்த பிரச்சினை .. .. .. .. *263—266*

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

விளவங்கோடுத் தொகுதியில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர்கள் தாக்கப்பட்டது குறித்து — .. .. *266—272*

பக்கங்கள்

5. அரசினர் சட்ட முன்வடிவு—

நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1989 .. .. 275

6. வரவு-செலவுத் திட்டம், 1989-90—பொது விவாதம் —(தொடர்ச்சி) .. .. ..

*திரு. கே.கே.எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் 575—279, 285—300

திரு. ஏ. சுப்பு .. .. .. .. 300—304

திரு. பி. வி. இராஜேந்திரன் .. .. 305—315

*திரு. மு. இராமநாதன் .. .. .. 315—322

திரு. ஜி. பழனிச்சாமி .. .. .. 323— 32

திரு. எம். சீரங்கன் .. .. .. .. 327—331

*திரு. நா. இராமகிருஷ்ணன் .. .. .. 331—334

பேராசிரியர் க. பொன்னுசாமி .. .. 334—339

7. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் .. .. .. 339

8. பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 340


144357

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 மார்ச் 31, வெள்ளிக்கிழமை

பங்குனி 18, விபவ—திருவள்ளுவர் ஆண்டு, 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

" பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார் "

நல்ல பொருளை, நல்ல அறிஞரின் அவையில், மனத்தில் பதியுமாறு சொல்லமுடியாதவர், பல நூல்களைக் கற்றாலும் பயன் இல்லாதவரே.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### நீலம்பூரிலிருந்து கேரள மாநிலத்திற்குச் செல்ல நெடுஞ்சாலை

15.—(*வினா எண். 175) **திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலம்பூரிலிருந்து செட்டிப்பாளையம்-மதுக்கரை வழியாக கோவை நகருக்குள் நுழையாமல், கேரள மாநிலத்திற்குச் செல்ல நெடுஞ்சாலை போடும் பணி எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : நீலாம்பூரிலிருந்து செட்டிப்பாளையம் மதுக்கரை முதல் கொச்சி வரை செல்லும் சாலைப் பணியானது ஏற்கெனவே கோவை புறவழிச் சாலையாகப் பரிந்துரைக்கப் பட்ட ஒன்றாகும். இப்புற வழிச்சாலைக்காகத் தேவைப்படும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு தேசிய நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் உள்ளது. இப்புற வழிச்சாலைக்கான தொழில் நுட்ப பிரேரணைகள், தோராய மதிப்பீடு முதலியன தயாரிக்கப் பட்டு வருகின்றன. தொழில்நுட்பப பிரேரணைக்கு மத்திய அரசு ஒப்புதல் பெற்ற பின்னர் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மைய அரசுக்கு நிதி ஒப்பளிப்பிற்காக அனுப்பி வைக்கப்படும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எல். எச். 47 என்று சொல்லக் கூடிய தேசிய நெடுஞ்சாலை நீலாம்பூரிலிருந்து செட்டிப்பாளையம்-மதுக்கரை வழியாக செல்லக் கூடிய பை-பாஸ் சாலை மத்திய அரசால் எப்போது அனுமதிக்கப்பட்டது? அதனுடைய மதிப்பீடு என்ன? இந்த பை-பாஸ் சாலையினுடைய நீளம் எவ்வளவு? இந்தப் பணி இவ்வளவு தாமதப்பட்டதற்கு உண்டான அடிப்படைக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தனி வினாவா, அடுக்கு வினாவா?

திரு. மு. இராமநாதன் : தொடர்புடையது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புற வழிச் சாலைக்கான ஒப்புதல் மத்திய அரசாங்கத்தால் 1972வது ஆண்டு அளிக்கப்பட்டது, அதற்குப் பிறகு இந்தப் புற வழிச் சாலைக்கான நிலங்களை கையகப்படுத்துகின்ற டணி தொடங்கி, தற்போதுதான் முடிவடைந்து இருக்கிறது. இதனுடைய மொத்த நீளம் 27.8 கிலோ மீட்டர். நிலங்கள் கையகப்படுத்துவதற்கு ஆகியிருக்கக் கூடிய செலவு ரூ. 36.425 இலட்சங்கள். இந்தப் பாதை, புற வழிச் சாலை அமைப்பதற்காக மொத்தச் செலவு தோராயமாக ரூ. 443.40 இலட்சங்கள் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய எல்லையையும், கேரளத்தினுடைய எல்லையையும் சேர்க்கக் கூடிய பிரதானமான சாலையாகும். கோவை மாநகரத்து போக்குவரத்தையே இந்த நெடுஞ்சாலைத் துறை தாமதப்படுத்துவதினால் மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகின்றார்கள். அதுவும் கோவை மாநகரை இணைக்கக் கூடிய பிரதானமான சாலை வழியாகத்தான் எல்லா போக்குவரத்தும் நடைபெற வேண்டி இருக்கிற கராணத்தால், கோவை மாநரத்தின் எல்லைக்கு இது ஒரு கைபர் கணவாயைப் போல பெரும் துன்பத்திற்கு ஆளாக வேண்டிய நிலையில் மக்கள் அவதிப்படுவதினால் இந்த எல். எச். 47 பை-பாஸ் சாலையை உடனடியாகப் போட்டால்தான், நிமிஷத்திற்கு நூறு வாகனங்களுக்கு மேல் செல்லக் கூடிய ஒரே சாலையில் தான் எல்லா போக்குவரத்தும் நடைபெற வேண்டிய அவசரமும் அவசியமும் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்று, இந்த பை-பாஸ் சாலையைப் போடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்தப் புற வழிச் சாலையினுடைய முக்கியத்துவத்தை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. இருந்தாலும் கூட, பாதையை அமைப்



பதற்கான நிலங்கள் கையகப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டு 17 ஆண்டுகள் அதற்காக செலவிடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் கூட, அதற்கான தொழில்நுட்பக் கருத்துரு உருவாக்கப்பட்டு, மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்று, மீண்டும் இங்கே நம்முடைய மாநில அரசுக்கு திரும்ப வந்ததற்குப் பிறகு, அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்படவேண்டும். மதிப்பீடுகளுடைய ஒப்புதலும், மத்திய சர்க்கார் அனுமதித்ததற்குப் பிறகு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, அதற்குப் பின்னாலே நாள் இதழ்களில் விளம்பரங்கள் செய்யப்பட்டு, ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டதற்குப் பிறகுதான் இந்தப்பணிகள் தொடங்கப்பட வேண்டும். இப்படி இந்த நடைமுறைகள் இவைகளில்தான் கால தாமதமாகிறதே தவிர, நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் அந்தச் சாலை வெகு விரைவில் அமைக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இருப்பினும் காலதாமதம் தவிர்க்கப்பட்டு, விரைந்து வேலைகள் நடைபெறுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. சே. ரமணி : தலைவர் அவர்களே, வினாவை தொடுத்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் அந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டார்கள். கேரள மாநிலத்திலேயிருந்து போகக் கூடிய சகல போக்குவரத்தும் ஒரே ஒரு பாதை மூலமாக கோவை மாநகரத்தை கடந்து செல்லக் கூடிய ஒரு நிலை இருப்பது பெரிய அபாயத்திற்கும், ஆக்ஸிடெண்டுகளுக்கும் இடம் கொடுக்கிறது. ஆகவே துரிதமாக அதை நிறைவேற்றப்பட வேண்டிய முக்கியத்துவம் தான் அதில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய அவசர நடவடிக்கை. 17 வருஷம் நிலம் கையகப்படுத்துவதற்கே என்று சொன்னால், நீங்கள் எடுத்துக் கொடுக்கக்கூடிய தொழில் நுட்பத்தை அனுமதிப்பதற்கு 17 வருஷம், பாக்கி இருக்கும் வேலைகளுக்கு 10, 15 வருஷம் என்று ஆனால், அனேகமாக இந்தத் தலை முறையில் நாங்கள் யாரும் அந்தப் பாதையைப் பார்க்க முடியாமல் போகலாம். நாங்கள் உபயோகப்படுத்துவது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும் இவ்வளவு டிலே நிச்சயமாகக் கூடாது. ஆகவே அரசு விரைந்து, அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி, மத்திய அரசுக்குச் சொல்லி, இந்தக் கையகப்படுத்துவதற்கான வேலை நடக்கும்போதே, தொழில் நுட்பங்களையும் சைமல்டேனியசாக கவனிக்க ஏற்பாடு செய்யக் கூடாதா? அப்படி ஒரு நடவடிக்கையை, துரித நடவடிக்கையாக அவசர நிமித்தமான நடவடிக்கையாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இந்தக் கால எல்லைக்குள், என்று நிர்ணயித்தால் கூட நன்றாக இருக்கும், அதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த மாற்றுப் பாதையைப் பொறுத்தவரையில் தேசிய நெடுஞ்சாலையில் அமையக்கூடிய ஒன்றாகும். எனவேதான் மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலுக்காக எதிர்பார்த்துக்

கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கக் கூடிய கருத்துக்களை மையமாக வைத்து, மத்திய அரசுக்கு அதனுடைய தேவையை வலியுறுத்தி விரைந்து அதற்கான தொழில் நுட்ப அனுமதி மற்றும் ஒப்பந்தத்திற்கான அனுமதி கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை அணுகி, எவ்வளவு விரைவில் அனுமதியைப் பெறமுடியுமோ அந்த அளவிலே பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிடையாக அந்தப் பாதையிலே செல்லக் கூடிய வாய்ப்பையும் இந்த அரசு உருவாக்கிக் கொடுக்கும்.

**திரு. ரவி அருணன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் பாபநாசத்திலிருந்து காரையார் மார்க்கமாக திருவனந்தபுரத்திற்கு புதிய நெடுஞ்சாலை அமைப்பதற்கான ஆய்வு செய்யப்பட்டும், மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டும், பல ஆண்டுகளாக அந்த திட்டம் நிறைவேறாமல் உள்ளது. அந்தச் சாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அரசு அந்தச் சாலையை விரைந்து அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவர் அவர்களே, சாலைகளின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது. இருந்தாலும், இது கோவையிலே இருக்கக்கூடிய ஒரு மாற்றுப் பாதையைப்பற்றிய கேள்வி. தனிக் கேள்வியாகப் போட்டால் உரிய பதிலை அரசு கொடுக்கும்.

**திரு. என். கணபதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய கலைஞர் அரசில் 1971-72ஆம் ஆண்டில் சென்னை கன்னியாகுமரி கடற்கரை சாலையை நிறைவேற்றுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு, பாதி வேலை நடந்து கொண்டிருந்த நேரத்தில், அந்த ஆட்சி அகற்றப்பட்டது. அதன் பின்னர் அந்தத் திட்டம் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்று நினைக்கிறேன். தற்போது அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் நிறைவேற்றப்படும்.

**திரு. பி. என். வல்லரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து தேனி வழியாக கேரளத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலை, நேஷனல் ஹைவேஸ் என்று சொல்லப்படுகிற தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குகிற திட்டம் அரசுக்கு உள்ளதா? ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : அரசின் பரிசீலனையில் உள்ளது.



**திரு. வி. பி. இராசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பை-பாஸ் ரோட்டை எடுத்து நடத்துவதில் மத்திய அரசினுடைய மெத்தனப் போக்கை தவிர்க்கின்ற வகையில் மாநில அரசே அந்த வேலைகளை, மத்திய சர்க்கார் அனுமதி தரும் என்ற நம்பிக்கையோடு தொடங்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு தயாராக இருந்தாலும், நிதி அங்கேயிருந்துதான் வரவேண்டும். எனவேதான், அதை எதிர் நோக்கித்தான் காரியங்கள் நடைபெற வேண்டும்.

(முற்பகல் 9—10)

**திரு. குமரி அனந்தன்** : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மதுரையிலிருந்து தனி வழியாக கொச்சிக்கு செல்ல உள்ள நெடுஞ்சாலை அனுமதிக்கப்பட்டுவிட்டதாக நான் பத்திரிகைகளில் எல்லாம் படித்தேன். அதனை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அறிந்திருந்தால், அதனை எங்களுக்குச் சொன்னால் அதனை தாங்களும் அறிவோம்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. வீ. தமிழ்மணி** : பேரவைத் தலைவர் அவர்களே சாலை அமைப்பதற்காக கையகப்படுத்துகின்ற நிலங்களுக்கு நஷ்ட ஈடு பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த நஷ்ட ஈடு வழங்குவதற்கு ஒரு காலக்கெடு நிர்ணயிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோயம்புத்தூர் புறவழிச் சாலையைப் பொறுத்த வரையில் நஷ்ட ஈடு முழுவதுமாக வழங்கப்பட்டு நிலம் தேவையான அளவு கையகப்படுத்தப்பட்டு, அரசாங்கத்தினுடைய பொறுப்பில் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுவிட்டது. வேறு ஏதாவது இடத்தில் நஷ்ட ஈடு வழங்கப்படாமல் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களானால் அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**திரு. யூ. கே. வெள்ளிங்கிரி** : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நீலம்பூரிலிருந்து கொச்சிக்குச் செல்லக்கூடிய பாதை சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் விவரிததார்கள். அதேபோல ஊட்டி, மேட்டுப்பாளையம் பகுதியில் வரக்கூடிய வாகனங்களை குருமாண்டாம்பாளையம், வெள்ளக்கிணறு, கணபதி வழியாக பீளமேடு பகுதி வழியாக பை-பாஸ் வழி அமைத்து கேரளாவிற்கு செல்லுவதற்கு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற பாதை கேரளாவிற்குச் செல்லாது. அவினாசிக்குத்தான் செல்லும்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையைச் சுற்றி சுற்று வளையச்சாலை அமைப்பதற்கு கடந்த அரசிடம் கோரிக்கைகள் கொடுக்கப்பட்டன. அதற்கு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டதா என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வியானது கேரளாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் ரோடு பை-பாஸ் மூலமாகப் போடப்படுவது. கேரளாவில் மதுக்கடைகள் ஜாஸ்தியாக இருக்கின்றன. இங்கிருந்து அதிமாகக் குடிக்கிறவர்கள் தான் அங்கு ஜாஸ்தியாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். எப்படித் தெரிந்தது என்றால் சேலம் ட்ரான்ஸ்போர்ட்டில் காலையிலிருந்து சாயந்திரம் வரைக்கும் கும்பல் அதிகமாக இருக்கிறது. ஏன் அதற்கு மட்டும் கும்பல் அதிகமாக இருக்கிறதே மற்ற அண்டர்டேக்கிங்குகளுக்கு கம்மியாக இருக்கிறதே என்று பார்க்கின்ற போது குடிக்கின்றவர்கள் காலையிலிருந்து சாயந்திரம் வரைக்கும் போய்க்கொண்டே இருக்கிறார்கள். இப்பொழுதாவது ஐ.எம்.எப். மதுக்கடை இருக்கிறது. அப்பொழுது அதுவும் இல்லாமல் இருந்தபோது குடிக்கின்றவன் தான் அதிகமாக போய்க்கொண்டிருந்தான். அதற்கு வசதி ஜாஸ்தி பண்ணிக்கொடுக்க முடியுமா என்று அரசை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மது குடிப்பது மனிதர்கள் தான். வாகனங்கள் குடிப்பதில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே போகிறவர்கள் எல்லாம் குடிப்பதற்காகத்தான் போகிறார்கள் என்று சொல்வது சரியாக இருக்காது. அது அவைக் குறிப்பில்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குடிமகன் என்ற பெயரில் தான் குறிப்பிடுகிறார். நானே வருத்தப்படவில்லை, அதற்காக. (சிரிப்பு).

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலிலிருந்து, கேரளத்திற்கு ஏற்கனவே ஒரு சாலை சென்று கொண்டிருந்தது. அது கடந்த பல ஆண்டுகளாக எவ்வித மராமத்தும் இல்லாமல், அந்தச் சலை சேழிந்து இப்போது போக்குரவத்தே இல்லை என்று சொல்லப்படுகிறதே,



அதை இந்த அரசு சரி செய்து கொடைக்கானலிலிருந்து கேரளத்திற்கு போக்குவரத்து வசதிகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பை-பாஸினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அமைச்சர் அவர்கள் பார்ட் 2 ஸ்கீமிலே சேர்த்து கண்டின்ஜென்சி பண்டிலே ---- அதில் நிறைய மாற்றங்கள் செய்கிறார்கள். நிறைய பணத்தை எடுத்து செலவு பண்ணுகிறார்கள். அப்புறம் அதிலே போட்டுவிடுகிறார்கள். கண்டின்ஜென்சியிலிருந்து நிதியைப் பெற்று உடனடியாக அதை நிறைவேற்றுவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த மாற்றுப் பாதை ஏற்கனவே மத்திய அரசு அனுமதித்த ஒரு திட்டம். நிதியைப் பற்றி பிரச்சினை இல்லை. இருந்தாலும் நிலம் கையகப்படுத்துவதில் இந்த 17 ஆண்டுக்காலம் தாமதமாகி விட்டது. மேற்கொண்டு தொழில் நுட்ப அனுமதி, ஒப்பந்தப் புள்ளி கோருதல் இவை அனைத்தும் மத்திய சர்க்காரினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நாம் செய்யவேண்டிய நிலையிலே இருக்கிற காரணத்தாலேதான் காலதாமதம் ஆகிறது. இருந்தாலுக்கூட, நிறைய உறுப்பினர்கள் கேள்வி கேட்டு, அதனுடைய முக்கியத்துவம் நாட்டிலே இருக்கின்ற அத்தனை பேருக்கும் தெரிந்திருக்கிற காரணத்தால், மத்திய சர்க்காரும் விரைவில் அதற்கான அனுமதியைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை பற்றிக் கேள்விகள் எழுப்பியிருப்பதால், அமைச்சர் அவர்களுக்கு தலைவர் மூலம் ஒரு வேண்டுகோள். திருச்சியிலிருந்து திண்டுக்கல், மதுரை மார்க்கமாய்த்தான் ராமேஸ்வரத்திற்கு தேசிய நெடுஞ்சாலை இப்போது இருக்கிறது. ஆனால் யாத்திரிகர்கள் அனைவரும் • திருச்சியிலிருந்து காரைக்குடி, தேவகோட்டை, ஆர். எஸ். மங்கலம் வழியாக, இராமநாதபுரம் வழியாகத்தான் ராமேஸ்வரத்திற்கு போய்க்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களிடம் அதை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு ஏதாவது யோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய நலனைக் கருதி, இதை மத்திய அரசுக்கு ஆலோசனையாக மாநில அரசு எடுத்துச் சொல்லும்.

[1989 மார்ச் 31

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலிருந்து பல்லடம் வழியாக மங்களம், அவிநாசி செல்கின்ற பாதை, திப்புசுல்தான் காலத்திலே அமைக்கப்பட்ட பாதை. அதற்குப் பெயர் சுல்தான் பாட்டை என்பதாகும். எங்களுடைய ஊர் வழியாகத்தான் செல்கிறது. அந்த சுல்தான் பாட்டை, அந்தப் பாதை இன்னும் விரிவுபடுத்தப்படாமல் பல இடங்களில் சிங்கிள் ரோடாக இருக்கின்றது. பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, அதை விரிவுபடுத்துகின்ற திட்டம் இருக்கின்றதா என்பதை அமைச்சரிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வருகின்ற நிதி ஆண்டில் அந்தப் பாதையை அகலப்படுத்துவதற்கு, இரட்டைப் பாதையாகப் போடுவதற்கு அரசு அனுமதித்துள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அந்தப் பாதை அமைப்பதற்கு நிலங்களைக் கையகப்படுத்துவதில் காலதாமதம் அதிகமாக இருக்கின்றது என்ற குறிப்புக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இதுபோன்ற அதிமுக்கியத்துவம் வாய்ந்திருக்கின்ற அந்தப் பாதையை அமைப்பதற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு சட்டச் சிக்கல்கள் ஏதாவது இருந்தால், அதைத் தீர்ப்பதற்கும் இதுபோன்று முக்கியத்துவம் வாய்ந்திருக்கின்ற நிலங்களைக் கையகப்படுத்துவதற்கும் தனியாக ஒரு சட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள விதிமுறைகளின்படி, நாம்நிலத்தைப் பாதைகளுக்கு மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு எடுக்கின்ற நேரத்திலேகூட, பல பேர் தாங்களாகவே கொடுக்க முன் வருகிறார்கள். இன்னும் பல பேர் நீதிமன்றத்திற்குச்சென்று ஒரு நாலாண்டுக் காலம், ஐந்தாண்டுக்காலம், அந்த வழக்கு முடிவதற்குள் தென்னந்தோப்பையே உருவாக்கிவிடுகிறார்கள், சில பேர். இப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது அதைச் சட்ட ரீதியாக நாம் அணுகவேண்டிய நிலமை இருந்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. மோகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீலம்பூரிலிருந்து, செட்டிப்பாளையம் மதுக்கரை வழியாக கோவை நகருக்குள் நுழையாமல் கேரளா செல்லும் என்கின்ற இந்த மூலக் கேள்வி மிக முக்கியமான ஒன்று. காரணம் போக்குவரத்து நெரிசலிலே இன்றைக்குக் கோவை சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது புதிதாக மாநகராட்சிகள் உருவாகின்றபோது, வட மாநிலங்களிலே பல புதிய மாநகராட்சிகள், கார்ப்பரேஷன்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து பெரும் நிதியை



1989 மார்ச் 31]

அவர்கள் கேட்டு, மத்திய அரசும் வழங்கிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மத்திய அரசாங்கத்தின் மூலமாக உலக வங்கியிடம் தொடர்பு கொண்டு பல புதிய மாநகராட்சிகள் நிதி பெறுவது வடமாநிலங்களிலே மிகப் பெரும் வழக்கமாக இருக்கிறது. கோவை புதியதாக உருவாகி இருக்கின்ற மாநகராட்சி. மிகப் பெரும் போக்குவரத்து நெருக்கடியிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. அதனாலே இந்த அரசு மத்திய அரசோடு அணுகி, அந்தப் புதிய மாநகராட்சிக்கு அதிக நிதியுதவியினைப் பெற்று அப்படிப்பட்ட நெடுஞ்சாலைகளை அமைத்தால்தான் கோவை நகரத்தினுடைய போக்குவரத்து நெருக்கடி சரி செய்யப்படும் என்ற காரணத்தால் அதற்கான முயற்சியிலே அரசு ஈடுபடுமா ஈடுபட்டிருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே' ஏற்கனவே உலக வங்கியின் உதவியோடுதான் கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரை, அதே மாதிரி சென்னை, மதுரை, திருச்சி, சேலம், இப்படிப்பட்ட பெரிய நகரங்களில் புறவழிச் சாலைகள், அதேமாதிரி நகரத்தைசுற்றி இருக்கக்கூடிய சுற்றுப் பாதைகள், மேம்பாலங்கள் இவைகளையெல்லாம் உலக வங்கியினுடைய அனுமதியோடு, அனுமதிக்கப்பட்டு, 'அர்பன் டெவலப்மெண்ட்' என்ற திட்டத்தின்கீழ், நிறைவேற்றுவதற்கு இந்த ஆண்டு இந்த நகரங்களிலே எல்லாம் அந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

(முற்பகல் 9-20)

திரை அரங்குகளில் டிக்கட் கட்டணம்.

16—(*வினா எண். 2) திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரை அரங்குகளில் டிக்கட் கட்டணத்தைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை. எனவே அதுபற்றிய விவரங்களுக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சினிமா என்பது பொது மக்களுக்கு ஒரு அத்தியாவசியமான துறையாக இருந்து கொண்டிருக்கிறது. வசதி

படைத்தவர்கள் எல்லாம் டெலிவிஷன் பெட்டிகளை வைத்துக் கொண்டு தேவையான படங்களைப் போட்டு பார்த்துவிடுகிறார்கள். ஏழைகள்தான் சினிமாத் தியேட்டர்களுக்குச்சென்று சினிமா பார்க்கவேண்டியிருக்கிறது. இன்றைக்கு அவற்றின் கட்டணம் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு செல்கிறது. குடும்பச் செலவில் இது ஒரு பெரிய செலவாக அமைகிறது. ஆகவே இதைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதைப்போல--படத்தயாரிப்பாளர்கள், பட விநியோகஸ்தர்கள், படத்தை வெளியிட்டுக் காட்டுகின்ற திரையரங்க உரிமையாளர்கள் ஆகிய இந்த 3 துறைகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை அழைத்து அவர்களிடத்திலே பேசுவது என்று வரவு-செலவுத் திட்டத்திலே கூறப்பட்டிருக்கிறது—அந்தப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு உறுப்பினருடைய கோரிக்கை பற்றியும் முடிவு எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சினிமா தியேட்டர்களில் குறிப்பாக சென்னை நகரில் கவுண்டரில் டிக்கட் வாங்குவது என்பது குதிரைக் கொம்பாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட காட்சிக்குப் போகக்கூடிய நேரத்திலே முன்னாடியே போனால் கூட டிக்கெட் தீர்ந்து விட்டது என்று சொல்கிறார்கள். வெளியே 10 ரூபாய் கொடுத்தால் எப்போதும் டிக்கெட் கிடைக்கிறது. ஆகவே அதைத் தடுப்பதற்கு இந்த அரசு என்ன கொள்கை வைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னது போல் அந்த 3 துறையினரோடு பேசும்போது இதுபற்றியும் நிச்சயமாகப் பேசப்படும். மாண்புமிகு உறுப்பினர் இங்கே கவனத்திற்குக் கொண்டு வந்த பிரச்சினை இதில் மிக முக்கியமான பிரச்சினை, House Full என்று தியேட்டர் வாசலிலே போடப்பட்ட பிறகு வெளியே டிக்கெட் அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றன. இதற்கு சில மன்றங்கள் காரணமாக இருக்கின்றன. ரசிகர் மன்றங்கள் காரணமாக இருக்கின்றன. இவையெல்லாம் நிச்சயமாக அந்த 3 துறையினரோடு பேசும்போது பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய முந்தைய ஆட்சியில் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில் திரைப்படம் போட்டுக் காட்டப்பட்டது. இடையில் அவைகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக அந்த அரங்கம் களை இழந்து போய் இருக்கின்ற நிலை காணப்படுகிறது. எனவே அவை போக்கப்படுகின்ற அளவுக்கு அந்த எழிச்சியை காணும் வகையில் மீண்டும் அந்த கலையரங்கத்தில் பொதுமக்களுக்கு திரைப்படம் போட்டுக் காட்ட அரசு உத்தேசித்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புகுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டணத்தைக் குறைக்கும் உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஏர்கன்டிஷன் வசதி செய்யப்பட்டு இருக்கக்கூடிய அரங்கங்களில் மின் தட்டுப்பாடு உள்ள நேரங்களில் ஏர்கன்டிஷனர் வேலை செய்வது இல்லை. ஆகவே ஏர்கன்டிஷன் தியேட்டர்களில் ஏர்கன்டிஷன் வேலை செய்யாத நேரத்திலாவது அவர்கள் ஏர்கன்டிஷனுக்கு கொடுக்கக்கூடிய பணத்தை குறைத்து, கட்டணத்தை குறைத்து வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகள் எல்லாம் குறித்து அந்த 3 துறையினரோடு பேசும்போது விவாதிக்கப்படும். விவாதித்து நல்ல முடிவு எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் சினிமா கொட்டகைக்கு பகலில் போனால் கூட அங்கே கூட்டம் நிறைந்து வழிகிறது. அவர்கள் இந்த டிக்கெட் விலையைப் பற்றி கவலைப்படாமல் எத்தனை ரூபாய் ஆனாலும் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் எல்லாம் மிகவும் வேதனைப்பட்டு சொல்கிறோம். இந்த டிக்கெட் இப்போது இருப்பதை இரண்டு மடங்குகளாக ஆக்குவதற்கு உண்டான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேச்சுவார்த்தையில் அம்மையார் அவர்களுடைய கருத்தும் யோசிக்கப்படும்.

திரு. கே. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திரையரங்குகளில் டிக்கெட் வழங்காமல் கட்டணத்தை மட்டும் வாங்கிக் கொண்டு அனுப்புகிற நிலைமை அதிகரித்து வருகிறது. அதை அரசு அறியுமா ? அப்படி அறியுமானால் அரசு எடுத்து இருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியேட்டர் உரிமையாளர்களுடைய வேண்டுகோள்படி கடந்த கால அரசு, அதற்கு முன்பு தி.மு.க. அரசிலே கூட 'காம்பௌண்டிங் டாக்ஸ்'

என்ற ஒரு முறை அன்றைக்கு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. அதைப் பயன்படுத்திக் கொண்டு சில இடங்களில், நகர்ப்புறங்களில் இருக்கிற தியேட்டர்களில் படங்களை வெளியிட்டால் ஏமாற்ற இயலாது என்ற காரணத்திற்காக நகர்ப்புறங்களைச் சுற்றியுள்ள புறப் பகுதிகளில் திரையரங்குகளைக் கட்டிக் கொண்டு இதுபோல டிக்கெட் இல்லாமலேயே கட்டணங்களை வசூலித்துக் கொண்டிருக்கிற செய்திகள் அரசுக்கு வந்திருக்கின்றன. இவைகளைப்பற்றியெல்லாம் ஆர அமர யோசித்து எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், தியேட்டர்காரர்கள் ஆகிய இந்த மூன்று துறையினரோடும், அவர்களுடைய பிரதிநிதிகளோடும் பேச வேண்டுமென்று தீர்மானித்து இருக்கிறோம்.

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகள் பல சுகாதாரம் அற்ற நிலையிலே இருக்கின்றன. முதல் காட்சி முடிந்தவுடன் இரண்டாவது காட்சி, சுத்தம் செய்யப்படாமலேயே, அசுத்தமான நிலையிலேயே காட்சிகளை ஆரம்பித்து விடுகிறார்கள். இரண்டாவதாக, பல தியேட்டர்களில் உட்காருகின்ற சீட்டுகள்கூட சரியில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள், தியேட்டர் சொந்தக்காரர்களையெல்லாம் அழைத்து இதுபற்றிப் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், 'புளூ பிலிம்' என்று சொல்லக்கூடிய ஆபாசத் திரைப்படங்கள் பரவலாக சில இடங்களில் காட்டப்படுகின்றன. குறிப்பாக, திருச்சியில் ஒரு தியேட்டரில் காட்டப்படுவதாகத் தகவல் கொடுத்தாலும் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில் சுறுசுறுப்பு காட்டுவது இல்லை. அதுபற்றி நாங்கள் கேட்டபோது, அப்படியில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இப்படி தகவல் கிடைத்ததும், சீருடை இல்லாத காவல் துறையினர் அதைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகார் அரசுக்கு இப்போது அல்ல, கடந்த கால அரசு இருந்தபொழுது கூட இப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன. சில இடங்களில் சீருடை அணியாத காவல் துறையினரே அமர்ந்து அதை ரசித்துப் பார்த்ததாகக் கூட நான் கேள்விப்படுகிறேன். எனவே இதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு கண்டிப்பாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் தொலைக் காட்சிப் பெட்டிகள் அதிகமாக வந்ததினால் இன்றையதினம் சென்னை நகரத்திலே பல திரையரங்குகள் இடிக்கப்பட்டு அடுக்கு மாடிகள் கட்டப்படுகின்றன. வரி விதிப்பு அதிகமாக இருப்பதும் ஒரு காரணமாக இருக்கிறது. எனவே அந்த வரியைக் குறைத்து அவர்களுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வரி விதிப்பினால் ஏற்பட்ட இடர்பாடு அல்ல. வீடியோக்கள் பெருகிவிட்ட காரணத்தினால் இந்த இடர்பாடு ஏற்பட்டிருக்கிறது. வீடியோப் படங்களைத் திருட்டுத்தனமாக எடுத்து, படம் ரிலீஸ் ஆவதற்கு முன்பே வெளியிடுகின்ற அந்த முறையைத் தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒரு படம் 100 நாட்கள் ஓடிவிட்ட பிறகு அல்லது அந்தப் படத்தின் தயாரிப்பாளரே முன்வந்து வீடியோ உரிமையைக் கொடுத்த பிறகுதான் வீடியோ படங்களில் காட்டப்பட வேண்டுமென்பதில் அரசு மிகத் தீவிரமாக இருக்கிறது. அதை மீறி நடப்பவர்கள் மீது கடுமையான சட்டம் பாயும் என்று அண்மையிலே ஒரு நிகழ்ச்சியிலே கூட நான் குறிப்பிட்டு இருக்கிறேன்.

**திரு. ஆ. அதியமான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, சென்னை, கோவை போன்ற பெரிய நகரங்களுக்கு 'சிங்கிள் டேக்ஸ்' என்ற வரி விதிப்பு முறையும், 'பி' கிளாஸ், 'சி' கிளாஸ் செண்டர்களுக்கு 'காம்பௌண்டிங் டாக்ஸ் சிஸ்டம்' என்ற முறையும் இப்போது நடைமுறையிலே இருக்கின்றன. 'காம்பௌண்டிங் சிஸ்டம்' இருக்கக் கூடிய இடங்களிலே திரையரங்கு உரிமையாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே அரசு அந்த வரி விதிப்பு முறைகளைக் குறைக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் இந்தத் துறையோடு தொடர்புடைய முத்தரப்பாரையும் அழைத்துப் பேசி இது தொடர்பான பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. பொன்முடி :** * *

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1989 மார்ச் 31

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. கேள்வி நேரத்திலே தனிப்பட்ட யார் மீதும் குற்றச்சாட்டுகள் இருக்கக் கூடாது என்பது நம்முடைய அவையினுடைய விதிமுறை. எனவே அந்தக் கேள்வியை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த வினா நீக்கப்படுகிறது.

(முற்பகல் 9–30)

**திரு. அ. மலர்மன்னன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே இருக்கிற கலையரங்கத்திற்கு ஏற்கனவே நம்முடைய முதலமைச்சருடைய பெயரை வைத்திருந்தார்கள். அதற்குப் பின்னால் வந்த ஆட்சியாளர்கள் அந்தக் கலையரங்கத்திலிருந்த முதலமைச்சர் பெயரை எடுத்துவிட்டு, எம். கே. தியாகராஜ பாகவதர் பெயரை வைத்திருக்கிறார்கள். மேலும் அந்தக் கலையரங்கம் இன்றைய தினம் சீர்கெட்டு, கவனிப்பாரற்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, அந்தக் கலையரங்கத்தை மீண்டும் புதுப்பித்து, புதிதாக 'ஏ. சி.' எல்லாம் பொருத்தி, மற்ற வசதிகளை எல்லாம் செய்து நல்லமுறையில் அந்தக் கலையரங்கத்தை நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அந்தக் கலையரங்கத்திற்கு அப்போதிருந்த மாவட்டக் குழுவின் சார்பாக —முத்தமிழ் காவலர் திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதன் போன்றவர்கள் இருந்த அந்தக் குழுவின் சார்பாக— அன்றைக்கு என்னுடைய பெயர் வைக்கப்பட்டது உண்மை. அதற்குப் பிறகு வந்த ஆட்சியிலே எம். கே. தியாகராஜ பாகவதருடைய பெயர் வைக்கப்பட்டது. அது என்னுடைய பெயரைவிட மிக முக்கியமான பெயர் என்ற காரணத்தினால் அதை ஒன்றும் நான் குற்றமாக எடுத்துக் கொள்ளவில்லை. இருந்தாலும் அந்தக் கலையரங்கம் பாழ்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப் பாழ்பட்ட அந்த நிலைமையை மாற்றி உடனடியாகப் பராமரிப்பு பணிகளைத் தொடங்க ஆணையிடப்படும்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படங்களில் ஏ-சென்டர், பி-சென்டர், சி-சென்டர் என்று இருப்பதாக அறிகிறேன். அதுபற்றிய விளக்கத்தை அறியலாமா ? அதோடு மட்டுமல்லாமல், தமிழ் நாட்டிலே திரைஅரங்குகளிலே ஆபாசமான திரைப்படங்கள் வெளியிடப்படுகின்றன ; ஆபாச சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன ; அவற்றை எல்லாம் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1989 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் சுருக்கமாக வினாத் தொடுக்க வேண்டும்; அப்போதுதான் விளக்கமான விடை வரும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த ஏ, பி, சி சென்டர் பற்றிய விளக்கம் மாண்புமிகு உறுப்பினருக்குத் தேவைப்படுவதாக அறிகிறேன். ஏ-சென்டர் என்றால் சென்னை, திருச்சி, கோவை போன்ற இடங்களில் படம் வெளியிடப்பட்டால் அதற்கு ஏ-சென்டர் என்று பெயர். மயிலாடுதுறை, குடந்தை போன்ற இடங்களில் படங்கள் வெளியிடப்பட்டால் அதற்கு பி-சென்டர் என்று பெயர். அதற்கும் கீழே உள்ள கிராமங்களில் படங்களை வெளியிட்டால் அதற்கு சி-சென்டர் என்று பெயர். ஏதாவது படம் வாங்கவேண்டுமென்று விருப்பம் இருந்தால் இந்த விளக்கம் அவருக்குத் தேவைப்படும் என்று கருதுகின்றேன்.

**திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரைப்படங்கள் மூலமாக ஏராளமான வருமானம் வருகிறது. ஆகையால் திரையரங்குகளை அரசே ஏற்று நடத்தும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட யோசனை ஏதும் இப்போது இல்லை.

**திரு. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்சார் போர்டில் சில படங்களுக்கு 'அடல்ட் ஒன்லி'—வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று சான்று வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட படங்களுக்கு குழந்தைகளையும் வயது குறைந்தவர்களையும் அனுமதிக்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா ? அப்படி என்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அப்படி சர்டிபிகேட் தரப்பட்ட படங்களுக்கு, மீறி குழந்தைகளை அழைத்துச் செல்கிறார்களா என்பதைக் காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வியானது டிக்கட் பற்றியதுதான். ஆனால் துணைக் கேள்வி எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கிறது. இருந்தாலும் நம்முடைய கலைஞர் அவர்கள் இந்தப் பட்ஜெட்டிலே பெண்களுக்கு நிறைய சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி சினிமா தியேட்டர்களிலும் பெண்களுக்கு சலுகை கொடுக்கப்படுமா ? இரண்டாவதாக் பலவிதமான தம்பதிகள் எல்லாம் சினிமா பார்க்க வருகிறார்கள். அவர்களுக்கு சலுகை கொடுக்கப்படுமா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1989 மார்ச் 31

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, யாருக்குச் சலுகை தரப்பட்டாலும் தரப்படாவிட்டாலும், திருவரங்கம் தியேட்டர்களில் ஃப்ரீயாகப் பார்ப்பதற்கு தீட்சிதர் தம்பதிக்கு அனுமதி வழங்கப் படும். (பலத்த சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வரதீட்சிதர் : நான் சினிமா பார்த்து 40, 45 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது சினிமா தியேட்டருக்கு போய் படம் பார்க்கிற பழக்கமே கிடையாது. மேலும், கலைஞர் அவர்கள் ஒரு குழு போடுவதாகச் சொன்னார்கள். அந்தக் குழுவிலே பொதுமக்களுக்கும் பிரதிநிதித்துவம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தீட்சிதர் அவர்கள் சினிமாத் தியேட்டருக்குப் போய் படம் பார்க்கும் பழக்கம் இல்லை என்று சொல்கிறார்கள். வெளியில் இருந்து இடுக்கு வழியாகப் பார்க்கிறாரா என்று தெரியவில்லை. (பலத்த சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் திரைப்படம் பார்க்க திரையரங்குக்குப் போகாவிட்டாலும் உள்நோக்கி மிகவும் ஆராய்திருக்கிறார்கள். (சிரிப்பு)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில திரையரங்குகளில் நிச்சயிக்கப்பட்ட கட்டணமாக இருக்கக்கூடிய கட்டணத்துக்கு மேல் 3 ரூபாய், 4 ரூபாய் என்ற அதிகமாக வாங்கிக்கொண்டு குறைவான தொகைக்கான டிக்கட்டுகள் கொடுக்கப்பட்டு திரைப்படங்கள் காட்டப்படுவதாக என்னுடைய தொகுதி உட்பட பல பகுதிகளிலிருந்து புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதைக் கண்காணித்து இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும், இப்படிப்பட்ட முறைகேடுகளில் ஈடுபடக்கூடிய திரையரங்குகளைப் பொறுத்தவரையில் அவற்றினுடைய உரிமங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ரத்து செய்வது என்கின்ற வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தொகுதியிலேயே இப்படிப்பட்ட புகார்கள் ஏதாவது இருக்குமேயானால் அதனை எழுத்து மூலமாகக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. சட்டப்படி உண்டான நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும். அதோடு இந்தக் குறைபாடுகள் நடைபெறாமல் அதிகாரிகள் மூலம் கண்காணிக்கப்படும்.



1989 மார்ச் 31]

திரு. ராம. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கில் மீண்டும் மதிய காட்சிகள் காட்டப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இது தொடர்பான கேள்விக்குப் பதிலளித்து ஆகிவிட்டது. அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களினுடைய நிதிநிலையைச் செம்மைப் படுத்த வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, மிகவும் அதிகமான வரிவிதிப்புகள், அதுவும் கேளிக்கை வரி விதிப்புகள் என்பதில் 90 சதவீதத்தை உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் அதிகமான வரி ஏய்ப்புகளை பல்வேறு யுக்திகளைக் கையாண்டு தியேட்டர் உரிமையாளர்களும், அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து செய்கிறார்கள் என்பது பரவலாக அறியப்படுகிற ஒன்று. இவைகளைக் கட்டுப்படுத்தினாலே முழுமையாக கேளிக்கை வரி உள்ளாட்சி மன்றங்களுக்கு முறையாகக் கிடைக்கும். யார் இதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள்? எந்த வகையில் இந்த வரி வசூலிக்கப் படுகிறது. இதில் ஊனம் இருக்குமேயானால் அந்த ஊனங்களை அடைத்து, குறைகளைப் போக்கி முழுமையாக வரி வசூல் செய்வதற்கு அரசு என்ன குறிப்புகளை வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளபடி வரி விதிப்பு முறையிலும், வரி வசூலிப்பதிலும் இருக்கின்ற குறைபாடுகளைப் பொறுத்த மட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியபடி இந்தத் துறை சம்பந்தப்பட்ட முத்தரப்பு பேச்சுவார்த்தைகளில் இவை பற்றி விவரமாகப் பேசப்பட்டு குறைபாடுகள் களையப்படுவதற்கான முயற்சியினை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்குக் கோழி முட்டை வழங்கல்.

17—(*வினா எண். 63)—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்குக் கோழி முட்டை வழங்குவதற்கான செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு கோழி முட்டை வழங்குகிற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம், சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு கோழி முட்டை போடப்படும் என்று அறிவிப்பு செய்து இருக்கிறது. அதை அரசு பரிசீலிக்குமா என்று நான் அறிய விருப்புகிறேன்.

(முற்பகல் 9–40)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் உண்மையிலேயே சத்துணவுத் திட்டமாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு, அக்குழந்தைகளுக்கு, பள்ளிக்கு வருகிற அக்குழந்தைகளுக்கு கோழிமுட்டையும் வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்தில் சொன்னது உண்மை தான். அதைச் செயல்படுத்துவதற்கான குறிப்புகள் தயாரிக்கப்பட்டபோது வாரம் ஒன்றுக்கு ஒரு கோழி முட்டையாவது குழந்தைகளுக்குத் தரலாமா என்று யோசிக்கப்பட்டது. அதற்கு ஏறத்தாழ 20 கோடி ரூபாய்க்கும் அதிகமாகிறது. எனவே ஜுன் மூன்றாம் தேதி முதல்—எப்போதும் ஜுன் மூன்றாம் தேதி என்னுடைய பிறந்த நாளையொட்டி ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதுபோல் ஜுன் மூன்றாம் தேதி முதல்—சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை ஒரு கோழி முட்டை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அடுத்து அந்தக் குழந்தைகளுக்கு சத்து ஊட்டுவதற்காக வைட்டமின் மாத்திரைகள், நல்ல டாக்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக டாக்டர் வெங்கடசாமி போன்ற பெரும் வைத்திய நிபுணர்களுடைய ஆலோசனைகள் கேட்கப்பட்டு இருக்கின்றன. அதுவன்னியில் ஊராட்சி மன்றங்களிலே கோழி வளர்ப்புத் திட்டங்களைப் பெருக்கி, அங்கே கோழிகள் வளர்த்து அதன் மூலம் கோழி முட்டைகள் மலிவாகக் கிடைக்குமேயானால், ஜுன் 3 ஆம் தேதி ஆரம்பமாக 15 நாட்களுக்கு ஒரு முறை கோழி முட்டை கொடுக்கும் திட்டம் என்றும், பிறகு ஒரு வாரத்திற்கு ஒரு கோழி முட்டை என்கிற அளவிலே குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்றும் என்னுடைய அருமை நண்பர் திரு. உகம்சந்த் அவர்களுடைய கேள்வியின் மூலமாக இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)



**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அரவர்கள் ஒரு அறிவிப்பினை செய்திருக்கின்றார்கள். அதே நேரத்தில் முட்டைகள் போடப்படாத காலங்களில், மேலும் சத்துணவு வழங்குவதற்கு, கீரைகள் போன்ற பல்வேறு வகையான சத்துள்ள உணவுகளை அந்த குழந்தைகளுக்குப் போடுவதற்கு அரசு முன்வருமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரை போன்ற காய்கறிகள், அதாவது ஊட்டச் சத்து வழங்கக் கூடிய காய்கறிகள் நிச்சயமாக வழங்கப்படும். எதிர்காலத்திலே அதெல்லாம் அந்தந்த ஊராட்சி மன்றங்களிலேயே, அவர்களின் சார்பிலேயே பயிரிடப்பட்டு, இன்னும் மலிவாக, சிக்கனமான செலவில் அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்படுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அதற்காக ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். ஏ. தங்கராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கும்படியான அந்த மழலைகளுக்கான இந்த அறிவிப்பு தமிழக மக்களின் உள்ளம் உள்ள அளவும் இது நிறைந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சின்னஞ்சிறு சிறார்கள் காலையில் எழுந்து வீட்டை விட்டு உணவுக் கூடத்திற்குச் செல்கின்றபோது ஈயத் தட்டுகளைத் தலையிலே கவிழ்த்துக் கொண்டு செல்லுகின்றார்கள். பள்ளி முடிந்து திரும்புகின்றபோது அந்த ஈயத் தட்டை அந்த பிஞ்சு விரல்களிலேயே தூக்கிச் சுமந்துக் கொண்டு வீட்டுக்கு வருகின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைப் போன்று, இந்த சின்னஞ்சிறு சிறார்களுக்கு சத்துணவு மையங்களில் அரசு இலவசமாக அந்த ஈயத் தட்டுக்களை வழங்கி அங்கேயே அவர்கள் சாப்பிட்டு விட்டு, அங்கேயே வைத்து விட்டுச் செல்வதற்கு ஒரு குறிப்பை அறிவிப்பார்களா என்று கேட்டுக் கொண்டு, இந்த நல்ல திட்டத்தை அறிவித்த முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய பாராட்டுரைக்கு நன்றி. ஆனால் வினாவாகத் தொடுக்க வேண்டும்.

**திரு. எஸ். ஏ. தங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் இந்த சத்துணவு மையங்களுக்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு வினா மட்டும். அத்துடன், அத்துடன் என்று சொன்னால், அது எத்துடன் முடியும்? (சிரிப்பு).

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சத்துணவு மையங்களுக்கு முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று இருக்கும் பெயரை மாற்றி தமிழக அரசு சத்துணவுத் திட்டம் என்று மாற்றப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கெனவே முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்பதை மாற்றி, தமிழக அரசு குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்று அந்தப் பெயர் மாற்றம் செய்து அரசு உத்தரவு வழங்கப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழந்தைகள், தட்டை கையிலே ஏந்திக் கொண்டு பள்ளிக்குச் செல்கின்ற நேரத்தில் செல்கின்றார்கள் என்று மிகுந்த வேதனைப்பட்டார்கள். இப்போது எல்லா சத்துணவு மையங்களிலேயும் அரசின் செலவிலே தான் தட்டுகள் வாங்கப்பட்டு மதியம் அவர்களுக்கு அந்தத் தட்டுகள் கொடுக்கப்பட்டு, அவர்கள் உணவு உண்டு முடிந்ததற்குப் பிறகு அவைகள் எல்லாம் சுத்தம் செய்யப்பட்டு சத்துணவு மையங்களிலேதான் வைக்கப்படுகின்றன. சில சத்துணவு மையங்களிலே, இன்றைக்கு அந்தக் கட்டடங்கள் பழுது பட்ட நிலையில் இருக்கின்றன என்ற காரணத்தினால் அங்கே இருக்கக் கூடிய பொருள்களை சத்துணவு மையத்திலே பாதுகாப்பாக வைக்க முடியாத சூழ்நிலை சில இடங்களிலே இருக்கின்ற நேரத்தில் அங்கே இருக்கக் கூடிய ஆசிரியர்கள் அந்தத் தட்டுக்களை எல்லாம் நீங்களே எடுத்துச் சென்று விட்டு வரும் போது கொண்டு வாருங்கள் என்று சொல்கிறார்கள். பல மையங்களிலே இது போன்ற நிகழ்ச்சிகளை நானே நேரில் பார்த்துவிட்டு எந்தக் காரணத்தைக் கொண்டும் குழந்தைகள் கையில் தட்டுகளை கொடுத்து அவைகளை திரும்பக் கொண்டு வரச் சொல்லக் கூடாது. முடிந்தவரையில் அவைகளை நீங்களே பாதுகாப்பாக வைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்ற அறிவுரையை சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இன்றைக்கு தமிழகத்திலே பல சத்துணவுக் கூடங்கள் மிகவும் பழுது பட்டிருக்கின்றன. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நாளில், சத்துணவு மையங்கள் கட்டுவதற்காக மட்டுமே பணம் ஒதுக்கப்பட்டதே அல்லாமல் அதை யார் பராமரிப்பது, அதை பராமரிப்பதற்காக எவ்வளவு தொகை ஒதுக்குவது என்பது போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவில்லை. அதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை. எனவே இன்றைக்கு பொறுப் பேற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசுதான் அதை பற்றியெல்லாம் கவனித்து ஆராய்ந்து அந்த சத்துணவுக் கூடங்களை யார் பராமரிப்பது, அந்தப் பழுதுபட்டவைகளை யார் சரி செய்வது என்பதை போன்ற ஆலோசனைகளையெல்லாம் இன்றைக்கு நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு பல சத்துணவுக் கூடங்கள் பழுது பார்க்கப்பட்டு, எல்லா பொருள்களும் பாதுகாப்பாக அங்கே வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.



திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட நேரத்தில், அன்றைக்கு அமைச்சராக இருந்த ஒரு முக்கிய அமைச்சரோடு நானும் சத்துணவுக்கூடம் ஒன்றை ஆரம்பிக்க போயிருந்தேன். அப்போது சத்துணவு என்ற பெயர் கொடுக்க எது முக்கியமான சத்துணவாக இங்கே கொடுக்கப்படுகிறது என்று நான் கேட்டேன். முக்கியமான சத்துணவு துவரம் பருப்புதான் என்று அப்போது சொன்னார்கள். துவரம் பருப்புதான் சத்து கொடுக்கும் முக்கியமான அம்சம் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது கோழி முட்டையையும் சேர்த்துக் கொடுப்பதால் திட்டவட்டமாக அதிகப்படி சத்துணவை அது கொடுக்கும். ஆனால், இருக்கிற பிரச்சினை என்னவென்றால் இப்படி சத்துள்ள பொருள்களை நாம் கொடுத்தாலும் அந்தப் பொருட்கள் அநேகமாக எல்லாமே திருடப்பட்டுவிடுகின்றன. இதை சொந்த அனுபவத்தின் பேரில் கூறுவதுடன் பலர் இதுபற்றி ரிப்போர்ட்டும் கொடுத்திருக்கிறார்கள். திருட்டைத் தடுக்க, ஒவ்வொரு பள்ளிக்கூட வளாகத்திற்குள்ளேயும் திருட்டு வராமல் தடுக்க பொது ஜன கமிட்டி அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு ஒன்றை உடனடியாக அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிய யோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஏற்கெனவே அமைச்சர்களிடத்தில் எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்குச் செல்லும்போதும் '' சர்பிரைஸ் விசிட் '' என்கிற அடிப்படையில் திடீரென்று சத்துணவுக் கூடங்களுக்குச் சென்று அவை எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்று சோதனையிட வேண்டுமென்று நான் ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். நானே சில இடங்களில் சென்று நடைபெற்ற தவறுகளைக் கண்டு பிடித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல ஆங்காங்கே மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்கள் அமைத்தும் சத்துணவுக் கூடங்களைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யலாம். இந்தக் கூட்டத் தொடர்முடிந்த பிறகு, ஒருங்கிணைந்த திட்டமாக இதனை அமைத்து, இந்தத் திட்டம் செம்மையாக நடைபெற சில வழிவகைகளை இந்த அரசு வகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகிழ்ச்சிகரமான அறிவிப்பைச் செய்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல ஆண்டுகளாகவே, ஊராட்சி, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் கோழிப் பண்ணைகளை வைத்து குழந்தைகளுக்காக அங்கே முட்டைகளை உற்பத்தி செய்து வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்துள்ளேன். மேதகு ஆளுநர் உரையிலும் இதுபற்றி குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் இன்று கோழிப் பண்ணைகளை அமைப்பதை ஏற்று செயல்படுத்த இருக்கிறார்கள். அதைப்போலவே எல்லா இடங்களிலும் கோழிப் பண்ணைகளை வைக்க முடியவில்லையென்றால் சத்துணவுக் கூடங்கள் இருக்கின்ற வசதியான இடங்களில் எல்லாம் மாட்டுப் பண்ணைகளை வைப்பதன் மூலம் பசும்பால், சத்துணவுக் கூடக் குழந்தைகளுக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது போட்டிருக்கிற திட்டத்துடன்கூடவே வசதியுள்ள இடங்களில் மாட்டுப்பண்ணைகளையும் அமைத்து, பால் கொடுப்பதன் மூலம் குழந்தைகளுக்கு இன்னும் அதிகப்படியான ஊட்டச் சத்துள்ள உணவு கிடைத்திட வேண்டுமென்ற நல்ல பண்பின் அடிப்படையில் வாரம் ஒரு முட்டை என்பதற்குப் பதில் மேலும் ஊட்டச்சத்து கொடுக்க வாய்ப்பு கிடைக்கும். அந்த வகையில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு சத்துணவுடன் முட்டை, பருப்பு, காய்கறியுடன் பாலும் சேர்த்து ஒருங்கிணைந்த சத்துணவு கிடைக்கும். அதற்கு ஏற்ற வகையில் திட்டம் வகுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னவை ஏற்கப்பட வேண்டிய கருத்துக்கள்தான். கோழிப்பண்ணைகளை அமைக்க வேண்டுமென்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டதாகவும், அதனை ஏற்று இப்போது அறிவிப்பு வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதுபோல இப்போது மேலும் ஒரு திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அடுத்த முறை அது பற்றி அறிவிப்போம்.

**டாக்டர் த. சாந்தகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்குச் சத்துணவுக் கூடங்களில் சோப்பு, தலைக்கு எண்ணெய் போன்றவை வழங்கப்படுகின்றனவா ? அப்படி வழங்கப்பட்டால் அதன் அளவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட பொருள்கள் எல்லாம் வழங்கப்படுவதில்லை.

**திரு. ஆ. பாலையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு காய் கறிகள் வழங்க காய்கறி கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்தக் காய்கறி கூட்டுறவுச் சங்கங்களிலிருந்துதான் சத்துணவு மையங்களுக்குத் தரமான காய்கறிகளை வாங்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், கூட்டுறவுச் சங்கங்களில் தரமான காய்கறிகள் கிடையாது. பல நாட்கள் ஆன காய்கறிகள் அங்கே கொடுக்கப்படுகிறது. ஆகவே, சத்துணவுத் திட்டத்திற்கு அந்த காய்கறிகள் ஒத்து வராத காரணத்தால் காய்கறி கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வாங்கப்படுவதைத் தவிர்த்து வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்குவதற்கு அனுமதி வழங்கப்படுமா ?



**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பகுதிகளில் காய்கறி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக காய்கறி வாங்கப்படுகிறது. காய்கறி கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்களில் தனியாரிடமிருந்து, வெளி மார்க்கெட்டிலிருந்தும் வாங்கிக் கொள்ளலாம் என்று ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

(முற்பகல் 9–50)

**திரு. தா. உதயசூரியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு வயது முதல் நான்கு வயதுள்ள சிறார்களுக்கான ஊட்டச் சத்துணவு மையங்கள் பல்வேறு இடங்களில் பெற்றுப்பாளர்களின் இல்லங்களிலேயே நடைபெற்று வருகின்றன. அதனால், பல்வேறு சீர்கேடுகள் நடக்கின்றன. ஆகையால், அரசாங்கம் அதற்காகத் தனிக் கட்டிடம் அமைத்துத் தருமா ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தலைவரவர்களே, முறையான கட்டிடங்கள் இல்லாத பகுதிகளில் தனியார் கட்டிடங்களை அரசாங்கம் வாடகைக்கு எடுத்து, அவற்றில் இந்தக் குழந்தை நல மையங்கள் செயல்படுகின்றன. அப்படிப்பட்ட இடங்களை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி, அரசாங்கமே கட்டிடங்களைக் கட்டி, குழந்தை நல மையங்கள் அரசுக் கட்டிடங்களுக்கு மாற்றும் முயற்சியில் அரசு தற்போது ஈடுபட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. வீரையன் :** தலைவரவர்களே, சத்துணவுத் திட்டத்தில் சத்தான உணவுகளை அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்தார்கள். ஆனால், அந்தச் சத்துணவைத் தயாரிக்கக்கூடிய இடங்கள் மிகவும் பழுதுபட்டிருக்கிறது. எவ்வளவுதான் திட்டங்கள் போட்டு, சத்துணவைத் தயாரித்தாலும், அந்த இடங்கள் சரியாக இல்லாததால் பல்லி விழுந்து விஷ ஜந்துக்கள் விழுந்து சிறார்கள் பாதிக்கப்படுதாகக் கேள்விப்படுகிறோம். அதுவும் பரிசீலிக்கப்படுமென்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில இடங்களில் இத்தகைய சத்துணவுக் கூடங்கள் புதிதாகத் தேவைப்படுகிறது. ஆனால், அப்படி புதிதாக சத்துணவுக் கூடங்கள் அமைக்க தடை விதித்திருப்பதாகக் கூறுகிறார்கள். அதனால், சில பகுதிகளில் குழந்தைகளுக்கு சத்துணவு கிடைக்காத நிலைமை ஏற்படுகிறது. எனவே அந்தத் தடையை நீக்கி, தேவையான இடங்களில் சத்துணவுக் கூடங்கள் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்ற எல்லா ஊர்களிலும் சத்துணவுக் கூடங்கள் முறையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள், குழந்தைகள் நல மையங்கள் தேவை என்று கூறுகிறார் என்று கருதுகிறேன். சில இடங்களில் குழந்தை நல மையங்கள் தேவையென்று வரு

கின்ற விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, சென்ற மாதம்கூட திருச்சி மாவட்டத்தில் 2 இடங்களில் புதிய குழந்தை நல மையங்களைத் தொடங்குவதற்கு அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது எனவே, சத்துணவு மையங்கள், குழந்தைகள் நல மையங்கள் மேற்கொண்டு தொடங்கக்கூடாது என்று அரசு எங்கேயும் தடை விதிக்கவில்லை என்பதைத் தெரிவிதது்க் கொள்கிறேன்.

**திரு. கே. சுந்தர் :** தலைவரவர்களே, ஏற்கெனவே மையங்கள் இல்லாத இடங்களிலே தற்போது சப்-சென்ட்டர்ஸ் அமைக்க ஏதேனும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தலைவரவர்களே, மையங்கள் இல்லாத இடங்களில் எத்தனை குழந்தைகள் பயன்பெற இருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையோடு, அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற சமூக நல அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, அவர்கள் அந்த இடத்தை வந்து பார்வையிட்டு, அங்கே மையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதா என்பது பற்றிய பரிந்துரைகள் அரசாங்கத்திற்கு வருமேயானால் அரசு அந்த இடத்தில் மையங்களை அமைக்க முன்வருமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆர். இராமசாமி :** தலைவரவர்களே, இப்போது சத்துணவுக் கூடங்களிலே முதல்நாள் குழந்தைகளின் பதிவின்படி மறுநாள் உணவு தயாரிக்கப்படுகிறது. இதிலே பல குறைபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக சனிக்கிழமையன்று வரக்கூடிய குழந்தைகள் எண்ணிக்கையின்படி ஞாயிற்றுக்கிழமை உணவு சமைப்பதாகக் கூறுகிறார்கள். அதிலே பல முறைகேடுகள் இருப்பதாக நான் அறிகிறேன். இதை அரசு நிவர்த்தி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தலைவரவர்களே, பள்ளி நடைபெறுகிற நாளில், முதல் நாள் வருகையை ஒட்டி சத்துணவு தயாரிக்கப்படுவதில்லை. பள்ளிக்கூடங்களுக்குக் குழந்தைகள் வந்த பிறகு , வகுப்பறைகளில் பதிவேடுகள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகுதான் வந்திருக்கிற குழந்தைகளின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து, உணவுப் பொருள்கள் எடுத்து, சமைப்பதற்கு வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இன்னொரு கருத்து, விடுமுறை நாளில் முறைகேடு நடப்பதாகச் சொன்னார்கள். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். பல இடங்களில் விடுமுறை நாட்களில் நான் திடீரென்று சோதனையிட்ட நேரத்தில், அவர்கள் பதிவேட்டில் குறித்திருக்கிற எண்ணிக்கை 100 ஆக இருந்தால், அங்கே பயன்பெறுகிற குழந்தைகளினுடைய எண்ணிக்கை 50 ஆக இருக்கிறது. நான் சென்ற இடங்களில் எல்லாம் இந்தக் குறைபாட்டைச் சுட்டிக்காட்டி என்னோடு அந்த மையங்களுக்கு வந்த





உயர் அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டி, அப்படிப்பட்ட தவறுகள் மேற்கொண்டு நடைபெறாவண்ணம் நீங்கள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். இந்த அவையிலே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து , விடுமுறை நாளில் இந்தத் திட்டத்தைநிறுத்திக்கொண்டு இதனால் மிச்சப்படுகின்ற அந்தப் பணத்தைக் கொண்டு, பள்ளி நாட்களில் தரப்படுகின்ற உணவில் இன்னும் சற்று அதிகப்படியான சத்துள்ள உணவை சேர்க்க நீங்கள் எல்லோரும் முன் வந்து ஆலோசனை தந்தால், அதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, செயல்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களிலே கோழி முட்டை வழங்குவதற்காக ஊராட்சி மன்றங்கள் மூலமாக கோழி வளர்ப்பதற்கு திட்டமிடப்படுவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தத் திட்டம் வரவேற்கக் கூடியது தான். அப்படியானால் ஊராட்சி மன்றங்களிலே கோழி வளர்ப்பதற்காக, அரசாங்கத்திலிருந்து ஊராட்சிகளுக்கு நிதி வழங்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்துள்ள திட்டத்தை அடிப்படையாக வைத்து, அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ அவையனைத்தும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதையொட்டி — மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் — ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு போன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. அதைப்போலவே, இதுவும் ஒரு நல்ல திட்டம் என்ற வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அறிவித்திருக்கிற காரணத்தால், கூட்டுறச்வு சங்கங்கள் மூலமாகக் கோழி வளர்ப்பதற்கும் நிதி ஒதுக்குவதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். முத்துதயன்** மாண்புமிகு பேர்வைத் தலைவர் அவர்களே, என்னுடைய தாகுதியிலே கல்ராயன்மலைப்பகுதி —மேல இருப்பதால் — அங்கே சரியான ரோடு வசதியில்லை. அங்கெல்லாம் கூட 60, 70 சத்துணவுக் கூட மையங்கள் இருப்தாகச் சொல்கிறார்கள். எல்லாம் ரிக்கார்டுகளில்தான் இருக்கின்றன. நானே 5 தடவைப் போனேன். அங்கே அட்கள் போய் பிள்ளைகளுக்கு, சோறு போட்டதாகத் தெரியவில்லை. காரணம் போவதற்கு வழியே இல்லை என்கிறார்கள். கேட்டால் சரக்குத் தூக்கிக்கொண்டு போக முடியவில்லை— ரோடு

இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அவைகளையெல்லாம் ஒழித்துக்கட்டினாலும் ஒழித்துக் கட்டிவிடுங்கள். போட்டால், நியாயமாகப் பார்த்துப் போடுங்கள். எனவே அந்தப் பகுதியிலே ரோடு போட்டுத் தருவதற்கு தகுந்த ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சத்துணவுக் கூடங்களுக்கு முறையாக உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்படுவதற்கான வழிவகைகளை, அரசு நிச்சயமாக மேற்கொள்ளும். இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர், மாண்புமிகு உறுப்பினரை அழைத்துச் சென்று அந்தப் பகுதியைப் பார்வையிட்டு, குறைபாடுகளை நேரில் கவனித்து, அவற்றைத் தீர்க்க ஆவன செய்வேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெறுகிற சத்துணவுக் கூடங்களை, அமைச்சர்களும் இன்னும் அதிகாரிகளும் பார்வையிடுவதாகச் சொன்னார்கள். சில இடங்களில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சத்துணவுக் கூடங்களைப் பார்வையிடுகிற நிலை இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். அப்படி இருந்தால் அது சில சிக்கல்களை ஏற்படுத்துமே. ஆகவே, இதைக் கண்காணிக்க, சர்வ கட்சிக் குழு ஒன்று என்ற வகையில் அந்த வட்டாரத்தில் உள்ளவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்துப் பார்வையிட்டால் எந்த விதமான முறைகேடுகளும் நடக்காமல் சீராக நடைபெறுவதற்கு உதவிடும் என்பதால் அப்படிப்பட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர்களும் மற்றும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் மாத்திரமல்ல, எல்லாக் கட்சியைச் சார்ந்த எம்.எல்.ஏ.-க்களும் சத்துணவுக் கூடங்களைப் பார்வையிட்டு, அவை எப்படி நடக்கின்றன என்பதை அறிந்து, அதுகுறித்து புகார்களை மேலே உள்ளவர்களுக்கு அனுப்புவது, சத்துணவுக் கூடங்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கு வழி வகுக்கும் என்ற கருத்தில்தான் சொல்லப்பட்டது. அப்படி கட்சி சார்பற்ற முறையில் குழுக்கள் அமைத்து, சத்துணவுக் கூடங்களைப் பராமரிப்பதும், அவற்றை மேற்பார்வை இடுவதும் தவறுகள் நடக்காமல், தடுப்பதற்குமான காரியங்களில் ஈடுபடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். குழந்தைகளுக்கு கோழிமுட்டை வழங்குவதுபற்றியும் சொன்னதில் சிலருக்குக் குழப்பம் ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். இனிமேல் கோழிப்பண்ணை வைத்து அதற்குப் பிறகுதான் கோழி முட்டை தரப்படும் என்று சொன்னதாக யாரும் கருதத் தேவையில்லை. வாரம் ஒரு முறை போடுவதாக ஆருந்தால், அது கோழிப்பண்ணை வைத்த பிறகு. இப்போது ஜூன்





3-ம் தேதியிலிருந்து 15 நாளைக்கு ஒரு முறை கோழிமுட்டை வழங்கப்படும். அதற்குப் பிறகு கோழிப்பண்ணை வைத்து வாரத்திற்கு ஒரு கோழிமுட்டை என்று வழங்கப்படும்.

(முற்பகல் 10-00)

### 10,000 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைத்தல்

18 —(—வினா எண். 214) திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 10,000 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு தலைவரவர்களே, கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. ஆனால் மருத்துவமனைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளன? எனவே கிராமங்களில் மருத்துவ மனைகள் அதிகரிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்தில் மொத்தம் 152 லட்சம் கால் நடைகள் இருக்கின்றன. சுமார் 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்கப்பட வேண்டுமென்று தேசிய வேளாண்மைக் குழு பரிந்துரை செய்துள்ளது. தற்சமயம் தமிழகத்தில் 806 கால்நடை மருந்தகங்கள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைப்பதுபற்றி 1990-ம் ஆண்டுக்குள்ளாக கால் நடை மருந்தகங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பது தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரை. தற்போதைய நிதிநிலை காரணமாக, தற்சமயம் அந்தப் பரிந்துரையை செயல்படுத்த இயலாத நிலையில் அரசு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு தலைவரவர்களே, கால்நடை ஆய்வாளர்கள் பணியாற்றும் துணை மருத்துவ நிலையங்களில் அனைத்து மருத்துவ வசதிகளும் செய்யும் வகையில் அந்த மருத்துவமனைகளை அரசு மாற்றி அமைக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, கால்நடை ஆய்வாளர்கள் முதலுதவிச் சிகிச்சை அளிப்பதற்காக கால்நடை கிளை நிலையங்களில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய பணி முதலுதவிச் சிகிச்சை அளிப்பதும், கிராமங்களுக்குச் சென்று கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய, அத்துறையினுடைய செயல்களையும், பணிகளையும் அவர்களுக்கு விளக்கிக் கூறுவது மட்டுமே. 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்பது அரசினுடைய கோள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. தற்போதைய நிதிநிலை காரணமாக, அவை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அரசினுடைய கொள்கை, 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்தி தருவது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) எதிர்க்கட்சித் தலைவர்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவது பற்றி சென்னை நகரக் காவல்துறை ஆணையர் தெரிவித்துள்ள கருத்து

***திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்கு ஒரு தகவலைக் கொண்டுவந்து அவர்கள் மூலம் ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். சட்டமன்றத்திலே 29-ம் தேதி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசுகிறபோது, '' எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற செல்வி ஜெயலலிதா அவர்கள் மீது வழக்கு வந்திருக்கிறது என்று எனக்கு தெரிந்த உடனேயே நான் கமிஷனருக்கு தகவல்சொல்லிஅந்த வழக்குத் தொடரப்பட வேண்டாமென்று உத்திரவிட்டேன் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 29-ம்தேதி தெரிவித்த அந்தச் செய்தி, வழக்குகள் வாபஸ் என்ற தலைப்பிலே அடுத்த நாள் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. ஆனால் நேற்று 30-ம் தேதி போலீஸ் கமிஷனர் வெளியே பத்திரிக்கைகளுக்கு பேட்டி கொடுத்த செய்தி எல்லாப் பத்திரிக்கைகளிலும், ''அப்படி எந்த உத்திரவும் அரசிடமிருந்து எனக்கு வரவில்லை; போடப்பட்ட வழக்கு அப்படியே இருக்கிறது; விசாரணை நடக்கிறது'' என்று சொல்லி, கமிஷனர் சொன்ன பேட்டி நேற்றுப் பத்திரிக்கைகளிலே வந்திருக்கிறது. சட்டமன்ற மரபுகளின்படி கூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதற்கு முன்னாலே தான்சொன்ன



படி ஒருவேளை கமிஷனருக்குத் தகவல் சொல்லாமல் இருந்தால் கூட, சட்டமன்றத்திலே அறிவித்ததை வைத்துக்கொண்டு கூட, கமிஷனர் அதையே ஆணையாக ஏற்றுக்கொண்டு, முதலமைச்சரவர்களே, சட்டமன்றத்தில் அறிவித்த காரணத்தாலே, நேற்று பத்திரிக்கைகளுக்குச் சொல்லும்போது, முதலமைச்சரவர்கள் வாய் மூலமாகச் சொன்னாலும் சரிதான் அல்லது சட்டமன்றத்திலே அறிவித்தாலும்சரிதான், அது ஆணைதான். எனவே அதை எடுத்துக்கொண்டு வழக்குகள் திரும்பப் பெறப்பெற்றுவிட்டன என்று முதலமைச்சரவர்களே சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள் என்று சொல்லவேண்டிய கமிஷனர், ''இல்லை, இல்லை எனக்கு அப்படி உத்திரவு எதுவும் தமிழக அரசு அனுப்பவில்லை; வழக்கு அப்படியே இருக்கிறது'' என்று வெளியே சொல்லியிருக்கிறார். எனவே கமிஷனர் துரை, ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் மேலே, முதலமைச்சரவர்களுடைய அனுமதி பெறாமல், அரசினுடைய அனுமதி பெறாமல் வழக்குத் தொடர்ந்ததே தவறு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவருடைய பெயரைச் சொல்லாமல், பதவியை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** அதற்கு அடுத்து, முதலமைச்சரவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்ததற்குப் பின்னாலேயே வழக்கு அப்படியே இருக்கிறது என்று சொல்லியிருப்பது அதை விடத் தவறு. இப்படித் தொடர்ந்து தவறு செய்கிற கமிஷனர் மீது முதலமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இது ஒன்று.

சட்டமன்றத்திலே ஒரு சுமுகமான நிலை ஏற்படவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மற்றவர்களும் சொன்னதையொட்டி நாங்களும் நேற்று விவாதத்திலே கலந்து கொண்டோம். இப்படி உள்ளே வன்முறை ஏற்பட்டது, தகராறு ஏற்பட்டது, இப்போது ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுகின்ற ஒரு வாய்ப்பு, ஏற்பட்டதற்குப் பின்னாலேயும், சட்டமன்றத்திற்குள்ளே இருக்கிற இந்தச் சூழ்நிலை வெளியே இல்லாமல் இருக்கிறது என்பதை நான் முதலமைச்சரவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னும் பிரிவின்டிவ் அரெஸ்ட் என்கிற பெயராலே இன்னும் பலபேர் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகிறார்கள். முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்களுடைய வீட்டிலே இப்பொழுது இருக்கிற உயிரோடு இருக்கிற முன்னாள் முதலமைச்சர் ஜானகி அம்மையார் வீட்டிலேகூட காவல்துறையினர் சென்று மூர்த்தி என்பவரைக் கைது செய்து உள்ளனர். வெளியிலேயும் கைது தொடர்கிறது.

நான் முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சம்பவங்கள் சட்டமன்றத்திலே நடந்த இந்தப் பதட்ட நிலையையொட்டித்தான், அது திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களாக இருந்தாலும் சரி, அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களாக இருந்தாலும் சரி, பத்திரிகையிலே வந்த செய்திகள், இரண்டு தரப்புச் செய்திகளையும் பார்த்தவுடனே தொண்டர்கள் கொதிப்படைந்து வன்முறையிலே ஈடுபட்டிருக்கலாம்.

ஆனால், நாம் ராசியாக, அமைதியாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். நமக்காக சண்டை போட்ட தொண்டர்கள் ஜெயிலுக்குள்ளே, அது திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களாக இருந்தாலும் சரி, அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களாக இருந்தாலும் சரி, இரண்டு பேரும் ஜெயிலுக்குள்ளே பல்வேறு செக்ஷன்களிலே வழக்குப் போடப்பட்டு, அடைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, நான் முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அது திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களாக இருந்தாலும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களாக இருந்தாலும் சரி, அந்த வழக்குகளை அரசு திரும்பப் பெறுவதற்கு—அதற்கு அதிகாரம் இருக்கிறது—அந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அவர்கள் பிரிவின்டிவ் அரெஸ்டிலே கைது செய்யப்பட்டிருந்தாலும் சரி அல்லது வழக்குகளை ஒட்டி கைது செய்யப்பட்டிருந்தாலும் சரி, அப்படி கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்தக் கைதுகள் தொடராமல் இருக்க மாண்புமிகு முதலமைச்சரவர்கள் காவல் துறைக்கு ஆணையிட வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். இதை அடுத்து...............

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை மாநகரப் போலீஸ் ஆணையர் அவர்கள் பத்திரிகைக்குத் தந்துள்ள ஒரு செய்தி குறித்து எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நானும் அந்தச் செய்தியை நேற்று மாலை அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு பத்திரிகை நிருபர்களைச் சந்தித்த பொழுது, அவர்கள் சொன்ன பிறகுதான் அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்துப் பார்த்துத் தெரிந்துகொண்டேன்.

பொதுவாக, பத்திரிகைகளில் பரப்ரப்பாகச் சில செய்திகள் வெளியிடப்பட்டு விடுகின்றன. குறிப்பாக ஏற்கனவே செல்வி ஜெயலலிதா கைது செய்யப்படுவாரா என்று போலீஸ் கமிஷனரை நிருபர்கள் கேட்க அவர் புலன் விசாரித்துக்கொண்டிருக்கிறோம், அதைத் தவிர வேறு எதுவும் சொல்ல இயலாது என்று சொன்னபோது, பத்திரிகைகளிலே பெரிய தலைப்பில் செல்வி ஜெயலலிதா கைது செய்யப்படுவார் என்று அச்சடித்து கடைகளில் ஒட்டப்படுகின்ற விளம்பர வால்போஸ்டர்களிலே அதைப் போட்டுவிட்டார்கள். இவைகளெல்லாம் பரபரப்பான செய்திகள், பத்திரிகை விற்பனைக்காக வெளியிடப்படுகிற செய்திகள் என்பது எனக்கும் தெரியும்; பத்திரிகைத் துறை அனுபவம் அதிகம் இல்லாவிட்டாலும், கொஞ்ச நாள் பத்திரிகை நடத்திய வர் என்ற முறையிலே எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவரவர்களுக்கும் அது நன்றாகத் தெரியும்.





144357

நான் அவைகளையெல்லாம் இப்பொழுது மறந்துவிட்டு, நேற்றையதினம் வந்த செய்தியைப்பற்றி எதிர்க்கட்சித் துணைத் தலைவர்குறிப்பிட்டதை நான்இங்கே விவரிக்கவேண்டுமேயானால், அவரிடத்திலே கேட்கப்பட்ட கேள்வி, அந்த வழக்கை வாபஸ் வாங்க வேண்டுமென்று அரசாங்கத்தின் சார்பிலே உங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறதா என்று கேட்டபொழுது, எப்பொழுதும் போலீஸ்காரர்கள் டெக்னிக்கலாகத்தான் பதில் சொல்வார்கள். எழுத்து மூலமாக உத்தரவு வரவில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லியிருக்கலாம், முதலமைச்சர் இப்படிச் சொல்லியிருக்கிறார், அதனால் நாங்கள் அதைப்பற்றி மீண்டும் அக்கறை கொண்டு விசாரிக்கப் போவதில்லை என்று அவர் கூறியிருக்கலாம். எழுத்து மூலமாக உத்தரவு வரவில்லை என்பதை டெக்னிக்கலாக, வரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் அதற்கிடையில், அவருக்கே தெரியும், நம்முடைய அருமை நண்பர் திரு. எஸ். டி.சோமசுந்தரம் அவர்கள், வழக்கை ஒன்றும் வாபஸ் வாங்கத்தேவையில்லை, வழக்கு நடைபெறட்டும் என்று அவர் சொன்னார். நான் அதை ஒருசவாலாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சொல்லிவிட்டார், ஆகவே வழக்கை நடத்தித்தான் தீருவேன் என்று நான் சொல்லவில்லை. அதுவும் அவருக்குத் தெரியும். எனவே, நான் இப்பொழுதும் சொல்கிறேன். ஒரு ஐந்தாறு பேர் மீது புகார் கொடுக்கப்பட்டால்—எல்லோர் மீதும் புகார் கொடுத்துவிடலாம். புகார் கொடுக்கப்பட்டவர்களையெல்லாம் விசாரிக்க வேண்டுமென்றில்லை. போலீஸ்காரர்களுக்கு, யார் யார் தவறு செய்திருக்கக்கூடும் என்று தெரிகின்ற ஒரு யூகத்தின்மீது அவர்களைத்தான் விசாரிக்க வேண்டும்.

எதிர்க்கட்சியிலே, முக்கியமாக இருக்கின்ற ஒருவர் மீது திடீரென்று இப்படிப்பட்ட பெரிய செக்ஷன்களையெல்லாம் போட்டு விசாரிக்க வேண்டிய அவசியமில்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

கடந்த காலத்திலே அதெல்லாம் நடைபெற்றிருக்கிறது. என் மீதே கூட நடைபெற்றிருக்கிறது. 302, 307 எல்லாம் கூட என்மீது போடப்பட்டிருக்கிறது. நான் அவைகளைச் சொல்கிற காரணத்தால் அதற்காகத்தான் இது என்று சொல்ல மாட்டேன் அப்படிப் போடப்பட்டிருந்தாலும் இப்பொழுது நாங்கள் அப்படிப் போட மாட்டோம். அப்படியெல்லாம் யாரையும் பழி வாங்க முன் வர மாட்டோம் என்பதுதான் என்னுடைய கருத்து. அன்றைக்குச் சொன்ன அந்தக் கருத்து அப்படியே இருக்கிறது. அதில் மாற்றம் இல்லை. எனவே, எதிர்கட்சித் துணைத் தலைவர் சந்தேகப்படத் தேவையில்லை. D



V211, 31/N89
N89.6.3

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மார்ச் 31

எனவே, அவர் எழுப்பியிருந்த பிரச்சினை, போலீஸ் கமிஷனர்
இப்படி ஒரு அறிக்கை கொடுக்கலாமா என்பது. அது குறித்து
நிச்சயமாக அவரிடத்திலே விளக்கம் கேட்கப்படும் என்ற உறுதி
யை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

அடுத்து (குறுக்கீடு), அவர் இரண்டு மூன்று அடுத்து என்று
சொல்லியிருக்கிறார்(குறுக்கீடு)நீங்கள்அதற்குள் எழுந்திருந்தால்..
அடுத்து சில பேர் கைது செய்யப்பட்டிருப்பதைப் பற்றி எதிர்க்
கட்சித துணைத் தலைவர் குறிப்பிட்டார்கள். வன்முறையில் ஈடு
பட்டவர்கள், குறிப்பாக கொடும்பாவி கொளுத்தியவர்கள்,
என்னுடைய கொடும்பாவி கொளுத்தப்பட்டிருக்கிறது. அதைப்
போல எதிர்க் கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்க
ளுடைய கொடும்பாவி கொளுத்தப்பட்டிருக்கிறது. பதிலுக்கு
பதில் இவைகள் எல்லாம் நடைபெற்று இருக்கின்றன. இதிலே
கலந்து கொண்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்
வர்கள் கூட, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட
இதிலே கலந்து கொண்டு, இந்த காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்
கள். முன்கூட்டிச் சிலபேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.
இது கடந்த காலத்தில் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்து
கிட்டத்தட்ட 40 ஆண்டுக் காலத்தில், காங்கிரஸ் ஆட்சி நடை
பெற்று போதும் சரி, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்ற கழக
ஆட்சி, மீண்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி
நடைபெற்ற எந்தக் காலக் கட்டத்திலும், முன்கூட்டி கைது
செய்யப்படுவது என்பது ஒரு முறையாக இருந்து வருகிறது.
ஏனென்றால் அதிக அசம்பாவிதங்கள். வன்முறைகள், ரகளைகள்
அமளிகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக முன்கூட்டி கைது
செய்யப்படுகிற நிலைமை இருந்து வருகிறது. அதன்படி
முன்கூட்டி யார் கைது செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் எல்
லாம், அவர்கள் அ.தி.மு.க. வாக இருந்தாலும், தி. மு. க.வாக
இருந்தாலும் விடுதலை செய்யப்படுவார்கள். விடுதலை செய்ய
வேண்டுமென்று நான் இன்று காலையிலே போலீஸ் அதிகாரி
களுக்குக் கூறியிருக்கிறேன். அதைப்போலவே குறிப்பிடப்பட்ட
வன்முறை வழக்குகளில் யராவது சம்பந்தப்பட்டிருந்தால் மாத்
திரமே அதுபற்றி நடவடிக்கையெடுக்கப்படுமேயல்லாமல்
முன்கூட்டி கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுவி
படுவார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) சென்னை கிரிக்கெட் கிளப்பில் வேட்டி கட்டிச் சென்றவர்களுக்கு அனுமதி மறுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையினுடைய
நான்கு உறுப்பினர்களுக்கு சில பிரச்சினைகளை எழுப்புவதற்கு
நான் முன்கூட்டியே இசைவு வழங்கியிருக்கிறேன். அவர்கள்
தொடர்ச்சியாக அவற்றை எழுப்புவார்கள்.



1989 மார்ச் 31]

***திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழகத்திற்கே களங்கம் கற்பிக்கும் வகை
யில் ஒரு முக்கியமான பிரச்சினை இன்றைக்கு எழுந்திருக்கிறது.
சென்னையில் இருக்கக் கூடிய Madras Cricket Club (MCC) என்று
சொல்லக் கூடிய சேப்பாக்கத்தில் இருக்கும் கிரிக்கெட் கிளப்பில்
வேட்டி கட்டிக் கொண்டு போனதற்காக முன்னாள் உச்ச நீதி
மன்ற நீதிபதியும், கேரள மாநிலத்தின் முன்னாள்
சட்டத் துறை அமைச்சரும், இந்த நாட்டிலே இருக்கிற Leading
Citezen என்று சொல்வார்களே அப்படிப்பட்ட மிகச்சிறந்த ஒரு
குடிமகனுமான திரு. ஆர். வி. கிருஷ்ண ஐயர் அவர்களுக்கு
அனுமதி மறுத்திருக்கிறார்கள். இந்த நாட்டினுடைய தேசிய
உடை வேட்டி என்பது எல்லோருக்கும் தெரியும். சுதந்திரம்
பெறுவதற்கு முன்னால் வெள்ளைக் காரர்கள் காலத்தில் வேட்டி
கட்டிக்கொண்டு போகிறவர்களை அனுமதிப்பது இல்லை. சுதேசி
இயக்கத்தைச் சார்ந்தவர்களை அனுமதிப்பது இல்லையென்ற
வழக்கம் இருந்தது. சுதந்திரம் பெற்று 41 ஆண்டுகள் முடிந்த
பின்னாலும், சுதந்திர இந்தியாவில் இப்படி வேட்டி கட்டிக்
கொண்டு போகிறவர்களுக்கு, இதுபோன்று கிளப்பில், இது
போன்ற அமைப்புகளில் அனுமதி இல்லையென்று சொல்வது
வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதாகும். காந்தி அடிகள்
இந்த நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தருகிறபொழுது அரை
வேட்டியை கட்டிக்கொண்டு தான் இந்த நாட்டிற்கு சுதந்திரத்
தைப் பெற்றுத் தந்தார்கள். சுதேசி இயக்கத்தினுடைய ஆயுத
மாகவே அது இருந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இது
போன்ற அமைப்புகள், கிளப்புகள் இப்படி நடந்து கொள்வார்
களானால் அவர்களுடைய வழிமுறைகளை ஆராய்ந்து பார்த்து,
அவர்களுடைய லைசென்சை கூட ரத்து செய்ய வேண்டுமென்று
இந்த அவையிலே நான் கேட்டுக் கொள்கிறேன். இது முக்கிய
மான விஷயம். அன்றைக்கு அவர்கள் சொல்கிறபோது கூட
சொல்லியிருக்கிறார்கள். 'Swaraj, alas has been halted at the gates
of the MCC. Even if I am not fed at the dinner here, I walk back as a
proud Indian with Nationalism as a non-negotiable value, என்று
மிக வருத்தத்தோடு அதே நேரத்தில் Nationalism as a non-nego-
tiable value' என்கிற அளவிலே சொல்லியிருக்கிறார்கள் அவர்களுக்கு
அது வேண்டுமானால் பெருமை தரலாம். ஆனால்,
தமிழகத்திற்கு அதுவும் தமிழ் நாட்டினுடைய தலைநகரில் இப்
படிப்பட்ட நிகழ்ச்சி நடப்பது மிகவும் துரதிருஷ்டவசமானது.
கண்டிக்கத்தக்கது. இதை உடனடியாக தடுத்து நிறுத்த
வேண்டும். அதற்கு அரசு வேண்டிய முயற்சிகளை எடுக்க
வேண்டும். இல்லையென்று சொன்னால் எங்களைப் போன்ற
வர்கள் இதற்காக போராட வேண்டிய சூழ்நிலை வரும் என்பதை
இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே இந்தியத் திருநாட்டிற்கு
அதைப்போல தமிழ்நாட்டிற்கு என்று சில கலாச்சாரங்கள் உண்டு.
நான் நம்முடைய உறுப்பினர் திரு. பொன். விஜயராகவன்
அவர்கள் எழுப்பிய பிரச்சினையை இன்று கூர்ந்து நோக்கிய

போது ஒன்று நினைவிற்கு வந்தது. ஒரு பத்து, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாட்டிலிருந்து வந்த சில சுற்றுலாப் பயணிகள் அப்போது முதலமைச்சராக இருந்த என்னைச் சந்திக்க என்னுடைய இல்லத்திற்கு வந்தார்கள். அப்படி வந்தபோது அவர்கள் என்னிடத்தில் சொன்ன முக்கியமான குறைபாடே நாங்கள் இந்தியாவை காணவருவதும், தமிழ்நாட்டைக் காண வருவதும், எங்களுடைய நாட்டிற்கும் உங்களுடைய நாட்டிற்கும் இருக்கிற கலாச்சார வேறுபாடு எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளத்தான் வருகிறோம். நாங்கள் இங்கே வந்தால் எல்லோரும் இங்கே கோட்டு, சூட்டோடு இருக்கிறார்கள். இதிலே என்ன வேறுபாடு இருக்கிறது. எங்களைப்போல உடையணிந்து அவர்கள் எங்களை காப்பி அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வேதனையோடு குறிப்பிட்டார்கள்.

எனவே தமிழ்நாட்டில் வேட்டி கட்டுவது என்பது நம்முடைய ஆடையைப் பொறுத்தவரையில் ஒரு கலாச்சார பண்பாடாகும். அந்தக் கலாச்சாரப் பண்பாட்டிற்கு, நம்முடைய உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் குறிப்பிட்ட அந்த விடுதியிலே இடம் இல்லை என்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகும். ஆனால் அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப்பற்றி எல்லாம் சட்டப்பிரச்சினைகளை ஆராய்ந்த பிறகுதான் நாம் அதுகுறித்து யோசித்து முடிவு எடுக்க முடியும். திடீரென்று இந்த அவையிலே எதையும் அறிவித்துவிட முடியாது. இருந்தாலும் நான் அவர்களுக்கு உறுதி கூறிக் கொள்கிறேன், தமிழ்ப் பண்பாடு எங்கெங்கே கேவலப்படுத்தப்பட்டாலும் அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது, பொறுத்துக்கொள்ளாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (இ) உறுப்பினர் திரு. கே. அர்ஜுனனின் இல்லம் தாக்கப்பட்டது குறித்து

**திரு. கே. அர்ஜுனன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 25–3–1989 ஆம் தேதி இந்தச் சட்டப் பேரவையிலே நிகழ்ந்த நிகழ்ச்சியையொட்டி, அன்றைய தினம் மாலையில் என்னுடைய வீடும் காரும் கடுமையாகத் தாக்கப்பட்டு, சேதமுற்று இருக்கிறது. என்னுடைய வீடு மட்டுமல்லாமல்,

** ** **

இவைகள் எல்லாம் தாக்கப்படுவதற்கு முழுமையாக நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. 4801 என்ற வனில்

** ** **

காவல்துறையும் ஆங்காங்கு பந்தோபஸ்து போட்டிருக்கிறது. காவல் துறை அதைத் தடுக்கக் கூடிய அளவிற்கு இல்லாமல், காவல் துறையினர் செயலிழந்து நிற்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



கொண்டலாம்பட்டியில் நூற்றுக்கணக்கான,—அது நேஷனல் ஹைவேஸ் ரோடு,—வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.

** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே வந்து கேட்டபோது, தன்னுடைய உறுப்பினர் பதவிக்கு இழுக்குத் தேடப்படுகிறது என்றும் தனக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். ஓர் உறுப்பினர் என்ற முறையில் அவருடைய பாதிப்பைக் கண்டிப்பாக இந்த அவையில் சொல்ல வேண்டும், அதுதான் அவர் கடமை, அதற்குத் தக்க பாதுகாப்புத் தர வேண்டியது என்னுடைய கடமை என்று சொன்னேன். எனவே அருள் கூர்ந்து, உறுப்பினர் அவர்கள், அவரைப் பற்றித் தொடர்புடைய செய்திகளை மட்டும் சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

**திரு. கே. அர்ஜுனன் :** தலைவர் அவர்களே அதைச் சொல்வதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். அங்கே வந்திருப்பவர்கள் அந்த மாவட்டத்திலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்கள், கடைசித் தொண்டன் வரையில் எனக்குத் தெரியாமல் இருந்தாலும், என்னுடைய மனைவிக்குத் தெரியும், எனவேதான் அங்கே வந்திருப்பவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், அடையாளம் தெரிந்தவர்கள் யாரும் வரவில்லை. அதனால்தான் என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது புதிதாக உருவாகியிருக்கிற சாராய சாம்ராஜ்ய அதிபதிகள், சந்து கடைக்காரர்களுக்கு, இங்கேயிருந்து, சென்னையிலே யிருந்து தகவல் செல்கிறது. அடித்து நொறுக்கு என்று. அவர்கள் இங்கேயிருந்து, யாரிடத்திலேயிருந்து தகவல் செல்கிறதோ, அவர்களிடத்திலே நல்ல பெயரை வாங்க வேண்டுடும் என்பதற்காக அந்த வேனில் பவனி வந்து, என்னுடைய வீட்டைத் தாக்கியிருக்கிறார்கள். பெண்டு பிள்ளைகள் அலங்கோலமாகக் கூடிய அளவிற்கு, அவர்கள் அலரக் கூடிய அளவிற்கு நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஜன்னல்கள் எல்லாம் உடைக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய கார் நொறுக்கப்பட்டதற்கும், வீடு தாக்கப்பட்டதற்கும் உண்டான போட்டோக்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன. அவைகளை நான் தங்களிடத்திலே சமர்ப்பிக்கிறேன்.

*(போட்டோக்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அளிக்கப்பட்டன).*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

[திரு. கே. அர்ஜுனன்] [1989 மார்ச் 31

இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதற்கு நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். இதைக் கூட இந்த அவையிலே தெரியப் படுத்த வேண்டியதில்லை என்று நான் கருதினேன். என்னுடைய மனைவி பேசுகிறபோது, இந்தக் காரை வைத்துக் கொண்டு எந்த நேரத்திலாவது ஒரு நாளைக்கு சினிமாவிற்குக் கொண்டு போய் இருக்க மாட்டீர்கள் என்றாள். ஆனால் உங்களுடைய கட்சிக்காரர்களை அழைத்துக் கொண்டு தானே முழுமையாக இந்த 4 ஆண்டுகளிலும், இந்தக் காரை வாங்கிப் பயன்படுத்தினீர்கள் என்றும், எத்தனை பேருக்கு என் கைப்பட உங்கள் கட்சிக்காரர்களுக்கு சமைத்துப் போட்டிருப்பேன்? இன்றைக்கு எனக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏன் என்று வேதனையோடு அழுகிறபோதுதான் உள்ளபடியே எனக்குப் பாதுகாப்பைக் கொடுங்கள் என்று கூறினேன். இவன் வந்தவுடன் நான் கொலை செய்கிறேன் என்று என் மனைவியிடம் சொல்கிறபோது, தான் அவள் கலங்குகிறபோதுதான் எனக்கு சங்கடமாக இருக்கிறது. என்னைக் கொலை செய்து விடுவதனால் நான் கவலைப்படப் போவதில்லை. என்னுடைய மனைவியையும், குழந்தைகளையும் காப்பாற்றுவதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். இன்று பொது வாழ்க்கைக்கு வந்த பிறகு அதைப் பற்றி எல்லாம் கிஞ்சித்தும் கூட கவலைப்படுவதாக தயவு செய்து நான் இங்கே தெரிவிக்கவில்லை. ஆனால் நிலைமைகள் இப்படி மாவட்டத்தில் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

கொண்டலாம்பட்டியிலே போலீஸ் சூப்பிரடென்டென்டின் நூற்றுக்கணக்கான கார்கள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நேஷனல் ஹைவேஸ் வாகனங்கள் எல்லாம் நொறுக்கப்பட்டிருக்கின்றன. ** ** **

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தங்களுடைய அறையிலே நண்பர் அர்ஜுனன் அவர்களுடைய வீடு தாக்குப்பட்டது குறித்துப் பாதுகாப்பு வேண்டுமென்று சொல்லப் போகிறார் என்று குறிப்பிட்டீர்கள். அதற்குத் தாங்கள் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னீர்கள். அதை விட்டுவிட்டுக் குற்றச்சாட்டுகளைப் பல பேர் மீது சொன்னால், அவைகளுக்கு என்னால் இங்கே பதில் சொல்வதற்கு நேரமும் இல்லை, அது மாத்திரமல்ல, வாய்ப்பும் இல்லை. யார் மீது குற்றம் சாட்டுகிறாரோ, அந்த அமைச்சரும் இந்த நேரத்தில் இந்த அவையிலே இல்லை. வேண்டுமானால், இன்னொரு நாளைக்கு இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு பேசினால் அமைச்சரும் பதில் சொல்ல முடியும். அவரும் அதற்கு விளக்கம் அளிக்க முடியும். எனவே இது போன்ற பேச்சுக்களை நீடித்துக் கொண்டே போவது நல்லது அல்ல.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1989 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அர்ஜுனன் அவர்கள் பேசிய பேச்சில் அமைச்சரைப் பற்றி உள்ள பகுதியும், மற்ற நேரடியாக குற்றச்சாட்டுகள் உள்ள பகுதிகளும் நீக்கப் பட்டு, அவர் தொடர்பான முழுமையான செய்திகள் மட்டும் இடம் பெறும்.

திரு. கே. அர்ஜுனன்: பேரவைத் தலைவர் அவர்களே, 30 பேர்கள் பயன்படுத்திய வாகனத்தின் எண்ணை, என்னுடைய மனைவியும், மற்ற மக்களும் நேரடியாக அங்கே உள்ள காவல் துறைக்குத் தெரிவித்து இருந்தும் கூட, இன்னும் அந்த வாகனம் கைப்பற்றப்படவில்லை. அங்கே யாரும் கைது செய்யப்படவில்லை. காவல்துறை கைகட்டி வேடிக்கை பார்க்கும் நிலைமை அங்கு தொடர்ந்து இருந்துக் கொண்டிருக்கிறது. இதை விளக்கமாகச் சொல்லவேண்டுமென்று நான் விரும்புகின்ற காரணத்தால் முதல்வர் அவர்கள் இது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இருக்கும் நேரத்தில்தான் குறிப்பிடவேண்டுமென்றால், * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து திரு. அர்ஜுனன் அவர்கள் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே., அர்ஜுனனுடைய பேச்சு முழுவதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி பேச்சு முழுவதையும் நீக்கிவிடாதீர்கள். வேண்டுமானால்., 'ஸ்பெசிபிக்காக' அமைச்சரைப் பற்றியோ, மற்ற பிரச்சினைகள் பற்றியோ, ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் கேட்டது போலவே அந்த மாதிரி போர்ஷனை மட்டும் நீக்கிவிட்டு அவர்கள் பாதிக்கப்பட்டதை மாத்திரம் சொல்ல அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாதிக்கப்பட்டதை நான் சொல்ல வேண்டாம் என்று சொன்னேனா? அவர்களுக்குத் தெளிவாக வாய்ப்பு அளித்து, நீங்கள் பாதிக்கப்பட்டதை இந்த அவையில் சொல்லுங்கள் என்று நான் அனுமதி தந்த பிறகும், அவர் அதை விட்டுவிட்டு, புறம்போய்ப் பேசுவதை நீக்க வேண்டியது பட்டுமல்ல, புறம் போய்ப் பேச வேண்டிய தேவையில்லை என்பதற்காகத்தான் நான் அனுமதி தந்திருக்கிறேன். நான் அனுமதி தந்ததைக் கொச்சைப் படுத்தக் கூடாது என்பதனால், அவருடைய பேச்சை மட்டும் பேசி முடிக்கட்டும். அவருடைய பேச்சில் யாரும் குறுக்கிடவில்லை., எனவே, அவருடைய பேச்சை இத்தோடு முடித்து விட வேண்டும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்று ஏற்கெனவே முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆகிய இரு சாராரும் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டதற்கு முன்பும்கூட, 25 ஆம் தேதி, 18 அல்லது 15 ஆம் தேதி ஆகிய தினங்களில் இந்த நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் முன்புகூட, பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போலீசார் இதில் ஒன்றும் பாரபட்சம் காட்டவில்லை. ஸ்ரீவில்லிப்புத்தூரில் காவல் நிலைய குற்ற எண். 178/89-ன்படி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாணிக்கம் என்ற குட்டி 12-3-1989 அன்று கைது செய்யப்பட்டிருக்கிறார். அருப்புக்கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழக துணைச் செயலாளர் மொஹிதீன், லியாகத் அலிகான், சம்சுதீன், இப்ராஹிம் ஷா போன்றவர்கள் வேறு காரியங்களுக்காக 14-3-1989-ல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது என்னிடம் பெரிய பட்டியல் இருக்கிறது. தி. மு. க. தவறு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று நான் கூறவில்லை. அரசு அப்படிப்பட்ட நிலையிலும் இல்லை. யார் தவறு செய்தாலும் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தான் போலீசாருக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. எந்த ஒரு உறுப்பினருக்கும் அவருடைய உயிருக்கோ, உடமைகளுக்கோ பாதகம் ஏற்படுமானால், நிச்சயமாக அரசு அவருக்குப் பாதுகாப்பு அளிக்கும். குறிப்பிடப்பட்ட அந்தக் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுமேயானால் உடனடியாக அதற்கு ஆவன செய்யப்படும். அதற்காக வேண்டுமென்றே ஒரு அமைச்சர் மீது குற்றம் சாட்டுவது சரியல்ல.

கார் நம்பரைச் சொல்லிவிடுகிற காரணத்தினாலேயே அது உண்மையாகி விடாது. ஏனென்றால் கார் நம்பர் எல்லோருக்கும் தெரியும். என் கார் நம்பர் கூட 6789 என்று எல்லோருக்கும் தெரியும். எனவே 6789 காரிலே வந்து அடித்தார்கள் என்று சொல்வதற்காகச் சொல்லலாம். கார் நம்பர் தருகிற காரணத்தினாலேயே, அந்தக் கார் நம்பரைச் சொல்லி குற்றம் சாட்டுவது முறையல்ல. எனவே அந்தக் குற்றச்சாட்டுகளை நான் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. இருந்தாலும் நண்பர் அர்ஜுனன் அவர்களுடைய வீடு தாக்கப்பட்டது, அல்லது அவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலை இருப்பது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற காரணத்தால் அதற்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன், அவருக்கும் அவருடைய வீட்டிற்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : எனக்கு எந்தப் பாதுகாப்பும் கொடுக்காதீர்கள். ஒன்றும் வேண்டாம். நானே என்னைக் காப்பாற்றிக் கொள்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்தப் பாதுகாப்பும் தேவையில்லை, நானே என்னைக் காப்பாற்றிக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு ஏன் இவ்வளவு நேரம் பாதுகாப்புக் கோரிப் பேசினார்கள் என்று தெரியவில்லை.

## (ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடு). எனக்கு உங்களை மாதிரி நேரம் ஆகாது. தலைவர் அவர்களே, ஏற்கனவே கன்னியாகுமரியில் நடந்த ஒரு விஷயமாக நான் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து அது 3 தடவை தள்ளி வைக்கப்பட்டது. இன்றைக்கும் அந்தத் தீர்மானம் என்ன நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சில மணித்துளிகளிலே அவையிலே எடுக்கப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு பிரச்சினையைப் பற்றி உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை முழுமையாகப் பேச முடியாமல் பாதியிலேயே இடைமறிக்கப்பட்டால் ஒரு பகுதிதான் பேசியது போல் வரும்... . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இது குறித்து நீங்கள் அறையிலேயே தெரிவித்திருந்தால் அது என்ன வடிவம் என்று அப்போதே சொல்லியிருப்பேன். அருள் கூர்ந்து அமருங்கள். நான் இசைவு தந்தவர்கள் பேசட்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பாயின்ட் ஆர்ப் ஆர்டர். நான் ஏற்கெனவே எழுப்பியது ஒட்டிய பிரச்சினை இது. புதிதான பிரச்சினை அல்ல. இங்கே சட்டமன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியை ஒட்டி நடுநிலைப் பத்திரிகையாக இருக்கிற தினமணி, அது தி. மு. க. பத்திரிகையோ அல்லது அ.தி.மு.க. பத்திரிகையோ அல்ல ................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு நீங்கள் என்னிடத்திலே இசைவே வாங்கவில்லை. இசைவே வாங்காமல் எந்தப் பத்திரிகைக் குறிப்பையும் படிக்கக் கூடாது என்பது உங்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன்.

**(உ) சென்னையிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் நெல்லூருக்கருகில் பிடித்து வைக்கப்பட்டுள்ளது குறித்து.**

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆம் தேதியன்று 26 மீனவர்களைக் காணோம் என்று பத்திரிகைக் குறிப்பு வந்திருக்கிறது. மேலும் நேரிடையாகவும் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். 25 ஆம் தேதியன்று 26 மீனவர்கள் 4 விசைப்படகுகளிலே, எம்.கே.ஜே. 1, உல்கை 1, சிவா, திருச்செல்வி என்ற படகுகளிலே சென்னையிலே இருந்து மீன் பிடிப்பதற்காக ஆந்திர மாநிலத்தில் நெல்லூர் மாவட்டத்திற்கருகில் சென்றிருக்கிறார்கள். நெல்லூர் மாவட்டத்தின் எல்லையில் 5 கிலோ மீட்டர் தள்ளித்தான் நம்முடைய மீனவர்கள் மீன் பிடிக்கக்கூடாது. ஆனால் வோர்ல்டு பார்டர் என்று சொல்லுகிற 5 கிலோ மீட்டருக்கு தாண்டி அவர்கள் மீன் பிடித்திருக்கிறார்கள். அந்த 26 மீனவர்களை நெல்லூரிலே இருக்கிற ரௌடிகள் பிடித்து வைத்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற காவல் துறையினர் அல்ல. ரௌடிகள் பிடித்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு போட்டிலேயிருந்தும் 2 லட்சம் ரூபாய்க்குப் பெறுமான இறால் மீன்கள், எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அந்தப் படகுகளிலே இருக்கக் கூடிய மெட்டீரியல்ஸ், வலைகள் போன்றவைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இருக்கிற காவல் துறையினரிடத்திலே ஒப்படைக்கப்படவில்லை. அந்த ரௌடிகளே வைத்திருக்கிறார்கள். இவர்கள் இங்கேயிருந்து நேரிடையாகச் சென்று கேட்டதற்குப் பின்னால் ஒரு நபருக்கு 20 ஆயிரம் தந்தால் அவரை விட்டு விடலாம் என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்சனை ஏறத்தாழ 6 மாதமாக நடந்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய பகுதியில் மீன் பிடிப்பதற்கு வசதி இல்லாத காரணத்தினால் தான் ஆந்திர மாநிலத்தில் உள்ள நெல்லூர் பகுதிக்குச் சென்றிருக்கிறார்கள். அப்படி வோர்ல்ட் பார்டரில் பிடிப்பதற்கு ஆந்திர மாநிலத்தினுடைய அனுமதி தேவையில்லை. மேலும் அங்கே இருக்கிற அதிகாரிகள் இதைச் செய்யவில்லை. அங்கே இருக்கிற ரௌடிகள் நம்முடைய மீனவர்களைத் துன்புறுத்துகிறார்கள். எனவே அருள் கூர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவருடைய நண்பராக இருக்கிற என். டி. ஆர். அவர்களை அணுகி இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தச் செய்தியை நண்பர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல காலையில் தான் நானும் பத்திரிகையில் பார்த்தேன். திரு. சுந்தரதாஸ் அவர்களே இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆந்திராவிலே உள்ள காவல் துறையினர் யாரும் அவர்களைக் கைது செய்து வைக்கவில்லை என்றும் அங்குள்ள மீனவர்கள் சிலர் நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்களைக் கைது செய்தோ அல்லது வேறு முறையிலோ அடைத்து வைத்திருக்கிறார்கள் என்றும்





அவர்களே குறிப்பிட்டுச் சொன்னார்கள். உடனடியாக ஆந்திர மாநில போலீஸ் அதிகாரியோடு நம்முடைய போலீஸ் அதிகாரிகள் தொடர்பு கொண்டு அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

**(ஆ) சென்னை கிரிக்கெட் கிளப்பில் வேட்டி கட்டிச் சென்றவர்களுக்கு அனுமதி மறுப்பு—தொடர்ச்சி.**

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சனை அடிப்படையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளாக இதனை வைக்க விரும்புகிறேன். வி. ஆர். கிருஷ்ண ஐயர் என்று சொல்கின்ற பெருமகனாருக்கு ஏற்பட்ட அந்தச் சம்பவம்—(மணியடிக்கப் பெற்றது) ஒரு செய்தி சொல்ல வேண்டியிருக்கிறது—மாண்புமிகு பொன் விஜயராகவன் அவர்கள் இங்கே எழுப்பினாலும் முதல்வர் அவர்களுடைய உள்ளத்திலே அது வேதனை எழுப்பியிருக்கிறது என்பதனை நாமும் உணர்கிறோம். எல்லோரும் வேதனையிலே பங்கு கொள்கிறோம். சுதந்திரப் போராட்டம் நடந்த போது ................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேட்டி கட்டிய எல்லோருமே வேதனைப்படுகிறோம். (சிரிப்பு).

**திரு. குமரி அனந்தன் :** ரொம்ப மகிழ்ச்சி. சுதந்திரப் போராட்டம் நடந்த போது வெள்ளையர்கள் நமது நாட்டை ஆண்டுக்கொண்டிருந்த நேரத்தில், பம்பாயிலே ஒரு பெரிய ஓட்டலைக் கட்டி வெள்ளையர்கள் தங்களுடைய திமிரின் காரணத்தாலே ''நாய்களும் இந்தியர்களும் அனுமதிக்க மாட்டார்கள்'' என்ற அறிவிப்புப் பலகையைப் போட்டார்கள். ஒரு தேச பக்தன் இந்தியன் லண்டனுக்குச் சென்று ஒரு பெரிய உணவு விடுதியை வாங்கி அங்கே, ''நாய்களும், ஐரோப்பியர்களும் உள்ளே நுழையக் கூடாது'' என்று போட்டு தன்னுடைய வீரத்தைக் காட்டினான். இவ்வளவு வரலாறு நிகழ்ந்த ஒரு நாட்டில் நம்முடைய தலைநகரமாக, பெரிய கலாச்சார மாநிலமாக இருக்கின்ற சென்னையில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திலே கொண்டு, சட்டம் இருக்கிறதா நடவடிக்கை எடுப்பதற்கு என்ற ஒரு ஐய வினாவையும் எழுப்பி இங்கே அமர்ந்தார்கள். ஏனென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுடைய உள்ளத்தில் வந்துவிட்டது என்பது தெரிகிறது. அப்படி எடுக்க முடியவில்லையென்றால்—அவர் நினைத்தால் எடுக்க முடியும்—அதிலும் இடர்பாடுகள் இருக்குமானால், நாம் அனைவருமே சேர்ந்து மக்கள் போராட்டம் நடத்தியாவது இந்த நாட்டு மக்களுடைய கலாச்சாரத்தைக் காப்பாற்றுவதற்கு முன்வர வேண்டுமென்பதனை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் பணிவான வேண்டுகோளாக வைக்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இங்கு எழுப்பப்பட்ட இந்த உணர்வுகளின் அடிப்படையைப் புரிந்துகொண்டு அந்த விடுதியினரே திருந்திக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவர்களிடமிருந்தே அப்படிப்பட்ட திருந் திக்கொண்ட ஒரு கடிதம் வரும் என்று எதிர்பார்க்கிறேன். இல்லையேல் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஊ) ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருங்களத்தூரைச் சேர்ந்திருக்கக் கூடிய ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிலாளர்கள் 700 பேர்கள் வரையிலே கைதாகியிருக்கக்கூடிய செய்தி வந்திருக்கிறது. ஏற் கனவே இதுபற்றி அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி யிருக்கக்கூடிய பிரச்சினை. அவர்களுக்கு ஒரு மாத சம்பள பாக்கியாவது கொடுப்பதற்கு ஒரு சமரச ஆலோசனை வைக்கப் பட்டு அது சம்பந்தப்பட்ட தொழிலாளர் துறை அதிகாரி வருவ தற்கு முன்பாக அந்த நிர்வாகிகள் உள்ளே செல்ல முற்பட்ட போது ஏற்பட்ட ஒரு சம்பவம் காரணமாக தள்ளிப்போனது. இப்பொழுதாவது சுமூகச் சூழ்நிலை ஏற்படுவதற்கும அந்த மறியல் போராட்டத்தை நிறுத்துவதற்கும், அந்த சம்பளத்தை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற் பாடு செய்ய வேண்டுமென்று இந்த அவசர உணர்வின் அடிப்படை யிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நான் நேற்றையதினம் உங்களிடத்திலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். 5 நாட்களாக இதுசம்பந்தமாக ஏற்கனவே முன்னாலே கிளப்பப்பட்டு, அமைச் சர் அவர்கள் பதில் சொல்லியும் கூட அந்தத் தொழிற்சாலை திறக்கப்படாத காரணத்திற்காக 3,000 தொழிலாளிகள் 6 மாதம், 7 மாதமாக எந்த ஊதியமும் பெறாமல் பட்டினி இருக்கக்கூடிய சூழ்நிலையில் மறியல் நடத்தியிருக்கிறார்கள். தினமும் 500-க்கும் அதிகமானவர்கள் மறியலிலே கைதாகியிருக்கிறார்கள். அந்த மறியல் செய்யக்கூடிய அந்தத் தொழிலாளிகளை அவர்கள் புறப் படுகின்ற இடத்திலிருந்து, ரோடின் வழியாக அவர்கள் ஒரு குறிப்பிட்ட தூரம் கூட சென்று தங்களுடைய குறைகளைச் சொல்லி பிற மக்களிடம் அந்த நியாயத்தைச் சொல்லி உணர வைக்கக்கூடிய அந்தக் காரியத்தைக் கூட செய்யவிடாமல் போலீ சார் புறப்படுகின்ற இடத்திலேயே கைது செய்கிறார்கள். நேற்று அந்த தொழிலாளிகளை வாழ்த்தி அந்த மறியலுக்குச் செல்லக், கூடிய நேரத்தில், புறப்படுகின்ற இடத்திலேயே கைது செய்கி றார்கள். அவர்கள் கொஞ்சதூரம் சென்ற பிறகு செய்தால் மக்களுக்கு என்ன போராட்டம், அந்த முதலாளி எவ்வளவு அடம் பிடிக்கிறான் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள முடியும். அந்தத் தொழிலாளிகள் தங்களுடைய உணர்வுகளை பொது





மக்களுக்கு தெரியப்படுத்த முடியாமலேயே தடுத்துவிடுகிறார்கள். அவர்கள் 6 மாதங்களாக பட்டினியாக இருக்கிறார்கள், 3 மாத சம்பளமோ, 1 மாத சம்பளமோ கொடுப்போம் என்று சொன்ன தைக் கூட கொடுக்காமல் இருக்கிறார்களே, உடனடியாக எந்தத் தொகையாவது கொடுத்து ஓரளவாவது அவர்களை பட்டினியி லிருந்து பாதுகாத்து நடவடிக்கை எடுப்பதோடு உடனடியாக தொழிற்சாலையைத் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் வேலை நிறுத்தம், அந்தத் தொழிற்சாலை மூடியதன் தொடர்பாக தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தோம். அந்த நிர்வாகம் ஒரு மாதச் சம்பளம் இடைக்காலத்திலே வழங்குவதற்கு ஏற்றுக்கொண்டது. அந்தச் சம்பளத் தொடர்பான ஆவணங் களை எடுப்பதற்காகச் சென்ற அந்த நிர்வாகத்தைச் சேர்ந்த அலுவலர் தாக்கப்பட்டார். அதனாலேதான் இந்த இடர்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று நிர்வாகத் தரப்பிலே சொல்லப்படு கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தத் தாக்குதல் நடை பெறவில்லை, நிர்வாகம் சொல்வதுபடி நடைபெறவில்லை என்பது தொழிற்சங்கத்தின் சார்பாக எடுத்துச் சொல்லப்படு கின்ற கருத்தாகும். எனவே, இரு வேறு கருத்துக்கள் இங்கே நிலவிக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் இந்தத் தடை இப்போது ஏற்பட்டிருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் மன திலே கொண்டு, தொழிற்சங்கத் தலைவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்களேயானால், இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் இரு சாராரையும் அழைத்துப் பேசுவதற்கு இந்த அரசு எப்போதும் தயாராக இருக்கிறது. பிரச்சினையைத் தீர்த்து வைப்பதிலேயும் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்த பிரச்சினை

**திரு, எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு நிமிடம். திரு. இரா. மோகன் பேசட்டும்.

**திரு. இரா. மோகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நேற்றைய தினம் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம்........ (ஒரு புத்தகத்தைக் காட்டி னார்).....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இரா. மோகன் அவர்கள் உட்காரலாம். என்னிடத்திலே இசைவு கேட்கப் பெறாத எந்த ஆவணத்தையும் இங்கே படிக்கக்கூடாது. (குறுக்கீடு) அடுத்து, திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் (குறுக்கீடு)

[1089 மார்ச் 31

திரு. எஸ். திருநாவுக்கரசு : * * * *

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்த நிலையில் இங்கு
எழுப்பப்பட்டு, இங்கே பேசப்பட்ட அத்தனை கருத்துக்களும்
அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் தங்க
ளுடைய நியாயமான உரிமையைத் தாங்கள் காப்பாற்றிக்கொள்ள
வேண்டும் என்றும், தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு
அவர்களுடைய கூற்றுக்கள் அனைத்தும் நீக்கப்படுகின்றன.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே,
இது என்ன நியாயம்; ஒன்று முதலமைச்சரோ, அவை முன்ன
வரோ மாற்றி, மாற்றி நாங்கள் பேசுவதை நீக்கச் சொல்வதும்
நீங்கள் அதைக் கேட்டு அப்படியே நீக்குவதும், இப்படியே இருந்
தால் நாங்கள் வந்து பேசி என்ன பிரயோசனம்? (குறுக்கீடு)
அதனால் நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், அந்தப்
பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன. அதற்குத் தீர்வு காண
வேண்டும் என்ற அடிப்படையிலே அதற்கு (குறுக்கீடு) ஏன்
ஆத்திரப்படுகிறீர்கள், (குறுக்கீடு) இல்லை, தயவு செய்து
நீங்கள் எல்லாம் (குறுக்கீடு) நான் வயதிலே இளையவன், நீங்கள்
எல்லாம் வயதானவர்கள் (குறுக்கீடு) நீங்கள் ஏன் உணர்ச்சிவசப்
படுகிறீர்கள்? நாங்கள் சொல்வதையே ......

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்
களே, நாங்கள் வயதானவர்கள் என்பது உண்மை. எங்களுக்குப்
பின்னாலே இருக்கப்போகிறவர்கள் அவர்கள். ஆகவே அவர்கள்
தான் அமைதியாக இருக்கவேண்டுமே தவிர, வயதானவர்கள்
வேகமாகப் போகலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அது சரி, அது உங்கள் இஷ்டம்
வேகமாகப் போங்கள். (குறுக்கீடு) நான் சொல்ல விரும்புவது * *
நாங்கள் போனவுடனே அவைக்குறிப்பிலிருந்து நீங்கள் நீக்கி
விடுகிறீர்கள். * *

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : நான் சொல்ல
விரும்புகிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொரு
நாளும் ஒரே பிரச்சினையைத் திரும்பத் திரும்ப எழுப்பி பிரச்
சினை இருப்பதாகப் பேசி, இந்த அவையினுடைய நேரத்தை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்
றப் பெற்றன.



1989 மார்ச் 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

எடுத்துக்கொள்வது மட்டுமன்றி. அவையைத் திசை திருப்பு
வதற்காக ஒரு களங்கத்தைத் தொடர்ந்து நாட்டிலே பரப்பு
வதற்காக ஒரு முயற்சி நடைபெறுகிறது. அதற்கு இந்த அவை
உடந்தையாக இருக்க முடியாது. மற்றொன்று, நாங்கள் போன
தற்கு பின்னாலே, எங்களுடைய பேச்சு நீக்கப்படுகிறது என்று
எதிர்க் கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார். இருக்கிற
போதேதான் நீக்கப்படுகிறது என்பதைத் தாங்கள் அறிவிக்
கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவது
இன்றைய தினம் தாங்களே அனைத்துக் கட்சித் தலைவர்களை
யும் அழைத்து ஒரு கூட்டம் 11½ மணி அளவில் நடத்துவதாக
அறிகிறேன். எங்களுக்கு எல்லாம் அறிவிப்புக் கிடைத்
திருக்கிறது. எனவே ஏதாவது பிரச்சினை இருக்குமானால்,
தங்கள் அறையில் தங்களிடத்தில் பேசலாமே தவிர, இந்த அவை
யிலே தொடர்ந்து பேச இனி இடம் இல்லை என்பதைத் தாங்கள்
அறிவிக்க வேண்டும் என்று சபையினுடைய கண்ணியத்திற்காக
நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர்
எழுந்து நின்றால் உட்கார வேண்டும். ஏற்கெனவே, இதுகுறித்து
இந்த அவையில் என்ன செய்யலாம் என்பதை முடிவெடுத்திருக்
கிறோம். இந்த அவையில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி எந்தவகை
யான உரிமை மீறல் தீர்மானமோ, ஒத்திவைப்புத் தீர்மானமோ
எடுக்கப்பட மாட்டாது, கிளப்பப்படத் தேவையில்லை என்று
முடிவு எடுத்திருக்கிறோம். அதை நான் அறிவித்திருக்கிறேன்.
அதுபோக, நேற்றுப் பேசப்பட்ட செய்திகளில் சிலவற்றை
இங்கேயே நீக்குவதற்கு நான் ஆணையிட்டு இருந்தேன்.
அது தொடர்பாகச் சில தெளிவான விளக்கங்கள் வேண்டும் என்
பதற்காகச் செய்தித்தாள் துறையினைச் சேர்ந்தவர்கள் என்னிடத்
திலே வந்து கேட்டார்கள். அது தொடர்பாக விளக்கங்கள்
சொல்லப்பட்டதே தவிர, இதை இதைச் செய்யுங்கள் என்று
அறையிலே நாங்கள் ஆணை பிறப்பிக்கவில்லை என்பதையும்
நேற்றே தெளிவுபடுத்தினேன். இவ்வளவு தெளிவுபடுத்திய பிறகும்
நாங்கள் போன பிறகு நீக்கப்படுகிறது என்பது தவறான குற்றச்
சாட்டு மட்டும் அல்ல, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இனி
மேல் பேரவைத் தலைவர் மீது, அவர்களின் தீர்ப்புகளின் மீது
இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை வீசுவதை முற்றிலும்
தவிர்க்கவேண்டும்.

(முற்பகல் 10-40)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நீங்கள் நேற்றுச் சொன்னதை நான் மறுக்கவில்லை.
நான் ஒத்துக்கொண்டேன். நீங்கள் நேற்றுச் சொன்னபோதே
நான் ஒத்துக்கொண்டேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, (குறுக்கீடு)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

### விளவங்கோடுத் தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஊழியர்கள் தாக்கப்பட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது ஒத்திவைப்புத் தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. ரமணி, செ. நூர் முகமது மற்றும் கோ. வீரையன் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக விளவங்கோடுத் தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர்கள் தாக்கப்பட்டதைக் குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கூறி ஒரு அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மிகச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுகிறேன்.

**திரு. செ. நூர்முகமது :** இந்த பேரவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்திவைத்துக் கொண்டு நான் எழுப்பி இருக்கின்ற அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினைக் குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

*12-3-1989*ல் பட்டப் பகலில் அருமனை போலீஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஆர்.எஸ்.எஸ்.-ஐ சேர்ந்தவர்கள், அரசு நாட்டைச் சேர்ந்த மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவாளரான 17 வயது பள்ளி மாணவன் சுதாகரனை விரட்டிச் சென்று குத்தி, படுகொலை செய்துள்ள ஒரு பயங்கரமான சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இந்த சம்பவம் என்பது ஒரு துவக்கம் அல்ல. மாறாக நீண்ட நாட்களாகவே கன்னியாகுமரி மாவட்டம் முழுவதிலும் குறிப்பாக அருமனை காவல் நிலைய எல்லைக்குள் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவாளர்களும், சி.ஐ.டி.யூ. தொழிலாளர்களும் தொடர்ந்து திட்டமிட்டு தாக்கப்பட்டு வருகிறார்கள். அதற்கு அருமனை காவல் நிலைய துணை ஆய்வாளர் அவர்கள் துணையாக இருந்து வருகிறார்கள் என்பதைப் பற்றி நான் இந்த நேரத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

*1988 மார்ச் 15*—ல் இந்திய நாட்டில். . ......

**பேரவைத் தலைவர்:** இது உரை அல்ல. ஏன் ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கான சுருக்கமான விளக்கம் தேவை.

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்கு தான் ஒரு சில குறிப்புகளை தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்திவைக்க நேர்ந்தால் அந்தக் குறிப்புகள் அப்போது பயன்படாமல் போய்விடக் கூடாது. அதை ஒத்தி வையுங்கள். (சிரிப்பு) இப்போது சுருக்கத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1988*, மார்ச் 15 பந்தை ஒட்டி அங்கே காவல்துறையினரும், காங்கிரஸ் கட்சியினரும், ஆர்.எஸ்.எஸ்.-ஐயைச் சேர்ந்தவர்களும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் ஊழியர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். அது குறித்து காவல்துறையிடம் புகார் கொடுத்தால் அருமனை காவல் துறையினுடைய உதவி ஆய்வாளர் புகாரை வாங்க மறுக்கிறார்கள். தக்கலை டி.ஒய்.எஸ்.பி.-யிடம் சொன்னால் அவர்கள் அதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை. அது மட்டுமல்ல, எங்களுடைய புகார் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக எங்களுடைய ஊழியர்களை கைது செய்வதும், அவர்கள் மீது பொய் வழக்கு போடுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மெக்சி என்கின்ற ஒரு இளம் பெண் கற்பழிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட விஷயத்தில் கூட அருமனை காவல்நிலைய எஸ்.ஐ. அதை தற்கொலை என்றும், மூடி மறைத்து குற்றவாளிகளை பாதுகாத்து இருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஆளுநர் ஆட்சி என்கின்ற காரணத்தால் காங்கிரஸ் கட்சியினுடைய செல்வாக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி தொடர்ந்து வன்முறைகள் நடந்து கொண்டிருக்கும்போது அதற்காக போலீஸ் மேல் அதிகாரிகளிடம் புகார் செய்தபிறகு கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் தொடர்ந்து நாங்கள் பல புகார்கள் கொடுத்து இருக்கிறோம். பலயிடங்களில் முறையிட்டு இருக்கிறோம். அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் அதற்குரிய நடவடிக்கையை எடுக்கவில்லை. அதனுடைய விளைவாக துணிச்சல் உற்ற ஆர்.எஸ்.எஸ். வன்முறையாளர்கள் *12-3-1989* அன்று அருமனை காவல் நிலையத்திற்கு அருகாமையில் எங்களுடைய கட்சியினுடைய ஆதரவாளரான வாலிபர் இயக்கத்தைச் சேர்ந்த 17 வயது பள்ளி மாணவன் சுதாகரன் என்பவனை பட்டப் பகலில் படுகொலை செய்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக இதுவரையில் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்பது மட்டுமல்ல, இத்தகைய தாக்குதல்களுக்கு தூண்டுதலாக இருக்கின்ற காவல் நிலைய அதிகாரிகள் அங்கே எஸ்.ஐ.யாகவும், டி.ஒய். எஸ்.பி.யாகவும் தொடர்ந்து இருந்து கொண்டு இருக்கின்ற நிலையில் குற்றவாளிகள் கைது செய்யப்பட மாட்டார்கள் என்ற எண்ணமும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. மேலும், மேலும் தாக்குதல்கள் அந்தப் பகுதியில் நடந்து கொண்டிருக்கின்றன.

[திரு. செ. நூர்முகமது] [1989 மார்ச் 31

நான் மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு கடைசியாகச் சொல்ல விரும்புவது அங்கே காங்கிரஸ் கட்சியும், ஆர்.எஸ்.எஸ்.-ம் போலீசாரும் சேர்ந்து திட்டமிட்டு நடத்தப்படுகின்ற—மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராகவும், சி.ஐ.டி.யூ.க்கு எதிராகவும் குறிப்பாக ஜனநாயக இயக்கங்களுக்கு எதிராகவும் திட்டமிட்டு தொடர்ந்து நடத்தப்படுகின்ற— இந்த தாக்குதலை, தடுக்கின்ற வகையிலே அரசு அப்படிப்பட்ட அதிகாரிகள் மீதும், குற்றம் செய்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்காக விரிவாக விவாதிக்க வேண்டிய தேவை இருப்பதால் இந்த அவையினுடைய பிற அலுவல்களை ஒத்திவைத்து இது சம்பந்தமாக விவாதிப்பதற்கு அனுமதி தருமாறு நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை மிகப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து என்னுடைய கருத்துக்களைக் கூறுகிற நேரத்தில் கடந்த காலத்திலே கன்னியாகுமரி மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டு முதல் நடைபெறுகின்ற ஒரு சூழ்நிலையை நினைவில் கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகிறது. மாண்புமிகு உறுப்பினர் நூர்முகமது அவர்கள் இங்கே உரையாற்றும்பொழுது, இந்தக் கொலைகள், கலவரங்களெல்லாம் இரண்டு கட்சிகளிடையே நடைபெற்றது என்று குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்ட இன்னொரு கட்சியின் சார்பாக, காங்கிரஸ் கட்சியின் சார்பாக சுந்தரதாஸ், எம்.எல்.ஏ., நடேசன், எம்.எல்.ஏ. ஆகியோரும் என்னிடத்திலே இன்னொரு புகாரைக் கொடுத்து அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினால் தாக்கப்படுவதாகவும், உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் என்னிடத்திலே அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். பொதுவாக இந்த மாவட்டத்தில் ஒரு அமைதியான சூழ்நிலை உருவாவதற்கு அனைவருமே ஒத்துழைக்கவேண்டுமென்கிற ஒரு நல்ல நோக்கத்தோடு நான் சில விவரங்களை இங்கே கூற விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகுதியில் இனக் கலவரம் 1982 ஆம் ஆண்டு நடைபெற்று அப்பொழுது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிலே 6 பேர் மரணம் அடைந்தார்கள். அதைத் தொடர்ந்து மண்டைக்காட்டில் திருவிழா நேரங்களில் தேவையான அளவிற்கு காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. 1984 ஆம் ஆண்டு பாபு, செல்லையன் என்ற இரண்டு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அதன் தொடர்பாக ஆர்.எஸ்.எஸ். மற்றும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரு இயக்கங்களுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டன. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக அருமனை காவல் நிலைய குற்ற எண். 191/84 இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 320, 324, 302 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்



1989 மார்ச் 31] [டாக்டர் மு. கருணாநிதி]

பட்டது. அந்தக் கொலையின் அடிப்படையில், அந்த வழக்கு விசாரணை முடிவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு செஷன்ஸ் நீதி மன்றத்தில் 6–4–87-ல் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலையானார்கள். இந்த மாவட்டத்திலே ஆர்.எஸ்.எஸ். மற்றும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரிடையே அடிக்கடி ஏற்படும் மோதல்கள் சம்பந்தமாக அவ்வப்போது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. 15–3–88 அன்று நடைபெற்ற 'பாரத் பந்த்'தையொட்டி திருமதி அன்னம்மாள் செரியன் என்பவர் அருமனை காவல் நிலைய உதவி ஆய்வாளரான சத்தியதாஸ் என்பவர் மீது தனி நபர் வழக்கு ஒன்றை குழித்துறை நீதி மன்றத்திலே கொடுத்து இருக்கிறார். இந்த விரோதத்தின் காரணமாக உதவி ஆய்வாளர் திருமதி அன்னம்மாள் செரியனின் வீட்டைத் தாக்குவதற்கு ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆதரவு தந்தார் என்று கூறப்படுகிறது. அது எந்த அளவிற்கு உண்மை என்பது ஆராயப்படுகிறது. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சுரேந்திரன் என்பவர் தாக்கப்பட்டது குறித்து அவர் கொடுத்த புகாரின் மீது அருமனை காவல் நிலைய குற்ற எண். 402/82, இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 323, 324, 326 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த கருணாகரப் பணிக்கர், மற்றும் 11 பேர் மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதில் கருணாகரப் பணிக்கர் மற்றும் இருவர் கைது செய்யப்பட்டார்கள். மற்றவர்கள் நீதி மன்றத்திலே சரணடைந்தார்கள். இந்த வழக்கு நீதி மன்றத்தின் விசாரணையிலே உள்ளது. அருமனை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட செருவல்லூரைச் சேர்ந்த மெர்சி என்ற 18 வயதான பெண் மரணம் குறித்து 6–7–88 அன்று அருமனை காவல் நிலையத்தில் அந்தப் பெண்ணின் தந்தை பொன்னுமுத்து கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண். 364/88 குற்ற நடைமுறைச் சட்டம் 174-ஆவது பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(முற்பகல் 1-50)

இவை எல்லாம் 1988 ஆம் ஆண்டு நடைபெற்றவை ; இந்த ஆட்சிக் காலத்திலே அல்ல. இறந்த பெண்ணின் உடல்மீது நடைபெற்ற பிரேத பரிசோதனையின் முடிவில் தண்ணீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மூச்சு அடைப்பு காரணமாக மரணம் ஏற்பட்டது என்று மருத்துவர் கருத்து கூறினார்.

பிரேத பரிசோதனையில் மூக்கிலும் காலிலும் பெரிய சிராய்ப்புக் காயங்கள் மட்டும் காணப்படுகின்றன என்று சொல்லப்பட்டது. கற்பழிப்புக்கான வெளிப்படை அடையாளங்கள் எதுவும் கிடையாது என்றும் பிரேத பரிசோதனை அறிக்கையிலே கூறப்பட்டது. ஆனால் இதற்கிடையில் மெர்சி என்ற அந்தப் பெண் உண்மையில் தற்கொலை செய்துகொள்ளவில்லை

என்றும் தன் தந்தை பணியாற்றி வந்த தோட்டத்தின் மேற்பார்வையாளரான செல்லப்பன் பணிக்கர் மகன் சசி மற்றும் தோட்டத்தின் காவல்காரரர் தங்கையன் என்ற இருவராலும் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்றும் சிலர் சந்தேகம் தெரிவித்தார்கள். இது சம்பந்தமாக துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. இதைத் தொடர்ந்து பிரேத பரிசோதனை அறிக்கையில் கற்பழிப்புக்கான அடையாளங்கள் கூறப்படவில்லை என்றாலும் இதுபற்றிக் கூறப்படும் புகாரின்மீது உண்மை இருக்குமா என்று ஆராயும்பொருட்டு மாநிலக் குற்றப் பிரிவு புலனாய்வுத் துறை இந்தச் சம்பவத்தைப்பற்றி விசாரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் சத்தியதாஸ் என்பவரின் பேரில் ஏதும் குறைகள் இருந்தால் அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறைத் தலைவர் (சட்டம்–ஒழுங்கு) உத்தரவு பிறப்பித்து, இப்போது அவர் வேறு காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

4–2–1989 அன்று இந்திரா காங்கிரஸ் கட்சி அந்தத் தொகுதியிலே வெற்றிபெற்றதைக் கொண்டாடும் சமயத்தில் அவர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் இடையே வாய்த் தகராறும் மோதல்களும் ஏற்பட்டன. இதில் வாசுப் பிள்ளையின் மகன் - சுரேஷ், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், தாக்கப்பட்டு, காயம் அடைந்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நபர் ஒருவரும் தாக்கப்பட்டு காயம் அடைந்தார். இது சம்பந்தமாக இரு சாராரும் கொடுத்த புகார்கள் பேரில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

4–2–1989 அன்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடைபெற்ற விழாவில் காங்கிரஸ் கட்சியினருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் ஏற்பட்ட தகராறில் கருணாகரன் பணிக்கரின் மகனான ஜெயம் என்பவருக்கு நெருங்கிய நண்பர்களான பாலன், விஜயன் என்கின்ற இருவரும் தாக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. அந்தச் சம்பவத்தில் சுதாகரனும் அவருடைய சகோதரர் திவாகர் என்பவரும்—இருவரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அனுதாபிகள்—சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. எனவே, இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சுதாகரன் மீது ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்களான பாலன் மற்றும் விஜயன் ஆகியோருக்கு விரோதம் வளர்ந்து வந்தது.

17 வயதான சுதாகரன் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் அனுதாபி ஆவார். அவர் அருமனையிலுள்ள ரீஜினல் டுட்டோரியல் என்ற நிறுவனத்தில் படித்து வந்தார். கடந்த 12–3–1989 அன்று பிற்பகல் 2 மணி அளவில் சுதாகரன் அருமனைக்கு ஒரு திரைப்படம் பார்க்கச் சென்றிருந்தபோது ஆர்.எஸ்,எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்



படுகிற பாலன் என்பவரும் விஜயன் என்பவரும் சுதாகரனை வழிமறித்து கத்தியால் சுதாகரினின் இடது மார்பிலும் இடது புஜத்திலும் இரண்டு கால்களிலும் குத்தியிருக்கிறார்கள் படுகாயமுற்ற சுதாகரனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது வழியிலேயே அவர் மரணம் அடைந்துவிட்டார். இதன் தொடர்பாக அருமனை காவல் நிலையத்தில் குற்ற எண் 71/89, இந்திய தண்டனைச் சட்டம் 341, 323, 307, 302 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள எதிரிகளான ஆர்.எஸ்.எஸ். அனுதாபிகளான பாலன், விஜயன் என்ற இருவரையும் கைது செய்ய தனி போலீஸ் படை அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் குற்றவாளிகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் கேரளாவுக்குச் சென்றிருக்கக் கூடும் என்று தகவல் உள்ளது.

இப்போது அங்கே பதட்ட நிலை எதுவும் இல்லை என்றாலும் கூட 1982 ஆம் ஆண்டு முதல் அந்த மாவட்டத்தில் இவ்வாறு உருவாகி இருக்கின்ற ஒரு சூழ்நிலைக்கு ஒரு சுமூகமான முடிவு காணவேண்டுமென்கின்ற அக்கறை இந்த அரசுக்கு இருக்கிறது. அதைப்போல எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களுக்கும் காங்கிரஸ் கட்சியினுடைய நண்பர்களுக்கும் இருக்கும்; இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்; முறையே நம்புகிறேன். எனவே இந்தச் சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம் அமைதியாக இருக்கின்ற தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் மூலமாக இதைப்போன்ற வன்முறைச் சம்பவங்கள், ஊடுருவல்கள் நடைபெறுமேயானால் அது நல்லதல்ல.

இப்போது சென்னையிலே இருந்தே சில பத்திரிகைகள், சில தினசரிப் பத்திரிகைகளுக்கு ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களே ஆசிரியர்களாக இருந்துகொண்டு நடத்துகிற காரணத்தால் அவர்களே அதைத் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரியும். அந்த ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பத்திரிகை அலுவலகங்களில் நுழைந்துகொண்டு, நடுநிலைப் பத்திரிகைகள் என்ற பெரிய பத்திரிகை அலுவலகத்திற்குள் நுழைந்துகொண்டு இன்று அந்த இயக்கத்தைத் தூண்டிவிடுவதற்கான காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் இந்த அவைக்கு உறுதியளிக்கிறேன். திராவிட முன்னேற்றக்கழகமானாலும் அல்லது தமிழகத்திலிருக்கின்ற வேறு கட்சிகளானாலும், காங்கிரஸ் கட்சியானாலும், கம்யூனிஸ்ட் கட்சியானாலும், ஜனதா தளக் கட்சியானாலும், ஜனதா கட்சியானாலும், முஸ்லீம் லீக் ஆனாலும் எல்லாக் கட்சிகளுமே சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற உணர்வுகளை உடைய கட்சிகள்தான் என்பதில் எனக்கு எந்தவிதமான கருத்து மாறுபாடும் இல்லை. ஆனால் ஒற்றுமையாக இருக்கிற தமிழ் மாநிலத்தில் ஆர்.எஸ்.எஸ். என்ற இயக்கத்தின் மூலமாக வன்முறைகளை உருவாக்

குவதும் ஆயுதம் ஏந்திப் போராடுகிற சூழ்நிலைகளை உருவாக்குவதும் நல்லதல்ல. எனவே, இவைகளைப் பெரிது படுத்திக் கொண்டே போகாமல் அனைவரும் அமர்ந்து அந்த மாவட்ட அளவிலே ஒரு நல்ல சூழ்நிலை உருவாவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த முயற்சியை யார் மேற்கொள்வது என்ற கேள்வி எழுமேயானால் நானே கூட முதலமைச்சர் என்ற முறையில் கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள எல்லா கட்சிகளையும் அழைத்து வைத்துப் பேசி ஒரு நல்ல முடிவு காண விரும்புகிறேன். அதற்கிடையே இதற்கு உடன்படக் கூடாது என்று அவர்களைத் தூண்டிவிடுகிற சிலர் சென்னையில் பத்திரிகை அலுவலகங்களில் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆர்.எஸ்.எஸ். ஊடுருவல் தமிழகத்தில் எந்தக் காலத்திலும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்கும் என்பதை மாத்திரம் இங்கே உறுதியாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

### 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (எ) அடையாறு அருணாச்சலபுரத்தில் சுவர் இடிந்து விழுந்ததால் மாண்ட இரண்டு குழந்தைகளின் குடும்பங்களுக்கு உதவி

**திரு. என். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைப்பங்காளன் முதல்வர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கு மனிதாபிமானப் பிரச்சினை ஒன்றை நான் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய மயிலாப்பூர் தொகுதிக்கு உட்பட்ட சென்னை அடையாறு அருணாச்சலபுரம் இரண்டாவது தெருவில் ஒரு வீட்டின் பக்கவாட்டுச் சுவர் சுமார் 80 அடி நீளம் உள்ள சுற்றுச்சுவர் சரியாக அஸ்திவாரம் போட்டுக் கட்டப்படாத காரணத்தால் நேற்றையதினம் கீழே விழுந்து அங்கே விளையாடிக்கொண்டிருந்த, நந்தகோபால் என்பவர் மகள் ஜமுனாராணி மற்றும் சந்திரன் என்பவரின் மகள் சித்திரா, நான்கு வயது, இந்த இரண்டு பச்சிளங் குழந்தைகளும் இடிபாடுகளில் சிக்கி மாண்டுவிட்டனர். அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி இன்பக் கனவு கண்டு கொண்டிருந்த அந்த ஏழைப் பெற்றோர்கள் பெரும் அதிர்ச்சிக்கும், துயரத்திற்கும் ஆளாகியிருப்





பதை நேரில் சென்று நான் ஆறுதல் சொன்ன நேரத்தில் காண முடிந்தது. அந்த ஏழைக் குடும்பத்திற்காக தமிழகத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவர்களின் துயரத்தில் பங்கு கொண்டு அந்தக் குடும்பத்தினருக்கு ஆறுதலாக அரசாங்க ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்று தாயுள்ளம் கொண்ட முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் பல்வேறு கட்டிடங்களில் அடிக்கடி இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகிறது. ராஜா அண்ணாமலைபுரத்தில் போலீஸ் ரேடியோ குவார்ட்டர்ஸ் என்று சொல்லப்படுகிற குவார்ட்டர்ஸ் இடிந்து விழக்கூடிய சூழ்நிலை காரணமாக அங்கே இருப்பவர்களை எல்லாம் காலி செய்யக்கூடிய நிலைமை உருவாகி இருக்கின்றது.

மல்லீஸ்வரன்தோட்டம் என்று சொல்லப்படுகிற பகுதியிலும் படிக்கட்டுகளும், டாங்குகளும் இடிந்து விழுந்து விட்டன. ருக்மணி நகர் என்று சொல்லப்படுகிற பகுதியிலேயும் மேலே இருக்கக்கூடிய கூரைகள் இடிந்து விழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தொடர்புடைய செய்திகளை மட்டும் சொன்னால் நல்லது.

**திரு. என். கணபதி :** தொடர்புடைய செய்திகள்தான். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க, எச்சரிக்கை நடவடிக்கையாக ப்ளான் சாங்ஷன் செய்கின்றபோதே, கட்டடங்கள் கட்டப்படுகிற நேரத்திலே சரியாகக் கண்காணிக்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சம்பந்தப்பட்ட வீட்டின் சொந்தக்காரர் மேல் கவனக்குறைவாக இருந்து மரணத்தை விளைவித்தார் என்ற அந்தக் குற்றத்திற்காக கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் செய்தியை முதன் முதலில் போட்ட தினகரன் பத்திரிகைக்கும் நன்றியைக் கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்களும் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*(முற்பகல் 11-00)*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் இப்போதுதான் இந்தத் தகவலைத் தங்கள் மூலமாக எனக்கு அளித்திருக்கிறார்கள். அஜாக்கிரதையாகக் கட்டப்பட்ட வீட்டின் சுவர் இடிந்து விழுந்த காரணத்தால் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு பச்சிளங் குழந்தைகள் பரிதாபமாக மாண்டிருக்கிறார்கள்.

அவர்களே சொன்னார்கள். அந்த வீட்டுக்குரியவர்கள் மீது வழக்குப் போடவேண்டுமென்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நல்ல வழக்கறிஞர். எனவே, அவரே அது குறித்து வழக்கு தொடுத்து நஷ்ட ஈட்டை அந்த வீட்டுக்காரர்களிடமிருந்து அந்த குழந்தைகளுக்காகப் பெற்றுத் தரலாம்.

அது மாத்திரமல்ல, அவர்கள் பெற்றுத் தருகின்ற நஷ்ட ஈட்டோடு அந்தக் குழந்தைகளை இழந்து தவிக்கின்ற அந்த இரண்டு குடும்பங்களுக்கும் முதல்வர் அவர்களுடைய நிதியிலிருந்து தலா இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சா, பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். பேரவையிலே நேற்றைய தினம் நம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது நாங்கள் வெளிநடப்பு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, இல்லை. இப்போது நடைபெறுகின்ற அலுவல் தொடர்பாக மட்டும்தான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியுமே தவிர வேறு எழுப்ப முடியாது. வழக்கறிஞராகிய உங்களுக்கு அது நன்றாகத் தெரியும்.

(ஏ) சேரன்மாதேவித் தொகுதியிலுள்ள வறட்சி நிலை குறித்து.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியின் வறட்சி நிலைமை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டு உண்மையாக இருக்குமானால் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எனக்கு அனுப்பிய பட்டியலை இப்போது கையிலேயே கொண்டு வந்திருக்கிறேன். உண்மையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய அறையிலே வந்து கொடுத்தால் நான் உண்மையாக இருக்குமானால் பரிசீலிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவி தொகுதிக்கு நம்முடைய திரு. பாண்டியன் அவர்கள் நிறையச் செய்திருக்கின்றார்கள். அவருடைய பதவியைப் பயன்படுத்திச் செய்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் அவர் ஒருவர் தப்பித்தார் என்பதும் எனக்குத் தெரியும்.



### 5. அரசினர் சட்டமுன்வடிவு.

#### நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1989

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

*''தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.*

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

*''தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்''.*

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

### 6. வரவு-செலவுத் திட்டம், 1989-90 பொது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு—செலவுத் திட்டத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கும், இந்த சபையில் உள்ள அத்தனை பேர்களுக்கும் நன்றி சொல்லிக் கொண்டு, இங்கே எனக்கு முன்னால் உட்கார்ந்திருக்கின்ற முதலமைச்சர் அவர் களையும், அவை முன்னவர் அவர்களையும் நான் பார்க்கிறேன். இதற்கு முன்னாலே கவர்னர் உரை நடந்த நேரத்தில் அமைதியோடும், பொறுமையோடும் இருந்த முதலமைச்சரை இன்றைக்கு என்னால் பார்க்க முடியவில்லை. அதற்குக் காரணம் நடந்து முடிந்த இரண்டு இடைத் தேர்தல்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுத் தேர்தல் முடிந்தவுடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்து மக்கள் எல்லாம் தன் மீது பாசத்தோடு வாக்களித்து விட்டார்கள், இனிமேல் நம்முடைய

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [1989 மார்ச் 31

ஆட்சிதான் நீண்டு நிலைத்திருக்கும் என்று சொல்லி இந்த
சட்டமன்றத்திற்குள்ளே நுழைந்தார்கள். ஆனால் இன்றைக்கு
நாங்கள் இரண்டு பேர்களும் ஒன்று சேர்ந்த பிறகு இந்த ஆட்
சியை இனியும் நீடிக்க முடியாது என்பதும் பொது மக்கள்
மத்தியிலே இந்த ஆட்சிக்கு இருந்த வரவேற்பும் அல்லது இந்த
ஆட்சியிலே மகிழ்ச்சியும் இன்றைக்கு தமிழக மக்கள் மத்தியிலே
இல்லை என்பதை நடந்து முடிந்த இரண்டு இடைத் தேர்தல்
களில் நாட்டு மக்கள் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களுக்கு
உணர்த்தியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, இரண்டு மாத காலத்திலே, ஆட்சிக்கு வந்த பிறகு,
இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்து மாண்புமிகு முதலமைச்
சர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் கோபித்திருக்
கிறார்கள். என்றைக்கும் கோபப்படாதவர்கள் இளைஞர்
களாகிய எங்களைப் பார்த்து கோபப்படுகிறார்கள். இன்
றைக்கு அந்த எண்ணத்தின் அடிப்படையில் இருக்கிறார்கள்
என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் ஒன்றை
சொல்கிறேன். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் அடக்கு
முறைக்கு பயந்த கட்சி அல்ல. 1972 ஆம் ஆண்டில் உங்கள்
இயக்கத்திலிருந்து, ஒன்றாக இருந்த நேரத்தில், புரட்சித் தலை
வர் எம்.ஜி.ஆர். அவர்களைத் தூக்கி எறிந்த நேரத்தில், அதற்குப்
பிறகு வந்த தேர்தல்களின் மூலம் தனிப்பட்ட முறையில் சென்ற
11 ஆண்டுக்காலமாக, நீண்டு நிலைத்து தமிழகத்தின் முதல்வ
ராக புரட்சித் தலைவர் அவர்கள் இருந்தார்கள். திண்டுக்கல்
தேர்தல் வந்த நேரத்திலும் சரி, பின்னாலும் சரி, கழகத்தைச்
சேர்ந்தவர்கள் எத்தனை பேர் கொலை செய்யப்பட்டார்கள்
என்பதை இந்த நாடு நன்றாக அறியும். திண்டுக்கல் இடைத்
தேர்தலின் போது எங்கள் இயக்கம் சின்னஞ்சிறு குழந்தையாக
இருந்த நேரத்தில் வத்தலகுண்டு ஆறுமுகத்தை **

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** போல எதிர்க்
கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டை எந்த முறையிலே சொல்ல
வேண்டும் என்பது கூட அறியாமல் ** என்று குறிப்பிட்டார்கள்.
** ஆனால் யார் குற்றம் செய்தார்களோ அவர்கள்மீது வழக்குப்
பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பும் வெளிவந்திருக்கிற
நிலையில் உறுப்பினர் வார்த்தைகளை அளந்து பேச வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்
அவர்கள் ** குறிப்பிட்ட வார்த்தை அவை நடவடிக்கைக்
குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றன.



1989 மார்ச் 31]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் .... (சிரிப்பு)
இல்லை இல்லை, தவறுதலாகச் சொல்லிவிட்டேன், திரு.
கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் இங்கே ஏதோ
அவை முன்னவர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் இவர்
கள் பெற்ற இடைத் தேர்தல் வெற்றியால் கோபமாக இருப்
பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்கள் இருவரும்
எப்போதும் சிரித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள் என்
பதை உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.
ஆனால் அதே நேரத்தில் 1977 ஆம் ஆண்டு தேர்தலுக்குப்
பிறகு, நடைபெற்ற வட சென்னை தேர்தலிலும், மூன்று
சட்டமன்ற இடைத் தேர்தல்களிலும் தி. மு. க. ஜெயித்த
நேரத்தில் நீங்கள் பயந்து கொண்டிருந்தீர்கள் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு
மரியாதைக்குரிய உறுப்பினர் சட்டமன்றத்தில் உறுப்பினராக
இல்லை. அன்றைக்கு இங்கேயிருந்த திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், இடைத் தேர்தலின்போது
தி.மு.க. வெற்றி பெற்ற உடனே இங்கே எவ்வளவு ஆர்ப்
பாட்டம் செய்தார்கள் என்பதை நாங்களெல்லாம் கண்
கூடாகப் பார்த்தோம். ஆக, நீங்கள் சொல்வது தவறு. எங்கள்
இயக்கத்தைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில்
எந்த உறுப்பினரின் மனதையும் புண்படுத்த வேண்டுமென்ற
எண்ணம் யாருக்கும் இல்லை. என்னைப் பொறுத்தவரையில்
சொல்கிறேன், பொதுமக்கள் மத்தியிலே உங்களுக்கு செ
வாக்குக் குறைந்திருக்கிறது. நாங்கள் பிளவுபட்ட நேரத்தில்,
நீங்கள் நடுவில் வந்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள்.
அதை உணர்ந்து ஆட்சி நடத்த வேண்டிய கால கட்டத்தில்
இருக்கிறீர்கள். உங்களை எதிர்ப்பவர்கள், வாக்களிக்காதவர்
கள் தான் இந்த நாட்டிலே நிரம்ப இருக்கிறார்கள். ஆகவே
திட்டங்களைப் போடுகிற நேரத்தில், திட்டத்தின் பயன்கள் நாட்டு
மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் கவனமாக
திட்டங்களைப் போடுங்கள் என்று பொறுப்பில் உள்ள உங்க
ளுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க்
கட்சியினராகிய நாங்கள் கொஞ்சம் வேகம் காட்டினாலும்
நீங்கள் பொறுப்பில் இருப்பதால் பொறுமையாக ஆட்சி நடத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேராசிரியர் அவர்கள் பேசும்போது எங்களை
இளைஞர்கள் என்று சொன்னார்கள். இளைஞர்கள் முன்
கோபமாக நடந்தால் பெரியவர்களாக இருப்பவர்கள் அது
போல நடக்காமல் எங்களைக் கட்டுப்படுத்தி, அடக்கி வைக்க
வேண்டிய நிலையில் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்

கிறேன். நாங்கள் தவறு செய்கிற நேரத்தில் எங்களை விட வேகமாக பெரியவர்கள் வந்தால் அது எப்படி சரியாக இருக்கும் என்பதை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'வேகமாக வருவோம்' என்று நான் சொல்லவில்லை. 'வேகமாக போய்க் கொண்டிருப்போம்' என்று தான் காலத்தை ஒட்டிச் சொன்னேன்.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு, 1978 ஆம் ஆண்டில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் ஒன்றைப் பேசி இருக்கிறார்கள். 'இங்கே ஆளுகின்ற பொறுப்பில் இருக்கின்ற அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நல்ல காரியங்களை செய்வதை விட்டுவிட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, நாங்கள் செய்த குற்றங்களை, ஊழல்களை எடுத்துச் சொல்வதில் அக்கறையாக' இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். 'நல்ல காரியங்களைச் செய்வதில் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் முனைப்போடு இருக்க வேண்டும்' என்கிற கருத்தை இன்றைக்கு மாண்புமிகு முதல்வராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான், அதை உணர்ந்த காரணத்தால்தான், இன்றைக்கு இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சருக்கு ஒன்றைச் சொல்கிறேன். உங்கள் செயல்பாடுகள், காரியங்கள், திட்டங்கள், பழைய ஆட்சியிலிருந்த அவதூறுகளை அள்ளி வீசுவதில் இல்லை, நாட்டு மக்களுக்கான நல்ல காரியங்களை உற்சாகத்தோடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இரண்டு தினங்களாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் ஒன்றைப் பேசியிருக்கிறார்கள்.

*(முற்பகல் 11-10)*

ஏதோ நாங்களும், இந்திரா காங்கிரஸ்காரர்களும் சேர்ந்து இங்கே ஆட்சியைக் கலைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறோமென்று விமர்சனம் செய்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதல் அமைச்சரவர்களுக்குச் சொல்வதெல்லாம், எங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணமில்லை. நாங்கள் அரசியல் ரீதியாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சந்திக்க நினைக்கின்றோமே ஒழிய, குறுக்கு வழியில் வந்து, உங்களைச் சந்திக்க வேண்டிய அவசியமில்லை. எங்களுக்குப் பொது மக்கள் மத்தியிலே செல்வாக்கு இருக்கிறது. இரண்டு இடைத் தேர்தல்கள் மூலமாக நாங்கள் அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே பேசிய





நேரத்தில் ஏதோ, நாங்களும் இந்திரா காங்கிரசும் சேர்ந்து
இவர்களைக் கலைக்க முயற்சிக்கிறோமென்றும், அது கொக்கு
தலையில் வெண்ணெய் வைத்து பிடிப்பது போல இருக்கிற
தென்றும் எல்லாம் சொல்லி விமர்சனம் செய்திருக்கிறார்கள்.
அவர்கள் சொல்கிற நேரத்தில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்
கள். இந்தியாவிலே வருகிற நாடாளுமன்றத் தேர்தலுக்குப்
பிறகு, 'நேஷனல் பிரான்ட்' என்று சொல்லக் கூடிய, நம்
முடைய ஆளுகின்ற கட்சி ஆதரிக்கின்ற கட்சிகூட வந்துவிடக்
கூடுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முத
லமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், தமிழகம்
ஆனாலும், இந்தியத் திருநாடானாலும் சரி, ஒரு தவற்றை
ஒரு தடவைதான் செய்யும். . . . . . . .

**திரு. உ.ரா. வரதராசன் :** மாண்புமிகு தலைவரவர்களே,
மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அன்று குறிப்பிட்ட பேச்சைக்
குறிப்பிட்டு, அத்தகைய எண்ணமில்லை என்று இங்கே மரி
யாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால்
அவருடைய இயக்கத்தின் சார்பிலே ஜனாதிபதி அவர்கள் இந்த
அரசைக் கலைக்க வேண்டுமென்றும், நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்றும் தந்திகள் அனுப்பப்பட்டு, பத்திரிக்கைகளில்
செய்திகள் வந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான்
எங்களுடைய சட்டமன்றக் கட்சியின் தலைவர் திரு. ரமணி
அவர்கள் இங்கே பிரச்சினையை எழுப்பியதும், முதலமைச்ச
ரவர்கள் பதில் அளித்ததும் நடந்தது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபா
நாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்தி
வைத்த தேர்தலுக்கும், இடைத் தேர்தலுக்கும் உள்ள வித்தி
யாசத்தைச் சொல்லவில்லை. இரண்டுக்கும் வித்தியாசம் இருக்
கிறது. இது ஒத்தி வைத்த தேர்தல். இடைத் தேர்தல்
அல்ல.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, தமிழக மக்களானாலும் அல்லது
இந்தியத் திருநாட்டு மக்களானாலும் சரி ஒரு தடவைதான்
தவறு செய்திருக்கிறார்கள். ஒரு காலத்திலே
இந்த நாட்டிலே ஜனதா இயக்கம் நாட்டை ஆள வேண்டுமென்று சொல்லி வாக்
களித்தார்கள். ஒரு கூட்டணியாக, கொள்கையில்லாமல்,
6, 7 பேர்கள் சேர்ந்து, அன்றைக்கு ஆட்சி அமைக்க இந்தியத்
திருநாட்டைச் சேர்ந்தவர்கள் அனுமதித்தார்கள். அதனு
டைய விளைவை. . . . . . . . . . . . . . . . . . . . .

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** தலைவரவர்களே,
கொள்கையில்லை என்று சொல்லுகிறார்கள். இப்போது எந்தக்
கொள்கையை வைத்து இவர்கள் சேருகிறார்கள் ? நாங்கள்
கொள்கையில்லாமல் சேர்ந்தோம். இப்போது என்ன கொள்கை
இருக்கிறது ? இவர்கள் கொள்கையை விளக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு** : தலைவரவர்களே, எந்த விதமான அடிப்படைக் கொள்கையும் இல்லாமலிருந்த காலத்தில் 5 ஆண்டுகள் இருக்க வேண்டிய அரசு பாதியிலேயே 2 ஆண்டு களில் கலைந்து, அதற்குள் 2, 3 பிரதமர்கள் வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்** : கொள்கை என்பது, தேர்தல் மேனிபெஸ்டோ என்பதை எல்லோரும் விடுகிறார்கள். ஏதோ ஒரு காரணத்தால், பணத்தால் வித்தியாசம் இருக்கலாம். சண்டை இருக்கலாம். எல்லாக் கட்சிகளிலும் குடுமிப்பிடி சண்டை நடக்கிறது. அதை வைத்துக் கொண்டு, 'கொள்கை' என்று பேசுகிறார்கள். இப்போது எந்தக் கொள்கையில் இவர் கள் சேருகிறார்கள் என்பதற்கு விளக்கம் கேட்கிறேன்.

**திரு. கோ. வீரையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய எதிர்க் கட்சி உறுப்பினர் மாண்பு மிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் இங்கே குறிப்பிட்டார் கள், கொள்கை இல்லாததால் கவிழ்ந்து போய் விட்டது என்று, கொள்கையோடு இருந்து, ஒரே கட்சியாக ஆட்சிக்கு வந்த, 5 ஆண்டுக்காலம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஆட்சி, 3 ஆண்டு களிலேயே தமிழகத்தில் கவிழ என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு** : அதற்குக் காரணம் மாண்புமிகு இன்றைய முதல்வர் அவர்கள், அன்றைய வேண்டுகோள்தான்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி** : தலைவரவர் களே, அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தான். அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தானே தவிர, வேறு முதலமைச்சர் அன்று அல்ல.

**திரு. எஸ். திருநாவுக்கரசு** : நான் சொல்வது, 5 ஆண்டுகள் இருக்க வேண்டிய ஆட்சி, 2½ வருடத்தில், 1980ல் கலைக்கப் பட்டது. நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிந்தவுடன், இன்றைய முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, அன்றைய பிரதமரைப் பார்த்து, மறுபடியும் தேர்தல்களைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்ன எண்ணத்தின் அடிப்படையிலே தேர்தல் கொண்டு வரப்பட்டது. அப்படி கூட நடந்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : எதிர்க் கட்சித் துணைத் தலைவர் சொல்வது முற்றிலும் தவறு. முதலிலே 1977லே ஜனதா கட்சி இந்தியா முழுவதும் பெரும்பான்மையான இடங் களைப் பெற்று, ஆட்சிக்கு வந்தபோது 9 மாநில அரசுகளைக் கலைத்தது.





அதற்குப் பிறகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 1980-ஆம் ஆண்டிலே பெரும்பான்மையான இடங்களைப் பெற்று அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது அதைப் போலவே 7, 8 மாநில அரசுகளை அவர்கள் கலைத்தார்கள். அப்படிக் கலைக்கும் போது ஒரு மாநில அரசை மட்டும் கலைக்காமல் விட்டுவிட்டால் மற்ற மாநில அரசுகள் அது குறித்து வழக்குத் தொடரக் கூடும் என்று இதையும் சேர்த்துக் கலைத்தார்கள். இதைக் கலைக்க வேண்டும் என்ற சிபாரிசு என் சார்பிலோ, தி. மு. க. சார்பிலோ செய்யப்படவில்லை என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை அதுவல்ல. 1988-ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் தேதி கலைக்கப்பட்டதே—கொள்கை உடைய அரசுதானே அது—அந்த அரசு ஏன் கலைக்கப்பட்டது என்று திரு. வீரையன் கேட்டார். அதற்குத்தான் பதில் அளிக்க வேண்டும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு** : ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனே ஆட்சிப் பொறுப்பேற்றவர்களுக்குச் சட்ட மன்றத்தில் பெரும் பான்மை இல்லாததால் கலைக்கப்பட்டது என்பது மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. பி. எச. பாண்டியன்** : பெரும்பான்மை இல்லை என்று சொல்ல முடியாது. பெரும்பான்மை என்று இங்கே தீர்ப் பளிக்கப்பட்டது. ஆளுநரும் அன்றைக்குத் தீர்ப்பளித்ததை ஏற்றுக் கொண்டார். அவர்கள் கலைத்தது—அவர்கள் குறுக்கு வழியில் உள்ளே நுழைய வந்தார்கள். அதை நாங்கள் தடுத்து நிறுத்தினோம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு** : ஆளுநர் பெயரைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. ஆளுநர் பெரும்பான்மை இருக்கிறதா என்று நிர்ணயிக்கத்தான் சட்ட மன்றத்தைக் கூட்டச் சொன் னார். அப்படிச் சட்டமன்றத்தில் பெரும்பான்மை நிரூபிக்க முடியாத காரணத்தால், ஆட்சி கலைக்கப்பட்டது.

**திரு. பி. எச். பாண்டியன்**: Members present and voting அதாவது இருக்கின்ற மெம்பர்களில் மெஜாரிட்டி என்ன என்று ஆளுநர் பார்க்கச் சொன்னார். அன்றைக்கு மெஜாரிட்டி இருந்தது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : பழைய முதலமைச் சர் அருமை நண்பர் எம். ஜி. ஆர். மறைந்த பிறகு ஏற்பட்ட நிலையை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அறிஞர் அண்ணா, அவர்கள் மறைந்தவுடன் தி. மு. க. வின் சட்டமன்றக் கட்சி கூடி சட்டமன்றக் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுத்தது. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர் நானாக இருந்த காரணத்தால், முத லமைச்சர் பொறுப்பை நான் ஏற்க முடிந்தது. ஆனால் எம். ஜி.

ஆர். மறைந்த உடன் நீங்கள் உங்கள் சட்டமன்றக் கட்சிக் கூட்
டத்தைக் கூட்டாமல், தலைவரையே தேர்ந்தெடுக்காமல், நீங்
களே 37 பேர் பிரிந்துபோய் நீங்களே உங்களுடைய ஆட்சியைக்
கலைத்துக் கொண்டீர்களே தவிர உங்கள் ஆட்சியை வேறு
யாரும் கலைக்கவில்லை.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** 1980 ஆம் ஆண்டு, தமிழ்
நாடு சட்டமன்றம் கலைக்கப்படாமலிருந்திருந்தால் மற்றவர்கள்
கோர்ட்டுக்குப் போவார்கள் என்றுதான் கலைக்கப்பட்டது
என்று சொன்னார்கள். அது சரியான தகவல் அல்ல. அன்றைய
தினம் பல மாநில அரசுகள் கலைக்கப்பட வில்லை. கேரளா,
கருநாடகா, ஹரியானா போன்ற அரசுகள் கலைக்கப்பட வில்லை.
இங்கே கலைக்கப்பட்டதற்கு உண்மையான காரணம், அன்றைய
தினம் தி. மு. க. தலைவர் அவர்கள் கலைக்கப்பட வேண்டுமென்று
விரும்பினார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 9 மாநில அரசுகள்
அப்போது கலைக்கப்பட்டதை நண்பர் பாலசுப்பிரமணியம்
அவர்கள் மறந்துவிட்டுப் பேசுகிறார். அவர் இந்திரா காந்தி
அம்மையார் அவர்களுக்கு ஒரு இழுக்கை ஏற்படுத்துகிறார்.
ஏதோ நான் சொன்னதற்காக இந்திரா காந்தி அம்மையார்
அவர்கள் தமிழ்நாட்டு அரசைக் கலைத்துவிட்டார்கள் என்பதன்
மூலம் இந்திரா காந்தி அவர்களுக்கு இழுக்கைத் தேடுகிறார்.
நான் இந்திரா காந்தி அம்மையாருக்குப் பரிந்து பேசுகிறேன்.
இப்படிப்பட்ட இழுக்கை, மறைந்த அம்மையார் மீது சுமத்தா
தீர்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** நிச்சயமாக இழுக்கை
ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் இங்கே பேச
வில்லை. அன்றையதினம் 234 தொகுதிகளில் 207 செக்
மென்டுகளில் காங்கிரஸ்—தி. மு க. கூட்டணி வெற்றி பெற்றது
எனவே அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த எம். ஜி. ஆர்.
அவர்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். எனவே
கண்டிப்பாக கலைக்க வேண்டும் என்று உங்கள் தரப்பில்
ஆலோசனை வழங்கப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதற்கான ஆதாரங்கள்
இருந்தால் தாங்கள் சமர்ப்பிக்க வேண்டும் இல்லாவிட்டால் நான்
எதற்கும் கட்டுப்படுகிறேன். நீங்கள் கட்டுப்படத் தயாரா ?

***திரு. கே. ரமணி** தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட்
ஆப் ஆர்டர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்
தலைவர் பேச்சிலிருந்து இது எழுந்தது. ஜனதா கட்சியி
னுடைய அரசாங்கம் வந்தபோது அது ஏன் கலைக்கப்பட்டது ?
அது எப்படிப் போச்சு என்று காரணம் சொன்னபோது,
எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார் : " கொளகை
திட்டம் எதுவுமே இல்லாததால் போச்சு " என்றார். அதி
லிருந்து மாறி மாறி வேறு பிரச்சினைக்கு கொண்டு வந்துவிட்
டார்கள். அப்படிப்பட்ட " Drifting discussion is wrong





இதனால் உண்மை கிடைக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.
கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்களோ அல்லது திரு.
திருநாவுக்கரசு அவர்களோ அதற்கான பதில் அளிக்க வேண்டும்.
உங்களுக்கு, உங்களுடைய நடவடிக்கையில் திட்டம் இருக்கிறதா,
பார்ட்டியினுடைய திட்டத்தில் அடுத்த கட்டத்தில் மாற்றம்,
சமுதாயம் எப்படி வளர வேண்டுமென்ற திட்டம் இருக்கிறதா,
அதற்கு ஸ்ட்ராடஜி இருக்கிறதா, அதற்கு டாக்டிக்ஸ் இருக்
கிறதா, அதையெல்லாம் ஒன்று படுத்தும்படியான ஏற்பாடு இருக்
கிறதா என்று சொல்லி. அன்றைக்கு நடந்த போராட்
டத்திலே, ஜெயிச்ச ஜனதா கட்சிக்கு, இதே கட்சிகள், நாங்கள்
அத்தனை பேரும் ஆதரவு அளித்தோம். ஆனால் பின்னால்
அந்தக் கட்சியினுடைய நடவடிக்கைகளிலே வேறு மாற்றம்
இல்லை. அப்போது நாங்கள் ஆதரவு அளித்தபோது சரியான
அடிப்படைத் திட்டம் இருந்தது. நாட்டை சர்வாதிகாரப்
பாதையிலே செலுத்தக்கூடிய ஆட்சி மத்தியில் இருக்க முடியாது.
ஜனநாயகத்தைப் படுகொலை செய்யக்கூடிய, பொது ஜனங்க
ளுடைய இயக்கங்களை நசுக்கக்கூடிய, பொருளாதாரத்தில்
சீர்குலைவு பண்ணக்கூடிய அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு இடம்
கொடுக்கக்கூடிய ஆட்சி இருக்கமுடியாது. இதுதான் அப்போ
தைய திட்டம். இப்படி எந்தத் திட்டத்தின் அடிப்படையிலே
நீங்கள் மாற்றுத் திட்டம் வைத்தீர்கள் என்று சொன்னால்
பிரச்சினை முடிந்து போகும். டிரிப்ஃட் ஆகி வேறு பக்கம்
போக வேண்டாம் ; நீங்கள் அதற்கு விடை வாங்கினால் போதும்.

(முற்பகல் 11—20)

**திரு. எம். அப்துல் லத்தீப் :** துணைத் தலைவரவர்களே,
இன்றைக்கு, முதல்வர் கலைஞர் அவர்களுடைய சிபாரிசின்
பேரில் 1980-லே இருந்த ஆட்சி கலைக்கப்பட்டது என்று மாண்
புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் கூறினார்கள். அது
தவறான தகவல். ஏனென்றால், தேர்தல் முடிந்த பிறகு எனக்கு
நன்றாக நினைவிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்
கும் நினைவிருக்கும், அண்ணா நகரில் மாபெரும் வெற்றி விழாப்
பொதுக் கூட்டம் நடந்தது. அதிலே இன்றைய முதல்வரவர்
களும் கலந்து கொண்டார்கள். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்,
தி.மு.க. உறுப்பினர்கள், பாண்டிச்சேரியிலிருந்து தேர்ந்தெடுக்கப்
பட்ட உறுப்பினர்கள். ஆக அத்தனைபேரும் கலந்து கொண்ட
அந்தக் கூட்டத்தில் மரியாதைக்குரிய மூப்பனார் அவர்களும்
கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் தெளிவான கருத்துச்
சொல்லப்பட்டது. நான் கூடப் பேசினேன். மாநில அரசு எப்படி
நடந்து கொள்ள வேண்டும், அது இருக்கவேண்டுமா, போக
வேண்டுமா என்பதை தமிழ்நாடு சட்டமன்றம்தான் தீர்மானிக்க
வேண்டுமே தவிர, மத்திய அரசாங்கம் அதில் தலையிடவோ,
தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை இடையிலே கலைக்கவோ

[திரு. எம். அப்துல் லத்திப்] [1989 மார்ச் 31

மத்தியஅரசாங்கத்திற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்
பதை மாண்புமிகு மூப்பனார் அவர்களின் வாயிலாக நான் தெரி
வித்துக் கொள்கிறேன் என்று நான் திட்டவட்டமாக, கலைஞர்
அவர்கள் உள்ளிட்டு எழுந்த அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்
பட்டது. எனவே நம்முடைய கருத்து நன்றாகத் தெரிவிக்
கப்பட்ட பிறகுதான், இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்
கிருந்த நிர்வாக முறைகள் என்னவோ அல்லது அரசியல் தேவை
கள் எதுவாக இருந்ததோ, அந்த அடிப்படையிலே கலைத்தார்
கள் என்பதை, ஒரு வேளை எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்
அவர்கள் அந்த நேரத்தில் இல்லாத காரணத்தால், அவர்கள்
அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்களோ என்னவோ
எனக்குத் தெரியாது, அவருக்குத் தெரியாமல் இருக்கலாம்; நான்
பேசினேன், மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் தெரியும். ஒரு வேளை, திருநா
வுக்கரசுக்குத் தெரியுமோ, என்னவோ, எனக்குத் தெரியாது.
எல்லோருக்கும் தெரியும். கலைஞர் அவர்கள் இருந்தார்கள்.
அவர்களுடைய ஒப்புதலோடுதான் பேசினேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** தலைவரவர்களே,
எனக்குத் தெரியுமோ, தெரியாதோ என்று உறுப்பினரவர்கள்
சொன்னார்கள். எனக்கு நிச்சயமாகத் தெரியும் என்பதை
முதல்வரவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என நினைக்கிறேன்.
ஃபேக்ட் இஸ் ஃபேக்ட். அவர் சிபாரிசு செய்தது உண்மை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே,
பாலசுப்பிரமணியம் உண்மைக்கு மாறான ஒன்றைச்
சொல்கிறார். ஒரு வேளை அவர் சிபாரிசு செய்திருக்கலாம்.
சட்டமன்ற எலக்ஷன் வந்தால்கூட, சர்க்காரில் மந்திரியாக ஆகி
விடலாமென்று கருதி அவர் சிபாரிசு செய்திருக்கலாம்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** தலைவரவர்களே,
நான் ஒரு கடிதம் அனுப்பினேன். ''கலைக்கக் கூடாது'' என்று
அந்தக் கடிதத்திலே நான் எழுதியிருக்கிறேன். :

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே,
கலைக்கக் கூடாது என்று அவர் எப்படிக் கருதி அறிவித்தாரோ;
அதே கருத்துத்தான் என்னுடைய கருத்தும். கலைப்பது நல்
லதல்ல.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
இன்றைய முதல் அமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி
அவர்கள் ''இன்னா நாற்பது'' என்று சொல்கின்ற ஒரு தொகுப்
பைக் கொடுத்தது. நான் நினைவு படுத்தத் தகுந்தது என்று
கருதுகிறேன்.

**மாண்புமுகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே;
அதில் மூப்பனாரும் கையெழுத்திட்டார் என்பதை நினைவு
படுத்துவது மிகவும் பொருத்தமென்று நான் கருதுகிறேன்.



1989 மார்ச் 31]

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலை
வரவர்களே, என்னுடைய நேரத்தை எல்லோரும் எடுத்துக்
கொண்டார்கள். நான் சொல்ல வந்தது எல்லாம், மாண்புமிகு
முதலமைச்சரவர்கள் டில்லியில் அவர் சார்ந்திருக்கிற நேஷனல்
ப்ரன்டினுடைய ஆட்சி வரும் என்பது போலப் பேசினார்கள்.
அப்படி தப்பித் தவறி அதிருஷ்டவசமாக, இன்றைக்கிருக்கிற
ராஜீவ், பிரதமராக வந்தாலும் வரலாம் என்று சொன்னார்கள்.
நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்
வதெல்லாம், நம்முடைய தமிழ்நாட்டில் தேர்தல் வந்தபோது
சொன்னார்கள், தேர்தல் முடிந்தபிறகு கூட்டணி ஆட்சிதான்
வரும்; எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி வராது என்று பல பேர்
விமரிசனம் செய்தார்கள்.

அப்படி விமர்சனம் செய்த நேரத்திலேகூட தமிழ்நாட்டு மக்
கள் தெளிவாக, ஒரு கட்சி வர வேண்டுமென்று சொல்லி உங்க
ளுக்கு வாக்களித்திருக்கிறார்கள். அதே போன்ற உணர்வோடு
தான் இந்தியத் திருநாட்டினுடைய தேர்தல் முடிவுகள் அறிவிக்
கப்படுகின்ற நேரத்தில், இந்தியத் திருநாட்டிலே ஒரே ஆட்சி
யாக, நிலையான ஆட்சியாக இருக்க வேண்டுமென்ற உணர்
வோடு, மரியாதைக்குரிய இராஜீவ் காந்தியினுடைய ஆட்சி
வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, அதிலே
போய் நாம் விவாதம் செய்யாமல் இன்றைக்குத் தமிழ்நாட்
டிலே இருக்கிற நல்ல பணிகளைச் செய்வதிலே நாம் அக்கறை
யோடு இருக்க வேண்டும் என்பதை மட்டும் நான் இங்கே பணி
வன்போடு சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இன்றைக்கு எங்களுடைய
கட்சியைச் சேர்ந்த தலைவரையும்,எங்களையும் அடக்கி,
ஒடுக்குவதிலே அக்கறையோடு இருந்து கொண்டு இருக்கிறார்
கள். இன்றைக்கு அவரைச் சார்ந்திருக்கின்றவர்கள் அவருக்குச்
சொல்லுகின்ற யோசனையெல்லாம், ஒரு காலத்திலே, 72-லே
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சியிலிருந்து வெளி
யேற்றப்பட்ட நேரத்தில் அவரை நாம் எளிதாக விட்ட காரணத்
தால்தான் அந்தக் கட்சி வளர்ந்து விட்டது, இன்றைக்கும்
அதேபோல.............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நிதிநிலை அறிக்
கையின் மீது உங்கள் கருத்துக்களைச் சொன்னால் போதும்.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** இன்
றைக்கும் அதேபோல இந்த இயக்கத்தை விடுவோம் என்று
சொன்னால், பின்னாலே இதுவும் ஒரு ஆளுகிற கட்சியாக
வரக்கூடும் என்ற அச்சத்தோடு தான் எங்கள் மீது இன்றைக்குப்
பொய் வழக்குகளைப் போடுகிறார்கள் என்பதை மட்டும் நான்
இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு அரை மணி நேரத்திற்கு முன்புதான் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே சில வேண்டுகோள்களை விடுத்தார்கள். அவைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். வழக்குகள் வாபஸ் வாங்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். பலபேர் கைது செய்யப்பட்டவர்கள், முன்கூட்டி கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்கு இருக்காது என்று சொல்லியிருக்கிறேன். இதற்குப் பிறகும் நான் பழி வாங்குகிறேன். பழி வாங்குகிறேன் என்று சொல்வது எந்தப் பொருளில் என்று எனக்குப் புரியவில்லை.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர்ரவர்கள் பட்ஜெட் உரையிலே முதலிலேயே சொல்லியிருக்கிறார்கள். ஜனநாயகத்திற்குக் குரல் எழுப்பியதால்தான் ஆட்சிப் பொறுப்பை நாங்கள் இழந்தோம் என்று சொல்லி அவர்கள் முதலிலேயே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

என்னுடைய நினைவு சரியாக இருக்குமென்று சொன்னால், அவருடைய ஆட்சியைக் கலைக்கின்ற நேரத்தில், அவரைச் சார்ந்தவர்கள் அவரை முஜிபுர் ரகுமான் என்று பேசி, தேசிய ஒருமைப்பாட்டிற்கு அன்றைக்கு ஒரு சவாலாக இருந்த காரணத்தால்தான்- -பல காரணங்களில் அதுவும் ஒரு காரணமாக இருந்து அன்றைக்கு ஆட்சி கலைக்கப்பட்டது என்று நான் இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முஜிபுர் ரகுமான் என்று நான் என்னைச் சொல்லிக் கொள்ளவில்லை. இராஜபாளையத்தில் நடைபெற்ற மாநாட்டில், இன்று உங்களுடைய கட்சியின் பொருளாளராக இருக்கின்ற நண்பர் மாதவன் அவர்கள், என்மீது உள்ள ஆசையின் காரணமாகவோ அல்லது பதவியின் மீது உள்ள ஆசையின் காரணமாகவோ, ஒரு பேனரை எழுதி வைத்தார், தமிழ்நாட்டு முஜிபுர் ரகுமான் கலைஞர் அவர்களே வருக என்று. அதைப் பார்த்தவுடனே அதை அகற்றச் சொல்லிவிட்டேன். அது அவர் செய்த வேலை. எனக்கு விருப்பமானது அல்ல.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பட்ஜெட் புத்தகத்திலே பார்க்கின்ற நேரத்தில் மரியாதைக்குரிய முதலமைச்சருடைய உயிர்மூச்சாக இந்தி மொழிப் பிரச்சினைதான் இருக்கிறது. இந்த இயக்கம் என்றைக்குத் தோன்றியதோ, பேரறிஞர் அண்ணா காலத்திலேயிருந்து இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு கலைஞர் காலம் வரை என்றைக்கும் இந்த இயக்கத்தினுடைய உயிர் மூச்சாக இந்தி மொழி எதிர்ப்புதான் இருக்கிறது. அந்த இந்தி மொழி எதிர்ப்பிலே இன்றைக்கு இந்த பட்ஜெட் உரையைப் பார்க்கின்ற நேரத்தில், இந்தி எதிர்ப்புத் தியாகி



களுக்கு ஒரு முக்கியத்துவமோ அல்லது இந்தியை எதிர்க்கின்ற நல்ல திட்டங்களோ இதில் இல்லை என்பதை மட்டும் நான் மிகத் தெளிவாகச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன்.

பலபேருக்கு இதிலே பென்ஷன் கொடுத்திருக்கிறார்கள். அதிலே, இந்தி எதிர்ப்பிலே போராடியவர்களையும் கொஞ்சம் அக்கறையோடு பார்த்திருப்பார்கள் என்று சொன்னால் உள்ளபடியே இந்தி மொழி எதிர்ப்பு மீது அவருக்கிருக்கின்ற பாசம் இன்னும் குறையவில்லை என்று நினைப்பேன். ஆனால் இல்லை. காரணம், இன்றைக்கு அவர்கள் சேர்ந்திருக்கின்ற இடம் அப்படிப்பட்ட இடம். கலைஞருக்கு இந்தி எதிர்ப்பில் அக்கறை இல்லை என்று சொல்ல மாட்டேன். அவருடைய உயிர் மூச்சே இந்தி எதிர்ப்புத்தான் என்பதிலெல்லாம் எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் அவர் சேர்ந்திருக்கின்ற இடம் இந்தியைப் பற்றி அதிகமாகப் பேசுவதற்கு.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மானியம் கொடுக்கக் கூடாது என்று நீதிமன்றமே உத்தரவிட்டிருக்கிறது. அதனால்தான் மொழிப் போர், தாய்மொழிப் பற்றுள்ளவர்களுக்கு விருதுகள் வழங்குவது, பரிசுகள் வழங்குவது, மானியம் வழங்குவது என்பது போன்ற முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இது உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கருத்தை ஏற்கிறேன். இதேபோல நல்ல காரியங்களை அவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டுமென்ற ஆதங்கத்தில், ஆவலில்தான் இதைப் பேசுகிறேன் என்பதை மட்டும் நான் இங்கே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, இங்கே முதலிலேயே கோடிட்டுக் காட்டிய நேரத்தில், தேர்தல் வாக்குறுதிகளை நிரம்ப நாங்கள் செய்து முடித்து விட்டோம் என்று சொல்லி, முதலிலேயே எதைச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், மேலவையை நாங்கள் உண்டாக்க இருக்கிறோம் என்பதுதான்.

அதற்குப் பின்னாலே ஊராட்சிப் பெருந்தலைவர்கள், நகர் மன்றப் பெருந்தலைவர்கள் பதவி நீட்டிப்பைத்தான் நாங்கள் அதிகமாகச் செய்து காட்டியிருக்கிறோம் என்று சொல்லி, தேர்தல் அறிவிப்பிலேயே முதல் அறிவிப்பாக இதை நாங்கள் செய்து காட்டியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம், ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்களுடைய பதவிக் காலத்தை ஐந்தாண்டுக் காலம் என்று நீங்கள் ஆக்கியிருக்கிறீர்கள். நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். அதை நீங்கள் தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்கள். அதையும் நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால் நீங்கள் அதிக அதிகாரத்தை

இன்றைக்குக் கொடுக்கவில்லை என்பதை என்னால் வாதிட முடியும். இன்றைக்கு அதிக அதிகாரம் என்று சொன்னால், ஒரு காலத்திலே ஊராட்சி ஒன்றியங்களின் ஆசிரியர் பணிகளைப் பொறுத்த வரையில், நியமனமானாலும் சரி, அல்லது மாறுதலானாலும் சரி, ஆசிரியர்களுடைய அந்த முழுப்பொறுப்பும் ஊரராட்சி மன்றத்திலே இருந்தது. அது இறைக்கும் இல்லை. எப்பொழுதும் போல அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே இருக்கிறது.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இழந்து போன அதிகாரத்தை திருப்பிக் கொடுப்பது ஊராட்சி மன்றத் தலைவருக்கு, ஒன்றியத்திற்கு என்ற முறையில், எந்தெந்த அதிகாரங்கள் ஏற்கெனவே இருந்ததாக எதிர்க்கட்சி உறுப்பினர் பேசுகிறார். அவர்களுடைய கட்சி எந்தெந்த அதிகாரங்களை முதலில் அவர்களிடமிருந்து எடுத்துவிட்டதோ, அந்த அதிகாரங்களை முதலில் நாங்கள் அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம். மற்ற அதிகாரங்கள் வழங்குவது குறித்து நாளடைவில் சூழ்நிலையைப் பொறுத்து, இந்த அரசு ஆலோசிக்கும்.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், இந்த ஆசிரியர்களுடைய மாறுதல், அப்பாயின்ட்மென்ட் என்பது எங்களுடைய காலத்திலே தான் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து அரசிற்கு மாற்றப்பட்டது. ஆகவேதான் அந்தக் கருத்தை உங்கள் மத்தியில் சொல்லியிருக்கிறேன். நீங்கள் கூட சொன்ன நேரத்தில் ஆசிரியர்கள் இங்கே போராட்டம் நடத்துவோம் என்று அச்சுறுத்திய நேரத்தில் தான் அதை நீங்கள் மறுபரிசீலனை செய்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அவர்கள் உண்மைக்கு மாறாக ஒரு கருத்தைச் சொல்லுகிறபோது, விளக்கம் தர வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படுகிறது. ஆசிரியர்கள் அரசாங்கத்தினுடைய நேரடி மேற்பார்வையில் செயல்பட வேண்டுமென்பது நீண்டகால கோரிக்கை. அந்தக் கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் நீண்டகாலமாக ஆதரித்து இருக்கிறது. அப்படி ஆதரித்த அந்தக் கொள்கை அடிப்படையில் இப்போதும் கூட ஆசிரியர்கள் அரசாங்கத்தினுடைய அலுவலர்களாகத்தான் பணிபுரிகிறார்கள். பள்ளிக் கட்டடம், பள்ளி அமைப்பு, அதைச் சுற்றியுள்ள சத்துணவு மையம், இவை போன்ற இந்த கடமைகளை ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் ஆர்வத்திற்கு ஏற்ப கண்காணிக்க, குறையிருந்தால் நீக்க வாய்ப்பு அளிக்கப்படுகிற அந்த முறை தான் இப்போதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அதைப்போல சத்துணவு பொறுப்பாளர்களுடைய





நிர்வாகம் யார் கையில் இருப்பது என்று சொல்லியும் கூட இதுவரையிலும் தெளிவான உத்தரவு இல்லை. அதுபற்றி நேற்றைய தினம் பேசிய அமைச்சர் அவர்கள் கூட இந்த அதிகாரத்தைப் பற்றித் தெளிவில்லாமல் பேசியிருக்கிறார்கள்.

அதைப்போல விவசாயத்துறை, நெடுஞ்சாலைத் துறைகளைச் சேர்ந்த அத்தனைபேரும் பழையபடி அரசாங்கத்தினுடைய பொறுப்பில் தான் இருக்கிறார்களே தவிர, விவசாயத் துறையைச் சார்ந்தவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுடைய நேரிடையான நிர்வாகத்தில் இல்லையென்பதை இங்கே பணிவோடு சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் கொடுத்திருக்கிற அதிகாரம் என்னவென்றால், ஒரு காலத்தில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்குப் பக்கத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாற்காலி போட்டு உட்காரலாம். அதை கீழே இறக்கி உட்கார வைத்தது தான் நீங்கள் கொடுத்த அதிகாரமே தவிர வேறு எந்த விதமான புதிய அதிகாரத்தையும் கொடுக்க வில்லையென்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல பெண்களைப் பற்றி மிக உயர்வாகச் சொல்லியிருக்கிறீர்கள். பெண்களைச் சொன்னால் தான் பெண்கள் வாக்குகளைப் பெற முடியும் என்ற காரணத்தால் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த பட்ஜெட்டிலே அறிவித்து இருக்கிறீர்கள். அதிலே சொல்லியிருப்பது மகளிருக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு.

**திரு. சி. கோவிந்தராஜன் :** பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் ... ஊராட்சிகளுக்கு ஏற்கெனவே இருந்த உரிமை பறிக்கப்பட்டது. வரி கொடுப்பவர்கள் மேல் முறையீடு செய்வதென்றால் அந்த 'சேர்மென்' கவுன்சிலால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை மாற்றி அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அங்கே ஏற்படுத்தப்பட்டது. அந்த அதிகாரமும் மாற்றப்பட்டு மீண்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது அவர்களுக்கு என்பதை மாண்புமிகு கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இதுபோல் சின்ன சின்ன அதிகாரங்களைக் கொடுப்பதில் பிரயோஜனம் இல்லை. முழு அதிகாரம் கொடுக்க வேண்டும். மகளிருக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு என்று மாண்புமிகு கலைஞர் அவர்கள் இங்கே அறிவித்து இருக்கிறார்கள். நான் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வது எல்லாம், எங்களுடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பொறுத்தவரையில் முன்னுரிமை தாய்மார்களுக்குத்தான் அளித்திருக்கிறோம். அதைப்போல சத்துணவு மையங்களில் நாங்கள் அந்த பகுதிகளில் இருக்கிற பெண்களுக்குத் தான் முன்னுரிமை கொடுத்திருக்கிறோம். அப்படிப்பட்ட நல்ல காரியங்களைச்

செய்து பெண்களை வாழ வைக்கிற நல்ல உணர்வோடு முன்னால் இருந்த அரசாங்கம் நடந்திருக்கிறது என்பதைப் பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே குறிப்பாக முதலில் தேர்தல் அறிக்கையில் விளம்பரமாகச் சொல்லப்பட்ட காரியம், விவசாயக் கடன்களை முழுவதும் நாங்கள் தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று பிரிக்காமல், இதற்கு முன்னால் உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள் ஆளுகிற கட்சியாக இருக்கிற நேரத்தில் உதாரணத்திற்கு திரு. துரைமுருகன் அவர்கள் கூட பேசியிருக்கிறார்கள். இங்கே என் மத்தியில் குறிப்பு இருக்கிறது. பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று பேசாமல், பல இடங்களில் 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சொல்வது விலைவாசி மற்றும் விளையும் பொருள்களின் தன்மை போன்ற வித்தியாசமான காரியங்கள் இருக்கிற காரணத்தால், எல்லோருக்கும் சலுகை அளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உங்கள் கட்சியின் அடிப்படை எண்ணத்தோடு நாங்கள், ஆளுகிற காலத்தில் பெரிய விவசாயியாக இருந்தாலும் சரி, சிறிய விவசாயியாக இருந்தாலும் சரி, அனைவருக்கும் ஒட்டு மொத்தமாக வட்டியை தள்ளுபடி செய்திருக்கிறோம். நீங்கள் அதைப்போல தள்ளுபடி செய்யாமல், இன்றைக்கு ஒரு சில குறிப்பிட்ட காரியங்களுக்கு மட்டும் வட்டி ரத்து செய்திருக்கிறீர்கள். அபராத வட்டி ரத்து செய்திருக்கிறீர்கள். குறுகிய அளவிற்குத்தான் நீங்கள் தள்ளுபடி செய்திருக்கிறீர்களே தவிர நீங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியதைப் போல முழுவதுமாகத் தள்ளுபடி செய்யவில்லை என்பதை மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல மின்சார வாரியத்திற்கு பாக்கி கட்ட வேண்டியதற்காக வட்டிக்கு மேல் போட்டிருக்கிற அபராத வட்டியை நீங்கள் தள்ளுபடி செய்திருக்கிறீர்களே தவிர நீங்கள் தேர்தல் அறிக்கையில் வட்டியை தள்ளுபடி செய்வோம் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு அதற்கு மேல் இருக்கிற அபராத வட்டியை ரத்து செய்திருக்கிறீர்கள். தேர்தல் அறிக்கையில் சொல்லிய வட்டியைநீங்கள் தள்ளுபடி செய்யவில்லை என்பதை மட்டும் நான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் தேர்தல் அறிக்கையிலே, விவசாயிகள் மத்தியிலே சொல்லிய காரியங்களைச் செய்யாமல், இன்றைக்கு வார்த்தை ஜாலங்களைக் கொண்டு, தேர்தல் அறிக்கை யிலே சொன்னவற்றை, பட்ஜெட்டிலே தெரிவித்திருக்கிறீர்கள்.

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு, படி அரிசி கொண்டு வந்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சி என்று அத்தனைபேரும் பாராட்ட வேண்டும் என்று நினைக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு விலைவாசிகட்



டுக்கடங்காமல் விஷம்போல் ஏறிக்கொண்டே போகிறது.
அதற்கு வேண்டிய சரியான திட்டங்களை இந்த பட்ஜெட்
உரையிலே நீங்கள் சேர்க்கத் தயாராக இல்லை. உதாரணத்
திற்குச் சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு சாதாரண அரிசி
கிலோ 4 ரூபாயிலிருந்து 4.30 வரைக்கும், அதேபோல் அரிசி
நயம் பொன்னி கிலோ ரூபாய் 6.80 வரைக்கும் விற்கக்கூடிய
அளவிற்கு இன்றைக்கு விலைவாசி ஏறிவருகிற நிலைமை தமி
ழ் நாட்டில் இருந்து கொண்டு இருக்கிறது. அதைக் கட்டுப்
படுத்தும் நல்ல முயற்சியை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்
கள் எடுக்கவேண்டும் என்பதை மட்டும் நான் இங்கே பணி
வன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பட்ஜெட்டைப் பார்க்கிற நேரத்தில் மாண்புமிகு
எம். ஜி. ஆர். அவர்கள் எதைச் செய்தார்களோ, அதை நான்
மாற்றிச் செய்வேன் என்று சொல்லக்கூடிய உணர்வு மாண்புமிகு
கலைஞர் அவர்களுக்கு இருப்பதை நான் பார்க்கிறேன். எங்
கள் காலத்திலே பல மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து
நாங்கள் பல பெயர்களை வைத்திருந்தோம். அந்த நேரத்
திலே நாங்கள் செங்கை மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம்
என்று பெயர் வைக்கவில்லை. திண்டுக்கல் மாவட்டத்திற்கு
அண்ணா மாவட்டம் என்று பெயர் வைத்திருந்தோம்.
ஆனால் மாண்புமிகு கலைஞர் அவர்கள் அன்றைக்கே செங்கை
மாவட்டத்திற்கு அண்ணாவின் பெயரை வைக்க வேண்டும்
என்று சொன்னார்கள். ஆனால் எம். ஜி. ஆர். அவர்கள் இருந்த
நேரத்திலே திண்டுக்கல் மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம்
என்று பெயர் வைத்து அது வழக்கத்திலே வந்து, அது அரசாங்கத்
தினுடைய கெஜட்டிலே வந்து கடந்த 1 வருடம், 2 வருட கால
மாக அங்கே நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. அதிலே
என்ன புதிய சாதனையைச் செய்து விட்டோம் என்று சொல்லி,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பழைய அந்த திண்டுக்கல்
மாவட்டத்தினுடைய பெயரை மாற்றி, செங்கைக்கு அண்ணா
மாவட்டம் என்று மாற்றியது என்ன காரியம் என்று எங்களுக்குப்
புரியவில்லை. அவர்கள் சொல்லலாம், அண்ணா பிறந்தது
காஞ்சிபுரம், அது செங்கற்பட்டு மாவட்டம் என்று சொல்லலாம்.
ஆனால் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வது எல்லாம்,
அண்ணா அவர்கள் எல்லோருக்கும் பொதுவானவர். உதாரணத்
திற்குச் சொல்லவேண்டும் என்றால், நெல்லை— கட்டபொம்மன்
மாவட்டம். அதிலே இன்றைக்கு பாஞ்சாலங்குறிச்சி வ. உ. சி.
மாவட்டத்திலே இருக்கிறது. ஆனாலும் வ. உ. சி மாவட்டத்
திலே இருக்கிற பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்த பகுதிக்கு
அன்றைக்கு வ. உ. சி. மாவட்டம் என்று சொல்லி, பாஞ்சாலங்
குறிச்சி இல்லாத அந்தப் பகுதிக்கு நெல்லை கட்டபொம்மன்
மாவட்டம் என்று வைத்திருக்கிறோம் என்று சொன்னால்,
குறிப்பிட்ட ஊரிலே குறிப்பிட்டவர்கள் பிறந்தால்தான் அவர்
பெயரை வைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** காமராஜர் மாவட்டம் என்று ஏன் பெயர் வைத்தோம் காமராஜர் பிறந்தது விருதுநகர். அந்த மாவட்டத்துற்கு அவர் பெயரை வைத்தோம. ஈரோட்டிலே பெரியார் பிறந்தார். எனவே பெரியார் மாவட்டம் என்ற பெயரை வைததோம். அண்ணா அவர்கள் தமிழகம் முழுவதும் அறிமுகமானவர். ஆகவே அவருடைய பெயரை வைததோம் என்றால், காமராஜரும் பெரியாரும் தமிழ்நாடு முழுவதும் அறிமுகம் ஆகாதவர்கள் என்பது தங்கள் வாதமா?

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொல்வதற்கும், எனக்கும் கொஞ்சம் மாறுபட்ட கருத்து இருக்கிறது. காரணம் காமராஜர் பெயரை வைக்கிற அளவிற்கு காமராஜரைப் போன்ற பெரிய தலைவர்கள் காமராஜர் மாவட்டத்திலே இல்லை. ஆகவே நாங்கள் அவருடைய பெயரை வைத்திருக்கிறோம் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ராமநாதபுரம் மாவட்டத்திலே பசும்பொன் கிராமம் உள்ளது. ஆனால் அன்றைக்கு சிவகங்கையைத் தலைநகராகக் கொண்ட பகுதிக்கு பசும்பொன் பெயரை வைத்து இருக்கிறோம். ஆகவே ஒரு சாரரை ஒரு குறிப்பிட்ட இடத்திலே முடக்கி வைக்கக்கூடிய எண்ணம் இல்லாமல், பரவலாக வைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் செய்து முடித்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, செங்கை அண்ணா மாவட்டத்தைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். அண்ணா பிறந்தது காஞ்சிபுரம். அந்த காஞ்சிபுரத்தை உள்ளடக்கிய மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம் என்ற பெயரை வைக்க வேண்டும் என்று நானே, நேரிடையாக மாண்புமிகு மறைந்த முதலமைச்சரிடத்திலே இதே இடத்திலே உட்கார்ந்து திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறேன், அவரும் பார்க்கலாம், பார்க்கலாம் என்று சொன்னார். இன்னும் சொல்லப்போனால், அண்ணா அவர்களுடைய மகன் பரிமளம் கூட அவரைச் சந்தித்து, இந்த மாவட்டத்திற்கு அண்ணா பெயரை வையுங்கள், இன்னொரு மாவட்டத்திற்கு வைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள் இருந்தும் நடைபெறவில்லை. எனவேதான் காஞ்சிபுரத்திலே நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் நான் சொன்னேன். இது எதிர்காலத்திலே செங்கை—அண்ணா மாவட்டம் என்று அழைக்கப்படும் என்று 5 ஆண்டுகளுக்கு முன்பே சொன்னேன்.

நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அண்ணா அவர்கள் சொன்னார்கள். சென்னை ராஜ்யம் என்ற இந்த மாநிலத்திற்கு ''தமிழ்நாடு'' என்று பெயர் வைத்த





பிறகு, நான் சாவதைப் பற்றிக்கூட கவலைப்படவில்லை என்று அண்ணா சொன்னார். தமிழ்நாடு பெயர் மாற்றம் செய்து கொண்டாடப்படுகிற அந்த விழாவிற்குச் செல்கிறபோது, டாக்டர்கள் தடுத்தார்கள். இந்த உயிர் நல்ல காரியத்திற் காகப் போகட்டும், தமிழ்நாடு என்று பெயர் வந்ததற்குப் பாராட்டு விழாவிற்குப் போகட்டும் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். அப்போதெல்லாம் அண்ணா அவர்கள் மரணத் தறுவாயில் இருந்த நேரம்.

அதேபோல்தான், இப்போதும் நான் சொல்கிறேன். அண்ணா பிறந்த மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் வைத்துவிட்ட காரணத்தால், நான் பிறவி எடுத்த பயனை அடைந்ததாகக் கருதுகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்ணா பிறந்த மாவட்டத்திற்கு அண்ணாவின் பெயரை வைத்ததிலே பெருமைப்பட்டார்கள். ஆனால் எங்களுடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான் சார்ந்திருக்கிற கட்சிக்கே அண்ணா தி.மு.க. என்று அண்ணாவின் பெயரை ஆண்டாண்டுக்காலம் சொல்கிற அளவிற்கு, மிகப் பெரிய வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–40)

அதேபோன்று நீர்ப்பாசனத் திட்டங்களை அறிவித்திருக்கின்ற நேரத்தில், பெரியார்-வைகை திட்டம் ஐரோப்பிய பொருளாதார திட்டம் என்று சொல்லி அறிவித்திருக்கிறீர்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டன. இப்போது முடிக்கப்பட உள்ளன. ஆகவே ஏதோ புதியதாக நீர்ப்பாசனத் திட்டங்களை அறிவித்தது போல, ஒரு பக்கம், $1\frac{1}{2}$ பக்கத்திற்கு நீர்ப்பாசனத் திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள்.

அதே போன்று தேசிய நீர்க்கட்டுப்பாடு திட்டம் அறிவித்திருக்கிறீர்கள். அதுவும் எங்களுடைய காலத்தில் செய்யப்பட்டது என்பதை மட்டும் நான் இங்கே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொரு முக்கியமான பிரச்சினை காவிரிப் பிரச்சினை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக் கொள்வது எல்லாம், நீங்கள் பேசாத பேச்சு அல்ல. கர்நாடக அரசோடு நீங்கள

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1989 மார்ச் 31

பேசாத பேச்சு அல்ல. நீங்கள் செய்யாத முயற்சி அல்ல. நீங்கள் செய்த முயற்சிகள் பலிக்காமல் போனவையும் உண்டு. அதற்குப் பின்னாலே நாங்கள் 11 ஆண்டுக்காலம் அந்த கர்நாடக அரசோடு பேசிப் பேசிப் பார்த்து, பலன் இல்லாமல் போன பிறகு தான், உங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் இதை ஆதரித்திருக்கிறார்கள். டிரிப்யூனலுக்குப் போகவேண்டும். டிரிப்யூனல் தான் இதற்கு ஒரே வழியே தவிர, வேறு வழியே இல்லை என்று சொல்லி, எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட பிரச்சினை. இங்கே இருக்கின்ற எல்லா எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களும் நாங்கள் ஆளுகின்ற நேரத்திலே டிரிப்யூனல் ஒன்று தான் இதற்கு சரியான முகாந்திரம் என்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் இன்றைக்கு தோழமை உணர்வு காரணமாக, நீங்கள் ஒரு தோழமைக் கட்சியாக இருக்கின்ற காரணத்தால், எப்படியாவது நீங்கள் கர்நாடக அரசிடத்திலே சாதித்துவிடலாம் என்று நினைக்கிறீர்கள். நான் தயவுசெய்து உங்களுக்கு சொல்லிக்கொள்வது எல்லாம், இந்தக் காவிரிப் பிரச்சினை அங்கே அரசியலாக இருக்கிறது. உங்களுக்குத் தெரியாத காரியம் அல்ல. இந்தக் காவிரி பிரச்சினையில் நான் ஒன்றும் உங்களுக்கு யோசனை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே இது அங்கே அரசியலாக இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக நாம் எவ்வளவு பேசினாலும் அது நடக்கப் போகும் காரியமல்ல. நாம் ஒரு வருடம், இரண்டு வருடம் தள்ளி..........(குறுக்கீடு).

திரு. கோ. **வீரையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் காவிரியைப் பற்றி எல்லா கட்சிகளும் டிரிப்யூனல் வேண்டுமென்று கூறியது என்று குறிப்பிட்டதற்காகத்தான் நான் குறுக்கிட்டேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. அன்றைக்கு அவர்களுடைய அரசு இருக்கிறபோது, அவரே பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது நாங்கள் குறிப்பிட்டது முழுவதும் இந்த டிரிப்யூனல் அமைப்பது காலம் கடத்துவதற்குத்தான் உதவி செய்யுமே தவிர, எத்தனையோ டிரிப்யூனல்கள் இந்த நாட்டில் அமைக்கப்பட்டு, சிபாரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரு சாராருக்குப் பிடிக்கவில்லை என்றால், அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லமுடியும். டிரிப்யூனல் முடிவுகள் அமல் நடத்தப்படவில்லை. 1924-ஆம் ஆண்டு அக்ரீமெண்ட் ஏற்பட்ட போது கூட, அதற்கு முன்னாலே ஒரு நீதிமன்றத்திலே இந்த வழக்கு நடந்து, தீர்வு காணமுடியாத ஒரு நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு தான் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. 24-ஆம் ஆண்டு அக்ரீமெண்ட் சென்னை ராஜதானிக்கும், மைசூர் மன்னருக்கும் ஏற்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆகவே டிரிப்யூனலுக்குச் செல்வது என்பது காலங்கடந்து அந்த முடிவுகள் பின்னாலே வரக் கூடிய நேரத்திலே, அந்தப் பாசனப் பகுதிகள் கட்டுமான நிலை மாறிப் போய், பிற்பாடு தீர்வு கிடைத்தாலும், அது பயனற்றதாகப் போகும். எனவே பேச்சுவார்த்தைகள் மூலம் எவ்வளவு சீக்கிரம் பேசித் தீர்க்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரம்



1989 மார்ச் 31] [திரு. கோ. வீரையன்]

பேசித் தீர்ப்பதன் மூலமாகத்தான் அந்தப் பகுதியைப் பாதுகாக்க முடியும் என்பது தான் யதார்த்த நிலைமை. எனவே டிரிப்யூனல் என்பது வேண்டுமானால் நாம் அரசியலுக்குப் பயன்படுத்த முடியுமே தவிர, அந்தப் பகுதி மக்களுக்கு அது பயன்படாது. பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்ப்பது தான் பயன்படும் என்று அன்றைக்கு நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம். எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து ஆதரித்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னது உண்மையானது அல்ல என்பதை விளக்குவதற்காக மட்டும் நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிரிப்யூனல் வேண்டாமென்று சொல்கிறார்கள். காவிரிப் பிரச்சினையில் இன்றைக்குப் பேசித் தீர்க்கவேண்டுமென்று சொன்னால், நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்வதெல்லாம், இப்போது காவிரிப் பகுதியில் கட்டப்படுகின்ற அணைக்கட்டுத் திட்டங்களை அவர்கள் நிறுத்தத் தயாரா? டிரிப்யூனலிலே நாம் சொல்லியிருப்பது எல்லாம், டிரிப்யூனல் அங்கே எடுத்துக்கொள்ளப்பட்ட உடனே, காவிரிப் பகுதியிலே புதியதாக கர்நாடக அரசு கட்டுகின்ற அந்தக் கட்டுமானப் பணிகளை நிறுத்த வேண்டுமென்ற அந்த உணர்வைத்தான் முதலிலே சொல்லி இருக்கிறோம். ஏனென்றால் அங்கே பேசித்தீர்த்துக் கொண்டேயிருப்போம் என்று சொன்னால், கட்டி முடித்த பிறகு நமக்குத் தண்ணீர் வராது. பாலாறு போல் காவிரி ஆறு வற்றிப் போகும் என்பதை மட்டும் மாண்புமிகு முதலமைச்சருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் அவர் காவிரி பாய்கிற மண்ணுக்குச் சொந்தக்காரர். ஆகவே அவர் நம்மைவிட அக்கறையோடு இருப்பார் என்ற உணர்வோடு நான் அடுத்த பிரச்சினைக்குப் போகிறேன்.

அடுத்தது தொழிற்துறை சம்பந்தப்பட்டது. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சருடைய அந்த அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில், புதியதாக தமிழகத்தில் தமிழக அரசால் தொடங்கப்படும் தொழில்களைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. புதிய நூற்பாலைகளோ, கரும்பு ஆலைகளோ அல்லது சர்க்கரை ஆலைகளோ எதையும் நாம் ஆரம்பிப்போம் என்று சொல்லக் கூடிய கூற்றுகள் ஏதுவும் இல்லை.

அதேபோன்று புதியதாக தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படக்கூடிய குறிப்பு மட்டுமல்லாமல், தொழிற்பேட்டைகள் புதியதாக தமிழகத்திலே இந்த இந்தப் பகுதிகளிலே அமைப்போம் என்ற உணர்வுகூட அதிலே இல்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக கல்வித் துறை சம்பந்தப்பட்டதிலே சொல்லி இருப்பதெல்லாம், தனியார் சுய நிதிக் கல்லூரியில் போதுமான வசதிகள் இல்லை என்ற புகார் வந்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். நாங்கள் சுய நிதிக் கல்வியை அன்றைக்கு வழங்கிய நேரத்தில், போதுமான வசதிகளோடு தான் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னோம். அதில் புகார் வரும் நேரத்தில், நிச்சயமாக நீங்கள் அதில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடுகள் இல்லை.

எங்களுக்கு வேண்டியவர்களும் உங்களுக்குப் பயந்துக் கொண்டு சாதகமாக இருப்பதற்குக் காரணமே அந்தக் காரணம் தான், என்பதை நான் உங்களுக்கு தெளிவாக்க வேண்டியதில்லை. ஆகவே அப்படிப்பட்ட கல்லூரிகள் மீது நீங்கள் நடவடிக்கை எடுப்பதிலே எனக்கு எந்த விதமான மாறுபட்ட கருத்தும் இல்லை என்பதை மட்டும் நான் மிகப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேராசிரியர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம் இதிலே தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறீர்கள். எங்களுடைய காலத்திலேயே தமிழ் படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாகப் போட வேண்டும் என்று சொல்லி நாங்கள் உத்தரவு இட்டிருந்தோம். அதே போல தமிழ் படித்தவர்களுக்கு முன்உரிமை வழங்கக்கூடிய முறையிலே அரசாங்கத்திலே கல்வி திட்டத்திலே ஒரு ஆணையை மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள் வழங்க வேண்டும் என்று பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு நீங்கள் இட்டிலி விலையைக் குறைத்திருக்கிறீர்கள். உணவு அமைச்சர் அவர்கள் கூட இட்டிலி விலையை நாங்கள் குறைத்தோம் என்று சொன்னார்கள். நாங்கள் சந்தோஷப்பட்டோம். ஆனால் இன்றைக்கு பத்து லட்சம் ரூபாய்க்கு விற்பனையாகிற எல்லாக் கடைகளுக்கும், அங்கேயிருக்கிற பண்டங்களுக்கு எல்லாம் 5 சதவீதம் அளவுக்கு இன்றைக்கு நீங்கள் வரியைப் போட்டிருக்கிறீர்கள். ஒரு நாளைக்கு 2.500 ரூபாய்க்கு விற்பனையானாலே போதும், அவர்களுக்கு இன்றைக்கு இந்த வரி வந்துவிடுகிறது. இப்போது விற்கிற விலைவாசியிலே இட்டிலி 2 ரூபாய் என்று சொல்கிற நேரத்திலே 2,500 ரூபாய் ஒரு கடைக்கு வருவாய் என்பதெல்லாம் பெரிய காரியமல்ல. ஆகவே விலைவாசியைக் குறைப்போம் என்று சொல்லக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த இட்டிலி மீதும் அங்கே இருக்கிற தோசை போன்ற பொருள்களின் மீதும் போட்டிருக்கக்கூடிய இந்த வரிகளை நிச்சயமாக குறைக்க வேண்டும் என்று பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதேபோல தேர்தல் அறிக்கையிலே நீங்கள் ஈழத் தமிழர்களைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இந்த பட்ஜெட் உரையிலே ஈழத் தமிழர்களுக்கு வேண்டிய நன்மை செய்யக்கூடிய குறிப்பு எதுவுமே இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேள்வியாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், போன தடவை நான் பேசிய நேரத்திலேயே சொன்னேன் ஈழத் தமிழர்கள் நிலையில் உங்களுடைய தெளிவான நிலை என்ன என்பதைச் சொல்ல வேண்டும் என்று சொன்னேன். அன்றைக்கும் அதற்கு நீங்கள் தெளிவாக பதில் சொல்லவில்லை. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்வதெல்லாம் ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் இன்றைக்கு ஆளுகின்ற தி.மு.க.வினுடைய நிலையான கொள்கை என்ன என்பதை எங்களுக்குச் சொன்னால் நாங்கள் அதை புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு உதவியாக இருக்கும் என்பதை மட்டும் நான் இங்கே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நீங்கள் முன்னால் ஆளுகிற நேரத்திலே உங்களுடைய வாக்குறுதியாக இருந்த தேசியமயமாக்கப்படும் என்கிற கொள்கைக்கு எல்லாம் இந்தப் பட்ஜெட் உரையிலே இடமே இல்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் பஸ்கள் தேசியமயமாக்கப்படும் என்று பல நிறுவனங்களை தேசிய மயமாக்கினீர்கள். அதற்குப் பிறகு எங்கள் காலத்திலே முதலிலே 3 பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்றும் பிறகு 5 பஸ்கள் இருக்கலாம் என்றும் சொன்னோம். ஆனால் இன்றைக்கு பஸ்கள் தேசியமயமாக்குவதிலே உங்களுடைய தெளிவான கொள்கை என்ன என்பதை குறிப்பிட்டுக் காட்டவில்லை என்பதை மட்டும்.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பஸ்கள் தேசியமயக் கொள்கையில் உங்கள் அரசு இருந்தபோது நீங்கள் எடுத்த கொள்கை என்ன? கடைசியாக கொண்டு வந்த அமெண்ட்மெண்ட் என்ன? அது தேசியமயக் கொள்கைக்குச் சார்பானதா அல்லது எதிரானதா?

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முதலமைச்சர் அவர்களிடம் சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் 5 பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி ஒரு சட்டத்தை நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பி இருந்தோம். நாங்கள் செய்தோம். ஆனால் உங்களுடைய நிலை என்ன என்பதைத்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை நிச்சயமாக என்னுடைய பதில் உரையிலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். நிச்சயமாகச் சொல்வேன். ஆனால் தேசியமயக் கொள்கையைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்து அதை எதிர்த்து பஸ் முதலாளிகள் ஹைகோர்ட்டுக்கு சென்று,

கழக அரசு கொண்டு வந்த கொள்கை சரியானது என்று ஹை கோர்ட்டிலே தீர்ப்பு ஆன பிறகு பஸ் முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று 1987 ஆம் ஆண்டு வரையில் சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு நடைபெற்று திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த இந்தக் கொள்கை சமதர்மமானது, எனவே பஸ் தேசியமயமாக்கப்படுவதை முதலாளிகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு அளித்த பிறகு அ.தி.மு.க. அரசு இது குறித்து எடுத்த நிலை என்ன ?

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய முதலமைச்சரைப் பொறுத்த வரையில் ஒரு தெளிவான கொள்கையாக 50 சதவீதம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு தனியார் பஸ்கள் இருக்க வேண்டும். அரசாங்கப் பேருந்துகளும் இருக்க வேண்டும் என்ற அளவிலேதான் கடைசியிலே நாங்கள் முடிவு செய்தோம். ஆனால் நீங்கள் பட்ஜெட் உரையிலே ஒன்றுமே சொல்லவில்லை..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விரைவிலே முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ;** நீங்கள் பதில் சொல்லுகிற நேரத்திலே அதைப்பற்றி பதில் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதேபோல் அன்றைக்கு நாங்கள் ஆட்சி செய்கிற நேரத்திலே, துழைவு வரி வந்த நேரத்திலே நீங்களும் சேர்ந்து அதை தடுத்து நிறுத்தினீர்கள். நுழைவு வரி தமிழ்நாட்டிற்குள்ளேயே வரக்கூடாது என்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு விருவிறுப்பாக இருந்தது. இன்றைக்குப் புதிதாக கொல்லை வழியாக மோட்டார் வாகனங்கள் வேறு மாநிலத்திலேயிருந்து வாங்கி தமிழகத்திற்குக் கொண்டு வரப்படும் சமயத்திலே நுழைவு வரி என்று சொல்லி புதியதாக நுழைவு வரியை ஆரம்பித்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு) சேல்ஸ் டாக்ஸ் மட்டும் அல்லாமல் நுழைவு வரி என்றே போட்டிருக்கிறீர்கள்,

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குறைந்த வரி கட்டி அவர்கள் அங்கே ரிஜிஸ்தர் பண்ணி விடுகிறார்கள். இங்கே ரிஜிஸ்தர் பண்ணினால் எந்த அளவுக்கு வித்தியாசம் இருக்கிறதோ, அந்த வரியைக் கட்ட வேண்டுமென்றுதான் போட்டிருக்கிறோம். அதற்கு நுழைவு வரி என்று பெயர். நுழைவு வரி என்று கடந்த ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட வரி வேறு. இது வேறு.

(முற்பகல் 11-50)

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அந்த சப்ஜெக்ட் தெரியும். வித்தியாசம் இருக்கிறது. அதை நீங்கள் ஈக்குவல் பண்ணியிருக்கிறீர்கள். ஆனால், வாசகம் என்ன போட்டிருக்கிறீர்கள் என்றால் நுழைவு வரி என்று போட்டிருக்கிறீர்கள் தயவு செய்து மர்ண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். எங்களைப் பொறுத்த அளவில் நுழைவு வரி என்று சொல்லி உங்களுக்கு நுழைவு வரி





யிலே எப்படியெப்படியெல்லாம் நுழையலாம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு அதிகாரிகள் இருப்பார்கள் என்பதை பணிவோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். போனதடவை 1977-78லே சட்டமன்றத்திலே மர்ண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அரசாங்கத்திலே தலையீடு இருக்கக் கூடாது என்று பல நேரங்களில் பேசியிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு நான் தவறாகச் சொல்லவில்லை. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பல பேர் அரசியலில் இருக்கிறார்கள். நாங்கள் பாராட்டுகிறோம். அரசியலில் யார் வரவேண்டுமென்று ஒரு குறியீடு கிடையாது. யார் வேண்டுமானாலும் வரலாம். இன்றைக்கு இங்கு இருக்கின்ற மரியாதைக்குரிய ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் அவர்களுடைய மகனாக இருக்கிறார். அவர் அரசியலில் இருக்கிறார். அவர் இங்கே பத்திரிகையிலோ, பொது நிகழ்ச்சியிலோ, அரசாங்கம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியிலோ கலந்து கொள்கிறார் என்றால் நாங்கள் மாறுபட்ட கருத்து சொல்ல முடியாது. அது அவருடைய உரிமை. அரசாங்கத்திலே எல்லோருக்கும் உள்ள உரிமை. ஆனால், மதுரையிலே மரியாதைக்குரிய அருமை சகோதரர் மு.க. அழகிரி அவர்களுடைய பெயரைப் போட்டுத்தான் அங்கே நடக்கிற அரசாங்க நிகழ்ச்சி, எல்லா நிகழ்ச்சிகளிலேயும் விளம்பரம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர் பெயரைப் போட்டால் தான் அரசாங்கத்தினுடைய நிகழ்ச்சியே நடக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு சொல்ல விரும்புகிறேன். இதை ஒரு அரசியல் தலையீடாகக்கூட நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, முதலமைச்சர் அவர்களுக்கு மகனாகப் பிறந்துவிட்ட காரணத்தினாலேயே அவர்கள் அரசியலிலே ஈடுபடக் கூடாது என்று யாரும் நினைக்க மாட்டார்கள். (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களாலே எடுத்துச் சொல்லப்பட்ட அருமைத் தம்பி மு.க. அழகிரி அவர்களும் அரசியலிலே ஈடுபடக் கூடாது என்ற காரணத்திற்காக கடந்த ஆட்சியினாலே அவரும் சிறைச்சாலையிலே அடைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர் மீது கடந்த ஆட்சி பல பொய் வழக்குகளையும் போட்டிருக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணமே அவர் முதலமைச்சருடைய மகன் என்பது மட்டுமல்ல ; அவர் அரசியலிலே ஈடுபட்டிருக்கிறார் என்ற காரணத்தினாலே தான்.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** நான் தவறு என்று சொல்லவில்லை. இப்பொழுது மு. க. ஸ்டாலின் இருக்கிறார் என்று சொன்னால் அரசாங்கத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். அவர் நிகழச்சியிலே கலந்து கொள்வதிலே, பேர் போடுவதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து

இல்லை. என்னுடைய தொகுதிக்கு வந்தாலும் நான் பேர் போட்டுத்தான் ஆக வேண்டும். அதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. மரியாதைக்குரிய அருமை சகோதரர் அழகிரி அவர் கள்........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, அரசு விழா இல்லை. ஊராட்சி ஒன்றிய விழா ஒன்றில் ஒரு பாராட்டுக் கூட்டத்தில் அழகிரியின் பெயர் போடப்பட் டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய காரணத் தால், நான் அது கூடத் தவறு என்று கருதுகிறேன். திரு. வீராசாமி அவர்கள் சொன்னதைப் போல் நான் வக்காலத்து வாங்க விரும்பவில்லை. அதைக் கூட நான் தவறு என்று கருதுகிறேன். அதுவும் தவிர்க்கப்படும்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அரசாங்கத்தைச் சுட்டிக்காட்டு கிறோம் என்று சொன்னால், குறைகளைச் சொல்லி அரசாங் கத்தை விமர்சிக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. எங்களைப் பொறுத்த வரையில் ஒரு நல்ல அரசாங்கமாக நீங்கள் இருக்க வேண்டும். நல்ல எதிர்க் கட்சியாக நாங்கள் இருக்க வேண்டும் என்ற உணர்வோடு தான் நாங்கள் செயல்படுகிறோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லிக் கொண்டு, கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறேன். (குறுக்கீடு) முத்திரை போட்டிருக்கிறது. பி.ஆர்.ஓ. லெட்டர் அது. நான் தவறு என்று விமர்சனமாகச் சொல்லவில்லை. இப்படி நடக்கிறது என்று சொல்கிறேன். நான் பெரிய பிரச்சினையாகச் சொல்லவில்லை. ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில் நீங்கள் ஒரு நல்ல ஆளும் கட்சியாக இருக்க வேண்டும். நாங்கள் ஒரு நல்ல எதிர்க் கட்சியாக இருக்க வேண்டும் என்ற உணர்வோடு செயல்படுகிறோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். 10 திங்களாக கண் விழித்துப் பார்த்திருந்து பட் ஜெட்டை தயாரித்தேன் என்று சொன்னார்கள். அதிலே அவருடைய தமிழ் வளத்தையும், அவருக்கு இருக்கின்ற வார்த்தை ஜாலங்களையும், சாமர்த்தியத்தையும் நான் பார்த்து பாராட்டுகிறேன் என்று சொல்லி இந்த பட்ஜெட்டிலே ஒன்றுமே இல்லை என்று தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்தில் எனது பேச்சினை துவக்கு முன் எனக்கு இந்த வாய்ப்பினைத் தந்த எங்களது தானைத் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், இன மான பேராசிரியர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டச் செயலாளர் மாண்புமிகு உள்ளாட்சித்துறை





800 009 144357

அமைச்சர் அவர்களுக்கும் என்னை இந்த அவையின் உறுப்பின ராக தேர்ந்தெடுத்த இராசிபுரம் தொகுதிவாழ் மக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

25–3–1989ஆம் நாள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையை மனமாரப் பாராட்டி வரவேற்று சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். '' நீர் இன்றி அமையாது உலகு '' என்ற குறளுக்கு ஏற்ப மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வரும் ஆண்டில் 6,000 குக்கிராமங் களுக்கு குடிநீர் வழங்கவும் சிற்றூர், பேரூர், நகரங்கள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் ரூபாய் 155.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதை கிராம மக்களின் சார்பாக வரவேற்றுப் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தினை நிறைவேற்றும்போது தொலை நோக்குடன் நீண்டகால அடிப் படையில் திட்டங்களை வகுத்து நிறைவேற்றவேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், மீனவர் களுக்கும் ரூபாய் 49 கோடி செலவில் 45,000 கான்கிரீட் வீடு களைக் கட்டித்தர நிதி ஒதுக்கிய அரசைப் பாராட்டுகிறேன். என் தொகுதியில் ஆதிதிராவிட மக்கள் மிக அதிகமாக வாழ் கின்றனர். இத்திட்டத்தின் மூலம் என் தொகுதியில் அதிக வீடுகள் கட்டித் தர அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு குடும்பத்தில் தலைவன் இறந்துவிட்டால் அந்தக் குடும்பம் படும் அவதி மிகவும் அதிகம். அதுவும் ஏழைக் குடும்பத் தலைவன் இறந்துவிட்டாலோ, அந்தக் குடும்பம் பூராவும் சீர் குலைந்துவிடும். அத்தகைய ஏழைக் குடும்பங்கள் தங்கள் தலைவர் களை இழந்து விட்டால் அக்குடும்பம் மறுவாழ்வு பெற உதவும் வகையில் அந்தக் குடும்பத்திற்கு இந்த அரசு ரூபாய் 2,000 மானிய மாக வழங்க முடிவு எடுத்து, அதற்கென ரூபாய் 5 கோடி ஒதுக்கி யுள்ளதை மனமாரப் பாராட்டி வரவேற்கிறேன்.

எனது தொகுதித் தேவைகள் பற்றி ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். என் தொகுதி மலைகளால் சூழப்பட்ட ஒரு தொகுதியாகும். அங்கு ஏழை விவசாயிகளும், கைத்தறி நெசவாளர்களும் அதிகம். குடிநீர்த் தட்டுப்பாடு மிக அதிகம். எனது தொகுதியைச் சுற்றி போதமலை-சித்தர் மலை, கொல்லி மலை என்று மலைகள் உண்டு.

அந்த மலைகளின் அடிவாரங்களில் சிறு, சிறு நீர்த்தேக்கங் களைக் கட்டினால் மழைக் காலங்களில் பெருகி வரும் நீர் வீணாகாமல் தேக்கி வைக்கப்படும். இதனால் நிலத்தடி நீர்

D
V211.21(085
N85.6.3

[திரு. ஏ. சுப்பு] [1989 மார்ச் 31

அளவு உயர்வதோடு, கோடைக் காலங்களில் விவசாயத்திற்கு இந்த நீர் உதவும். இதனால் ஏழை விவசாயிகள் மிகவும் பயனடைவார்கள். குடிநீர்த் தட்டுப்பாடும் தீரும். எனவே, சித்தர்மலை அடிவாரத்தில் ஒரு நீர்த் தேக்கமும், போதமலை அடிவாரத்தில் புதுப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு நீர்த்தேக்கமும் கொல்லிமலை அடிவாரத்தில் ஜேடர்பாளையம் கிராமத்தில் ஓர் நீர்த்தேக்கமும் பச்சுடையாம்பாளையம் கிராமத்தில் ஓர் நீர்த்தேக்கமும் வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கோம்பைக்காட்டில் ஓர் நீர்த் தேக்கமும் கட்டித்தர அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மரவள்ளிக் கிழங்கு அதிகம் உற்பத்தியாகிறது. சேகோ பேக்டரிகளும் அங்கு நிறைய உள்ளன. ஆகவே, எனது தொகுதியில் கூட்டுறவுத் துறை மூலம் ஓர் குளுகோஸ் தொழிற்சாலை அமைத்துக் கொடுக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாமகிரிப்பேட்டை பேரூராட்சி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு முழுமையாகத் தீர்வு காண அப்பேரூராட்சிக்கு தற்போது குடிநீர் வழங்கிவரும் கோரையாறு திட்டத்தை விரிவு செய்து, கோரையாற்றில் மேலும் ஒரு ஆயிரம் அடி ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பிள்ளாநல்லூர் பேரூராட்சியில் 9-வது வார்டில் நிரந்தரமாக நீர்வளம் உள்ள கிணற்றை குடிநீர்—வடிகால் வாரியம் எடுத்து, தூர் எடுத்து, சுற்றுச் சுவர் கட்டி, ஆழப்படுத்தி குடிதண்ணீர் வழங்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சௌரிபாளையம்—மதியம்பட்டி கிராமங்களுக்கு இடையே உள்ள மணிமுத்து ஆற்றில் ஒரு பாலம் அமைத்து அப்பகுதி மக்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து தர நடவடிக்கை எடுக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள வெண்ணந்தூர் பேரூராட்சிக்கு, கோம்பைக் காட்டிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தரப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

புதுப்பட்டி பேரூராட்சிக்கு, போதமலை அடிவாரத்தில் மத்திமடவு என்ற இடத்தில் கிணறு வெட்டி குடிநீர் வழங்கும் திட்டத்தையும், சிராப்பள்ளி பேரூராட்சிக்கு, காந்தி அருந்ததியர் காலனி, சின்ன காக்காவேரி கிராமங்களுக்கான கூட்டுக்



1989 மார்ச் 31] [திரு. ஏ. சுப்பு]

குடிநீர்த் திட்டத்தையும் நிறைவேற்றித் தர அரசைக் கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதிக்குட்பட்ட அத்தனூர் பேரூராட்சி—குமாரபாளையம்—தொட்டிய வலசு—பொன்பரப்பிபட்டி—அனந்தகவுண்டம்பாளையம் ஆகிய ஊராட்சி மன்றங்களுக்கு கோம்பைக்காட்டில் புதிய கிணறு ஒன்றை வெட்டி, குடிநீர்—வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வசதி செய்து தர திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

எனது தொகுதியில் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இங்கு இப்பொழுது கடுமையான குடிநீர் பற்றாக்குறை உள்ளது. அதைத் தீர்க்க நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு 25 ஆழ்துளை கிணறுகளும், இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 ஆழ் துளை கிணறுகளும், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 25 ஆழ்துளை கிணறுகளும், இராசிபுரம் நகரத்திற்கு 20 ஆழ்துளைக் கிணறுகளும் ஆக என் தொகுதிக்கு 100 ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து, தொகுதி மக்களுக்கு குடிநீர் பற்றாக்குறையை நீக்க வேண்டுகிறேன்.

இராசிபுரம் நகருக்கு குடிநீர் நிரந்தரமாக கிடைக்க வகை செய்யும் நெடுங்குளம் இராசிபுரம் திட்டத்தில் தற்போது ஒரு டிவிசனில் தான் வேலை நடப்பதாக அறிகிறேன். திட்டத்தை விரைந்து செயல்படுத்த 4 டிவிசன்களை அமைத்து மக்களின் குடிநீர் குறைபாட்டை தீர்த்திட, உடனே அத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அரசை வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் விவசாயத்திற்கு அடுத்தபடி கைத்தறி நெசவாளர்கள் மிகவும் அதிகமாக வாழ்கின்றனர். கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையைப்பற்றி நாம் நன்கு அறிவோம். குறிப்பாக நூல் விலை ஏற்ற இறக்கத்தால் வருடம் முழுவதும் கைத்தறி நெசவாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வாழவே இயலாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இந்த நிலை மாற அரசே நூல் மில்களில் இருந்து நூலை கொள்முதல் செய்து அதனை அரசு டெப்போக்கள் மூலம் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கும், தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கும் போதுமான அளவிற்கு நிர்ணயித்த விலைக்கும் விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு தமிழ்நாடு கைத்தறி நிதி வர்த்தக கழகத்தில் தொழில் அபிவிருத்திக்காக கடன் பெற்றுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும் மற்றும் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களில் வீடு கட்ட கடன் பெற்றுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும் கடனுக்குரிய வட்டியையும் அபராத வட்டியையும் அறவே நீக்கி கைத்தறி ஏழை நெசவாளர்களின் கடன் பளுவை குறைக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி இராசிபுரம் வட்டத்தை தொழிலில் பின் தங்கிய வட்டமாக முந்தைய அரசு அறிவித்தது. அவ்வாறு அறிவித்தும் எவ்விதமான புது தொழில்களும் உருவாகவில்லை.

[திரு. ஏ. சுப்பு] [1989 மார்ச் 31

எனவே அரசே முன்வந்து ஒரு சிட்கோ தொழிற்பேட்டையை
நிறுவி தொழில் முனைவோருக்கு வாய்ப்புத் தர வேண்டுமாய்
கேட்டுக்கொள்கிறேன்.

இராசிபுரம் நகரத்திற்கு பனமரத்துப்பட்டி ஏரியில் கிணறு
களை வெட்டி அதில் கிடைக்கும் நீரை குடிநீருக்காக வழங்கப்
பட்டு வருகிறது. இராசிபுரத்திற்கு குடிநீர் கிடைக்க வேறு
வாய்ப்புகள் எதுவும் தற்போது இல்லை. இந்த சூழ்நிலையில்
சேலம் நகர கழிவு நீரை பனமரத்துப்பட்டியில் தேக்கி, ஏரியை
கழிவு நீர்ப் பண்ணையாக ஆக்க முயற்சிகள் நடப்பதாக அறி
கிறேன். அப்படி நடந்தால் இராசிபுரம் நகர மக்கள் குடிநீருக்கு
வழியின்றி தவிக்கும் நிலை ஏற்படும். எனவே, நெடுங்குளம்
இராசிபுரம் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு அதன் மூலம்
இராசிபுரத்திற்கு காவிரி நீர் கிடைக்கும் வரை பனமரத்துப்பட்டி
யில் கழிவு நீர் பண்ணை அமையாமலும், பனமரத்துப்பட்டி ஏரி
நீர் இராசிபுரம் நகரத்திற்கு எவ்வித தடங்கல் இன்றி கிடைக்க
வும் செய்து இராசிபுரம் நகர மக்களை காக்க வேண்டுமாய்
கழக அரசை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை அரப்புளீஸ்வரர் கோயிலிலிருந்து என்றும்
வற்றாத நீர் வீழ்ச்சியான ஆகாய கங்கை வரை பாதை
அமைக்க முந்தைய அரசால் திட்டமிடப்பட்டு இன்று வரை
நிறைவேற்றப்படவில்லை. சுற்றுலாப் பயணிகளை கவரவும்
மலைவாழ் மக்களும் பயன் அடைய இந்த பாதையை அமைத்துத்
தருமாறு வள்ளல் வல்வில் ஓரி விழா கண்ட முதல்வர் அவர்களை
வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் சாலை
வசதிகள் மிகவும் குறைவாக இருக்கிறது. அவைகளுக்கு சாலை
வசதியை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

சேலம் மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கின்ற
காரணத்தால் அதை இரண்டாகப் பிரித்துக் கொடுக்கும்படி
அரசை வேண்டி கேட்டுக்கொள்கிறேன். பட்டணம் பேரூ
ராட்சிக்கு போதமலை அடிவாரத்திலிருந்து குடிநீர்—வடிகால்
வாரியத்தின் மூலம் ஒரு திட்டத்தை நிறைவேற்றி மக்களின்
குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று அரசை
வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது ராசிபுரம் நகராட்சி மன்றத்தில் குடிசைகள்
நிரம்பி இருக்கின்றன. அந்த குடிசைகளை அகற்றி, குடிசை
மாற்று வாரியம் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்படி
அரசினை வேண்டிக் கேட்டுக் கொண்டு, இந்த
நிதிநிலை அறிக்கையை வரவேற்று என் உரையை நிறைவு செய்
கிறேன், நன்றி, வணக்கம்.



1989 மார்ச் 31]

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை
அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மாமன்றத்
தில் சமர்ப்பித்து இருக்கின்றார்கள். இந்த அவையினர் ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்று கேட்டு இருக்கின்றார்கள். இந்த
நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகள் மீது என்னுடைய விவாதத்தை
முன் வைப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அனுமதி
தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்குகிறேன்.

இன்றைக்கு 1989–90 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை,
அதனுடைய திருத்தப்பட்ட மதிப்பீடுகள் வருவாய் 3,341·48
கோடி ரூபாய் என்றும், செலவினங்கள் 3,650.46 கோடி ரூபாய்
என்றும், பற்றாக்குறையாக 308.98 கோடியையும் நாம் காண்
கிறோம். இதிலே திட்டப் பணி ஒதுக்கீடுகளுக்கு 1,457 கோடி
ரூபாய் இருந்தது, அதிலே 255 கோடி ரூபாயை திட்டப்பணியிலே
இருந்து பின்வாங்கி கொண்டதால், எடுத்துக்கொண்டதால்
இன்றைக்குத் திட்டப்பணிகளுக்கான ஒதுக்கீடுகள் மட்டும்
1,202 கோடி ரூபாயாக இருக்கிறது. இதை கடந்த ஆண்டு
களோடு ஒப்பிட்டால் மிகப்பெரிய மாறுதல் இதிலே கிடையாது.
1 கோடி ரூபாய்தான் வித்தியாசம். மொத்தத்தில் திட்டப்
பணிகளில் மிகப்பெரிய வெட்டு விழுந்து இருக்கிறது. இதற்கு
இந்த அரசுதான் காரணம் என்று நான் சொல்லவில்லை. கடந்த
கால சூழ்நிலைகளும் சுட்டிக்காட்டப்பட்டு இருப்பதை நான்
ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மொத்தத்தில் 20 சதவீதம்,
வளர்ச்சித் திட்டங்களில் மாபெரும் வீழ்ச்சி, எதிர்பாராத
வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டப் பணிகளுடைய
வீழ்ச்சியினால், ஒரு மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் இருந்த
இளைஞர் சமுதாயம் வேலை வாய்ப்புகள் எல்லாம் உருவாகும்
என்ற எண்ணத்திலே இருந்த இளைஞர் சமுதாயமும், வேலை
களைத் தேடி அலைந்து கொண்டிருக்கிற ஒரு மாபெரும் பட்டாள
மும் இன்றைக்கு அதிருப்தியடைந்த நிலையிலே இருக்கின்றார்
கள், மொத்தத்தில் ஒட்டுமொத்தமான பற்றாக்குறை, திட்ட
மதிப்பீடுகளுக்கான செலவினங்களை குறைத்துக் கொண்டதற்
குப் பின்னாலும் இறுதிப் பற்றாக்குறையாக 175.4 கோடி
ரூபாய் வருகிறது. இதிலே மத்திய அரசு நம்முடைய முதல்வர்
அவர்களுடைய கோரிக்கையை ஏற்று 21.5 கோடி ரூபாயை
வெளிச்சந்தையிலேயிருந்து பெற்றுக் கொள்வதற்கு அனுமதி
அளித்து இருக்கிறது. மீதம் இருக்கின்ற பற்றாக்குறை, துண்டு
விழுந்திருக்கின்ற 150 கோடி ரூபாயிலும் திட்டக் குழு 35 கோடி
ரூபாயை தரும் என்று மைய அரசு பெருந்தன்மையோடு ஒத்துக்
கொண்டிருக்கிறது. அதற்காக தலைவர் ராஜீவ் காந்தி அவர்
களுக்கு நான் இந்த மன்றத்தின் சார்பாக நன்றி கூற கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதற்கும் மேலாக நம்முடைய முதல்வர் அவர்கள் தன்னு
டைய சாதுரியத்தால் புதிய நிதி ஆதாரங்களை தேடிக் கண்டு
பிடித்து ஒரு 50 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளை விதித்து இருக்
கிறார்கள். அதுபோக மீதம் 65 கோடி இன்னும் துண்டு

விழுகிறது. அதற்கு இந்த அரசு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தேவையற்ற வாரியங்கள் சிலவற்றை கைவிட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுபோகவும் ''கன்ஸைன்மெண்ட் டேக்ஸ்''க்கு மத்திய அரசு அனுமதி தரும், அதன்மூலமாக வர இருக்கின்ற வரித் தொகையும் இந்த நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட வரவு—செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்காக 10 தினங்கள் தான் கஷ்டப்பட்டதாக முதல்வர் அவர்கள் இந்த மன்றத்திலே அறிவித்தார்கள். அதற்கெல்லாம் நான் முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கும் மேலாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் புரட்சிகரமாக ஒன்றைச் சொல்லியிருப்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசின் பல இலாக்காக்களில் இருக்கின்ற உபரி ஊழியர்களையெல்லாம் எடுத்து 'சென்ட்ரல் மேன் பவர் ஸெல்' என்று ஒன்றை உருவாக்குவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட 'சென்ட்ரல் மேன் பவர் ஸெல்' மூலமாக புதிதாக ஆட்கள் தேவைப்படுகின்ற இடங்களுக்கு போடுவதன் மூலமும், இவற்றையெல்லாம் செய்வதன் மூலமும் நிச்சயமாக இந்தப் பற்றாக்குறையை ஈடுகட்ட முடியும். அவர்களுடைய இந்தச் செயலுக்கு நான் நன்றி சொல்லவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12–10)

ஆனால் இந்த நிலைமையில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு; சட்டப்படி இயங்குகிற அரசு. இங்கே நடைபெற்றுக்கொண்டிருப்பது 'ரூல் ஆஃப் லா'. நாம் இங்கே வீற்றிருப்பதும் சட்டங்களின் அடையாளமாகத்தான். சட்டங்களின் அடையாளமாக இருந்து ஆட்சி செய்கிறோம். தேசிய முன்னணித் தலைவர் திரு. வி. பி. சிங் கூட சொல்லியிருக்கிறார். இது சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு; கலைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கலைக்கக்கூடாது; கலைக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

இந்த அரசை கலைக்க வேண்டுமென்ற கோரிக்கையை காங்கிரஸ் தரப்பிலிருந்து மைய அரசுக்கு யாரும் சொல்லவில்லை. இங்கே நடந்த சம்பவங்களை மீண்டும் சுட்டிக்காட்டி, இப்போது சபையில் நிலவும் அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. நடந்த சம்பவங்களுக்கு நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லியிருக்கிறோமே தவிர கலைக்க வேண்டுமென்று சால்லவில்லை. இங்கே நடைபெற்ற சம்பவங்கள் பற்றி மனு





அந்த மனுவைப் பெற்றுக்கொண்டு
கொடுத்திருக்கிறார்கள். அவர்தான்
அதை ஜனாதிபதிக்கு அனுப்பியிருக்கிறார்கள்;
நடவடிக்கை எடுக்க முடியும். அதனால் இந்த சட்டசபையை
உடனடியாகக் கலைக்க வேண்டும்; உடனடியாக நாங்கள்
ஆட்சிக்கு வரவேண்டும்; குறுக்கு வழியிலே ஆட்சிக்கு வரவேண்டும்
என்ற எண்ணம் நாடாளுமன்ற ஜனநாயகத்திலே நம்பிக்கை
வைத்திருக்கிற எங்களுக்கு துளியும் கிடையாது என்பதைச்
சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இது தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை, தேர்ந்தெடுக்கப்
பட்ட அரசாங்கம் ....

திரு. இரா. மோகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
கள், ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்
போது காங்கிரஸ் கட்சிக்கு இந்த அமைச்சரவையைக் கலைக்க
வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்ற கருத்தைக் கூறினார்கள்.
ஆனால் பத்திரிகையில் வருகிற செய்தி வேறுவிதமாக இருக்கிறது.
நாடாளுமன்ற இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்
கையெழுத்திட்டு ஒரு மனுவை ஜனாதிபதியிடம் கொடுத்ததாக
வும், ஜனாதிபதி அதை கவர்னரிடம் கொடுத்ததாகவும் கவர்னர்
அதற்கு அறிக்கை அனுப்பி இருப்பதாகவும் எட்டு காள செய்தி
பத்திரிகையிலே வந்திருக்கிறது; அப்படி பிரச்சாரம் செய்யப்
படுகிறது. அந்தச் செய்தி உண்மையா இல்லையா என்று மாண்பு
மிகு இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்களிடம் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : சார், பாயின்ட் ஆஃப்
ஆர்டர். துணைத் தலைவரவர்களே, ஏதோ காங்கிரஸ் கட்சி
நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஆட்சியைக் கலைக்க
வேண்டும் என்று பாராளுமன்றத்திலே ஜனாதிபதியிடம் மனு
கொடுத்தார்கள் என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்சினை
யிலே காங்கிரஸ் கட்சியின் நிலைமைபற்றி தெளிவுபடுத்த விரும்பு
கிறேன். அரசியல் சாசன சட்டம் என்ன சொல்கிறதோ அதை
மட்டும்தான் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டிருக்கிறதே தவிர
யாரோ, அல்லது எந்த உறுப்பினரோ சொன்னார் என்பதற்
காக அதை ஏற்றுக்கொள்ளாது. அரசியல் சாசனம் சொல்
வதைத்தான் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. இரா. மோகன் : துணைத் தலைவரவர்களே, அவர்
குறிப்பிட்டதால் ஒரு விளக்கத்தை மட்டும் தெரிவிக்க விரும்பு
கிறேன். இந்த அவையிலே நடைபெற்றது ஒன்று, இப்போது
உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கூற்றை வேண்டுமென்றே
சொல்கிறார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளு
மன்ற உறுப்பினர் ரங்கராஜன் குமாரமங்கலம் என்பது அவரு
டைய பெயர்—அவர் பாராளுமன்றத்திலே தகராறு செய்திருக்
கிறார். ஒரு அமைச்சரிடத்திலே தகராறு செய்து வாதாடுகின்ற

[திரு. இரா. மோகன்] [1989 மார்ச் 31

அளவுக்கு சூழ்நிலை உருவாகி, இரண்டு மணி நேரம் பாராளு மன்றம் நடைபெறாத அளவுக்கு அண்ணா தி. மு. க. உறுப்பினர் களுடன் சேர்ந்து பேசப்பட்ட பேச்சிலே இந்த அவையைக் கலைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பாராளுமன்ற நிகழ்ச்சி களைப் பற்றி இங்கே விவாதிக்ககூடாது என்று தெளிவாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் அதுபற்றி இங்கே பேச முன்வரவில்லை. இருந்தாலும் ஒன்றை தெளிவு படுத்துகிறேன். ராஷ்டிரபதியிடம் புகார் மனு கொடுத்தார்கள் என்றால் ராஷ்டிரபதி அதை என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வார். அது அவருடைய அலுவலகத்தைப் பொறுத்தது. நாடாளுமன்ற அண்ணா தி. மு.க. உறுப்பினர்களும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் சென்று புகார் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர இந்த அரசை 'டிஸ்மிஸ்' செய்யுங்கள் என்று சொல்ல வில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் மோகன் அவர் கள் ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள் என்று சொன் னார்கள். இப்போது நான் பேசியது அதன்மீதுதான். ஆகவே, நான் பேசவேண்டிய நேரத்தை அதிலே எடுத்துக்கோண்டு மணி யடித்து அமர வைத்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை மீண்டும் தொடருகிறேன்.

முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே, இந்த அவையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இந்த அரசினுடைய கையிலே தான் சட்டம், ஒழுங்கு இருக்கிறது; 'லா அன்ட் ஆர்டர்' இருக்கிறது. ஆனால் இங்கே நடந்துகொண்டிருப்பது 'ரூல் ஆஃப் லா'வா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். எதிர்கட்சியிலே இருக்கிற நாங்கள் இன்றைக்கு நடைபெறுகிற ஆட்சி சட்டப்படி நடைபெறுகிறதா என்று கவனிக்காமல் விட்டுவிட முடியாது.

சட்டமன்றத்திற்கு வெளியே இப்படி நடப்பதை எல்லாம் குற்றமாக நாம் கருதுகிறோம். அதுபோல் இங்கே உள்ளே நடந்த பல காரியங்கள், அது எந்தத் தரப்பினராக இருந்தாலும், அந்தத் தரப்பினராக இருந்தாலும் சரி, இந்தத் தரப்பினராக இருந்தாலும் சரி, குற்றம் இல்லை என்று சொல்ல முடியாது. இதைச் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டி னுடைய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கிறபோது புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய வரிகளை நினைவு கூர்ந்தார்கள்.



1989 மார்ச் 31] [திரு. பி.வி. இராஜேந்திரன்]

''தலையாகிய அறமேபுரி
சரிநீதி யுதவுவாய்
சமமேபொருள் ஜனநாயகம்
எனவேமுர சறைவாய்
இலையே உண விலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவே முர
சறைவாய் முரசறைவாய்!''

என்று சொன்னார்கள். ஜனநாயகத்தைப் பற்றிச் சொல்லித் தான் இங்கே இதைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு உண்மையிலேயே ஜனநாயகம் எல்லாம் கடைப்பிடிக்கப்படுகிறதா, நாமெல்லாம் அனுசரிக்கக்கிறோமா என்பதை இந்த மன்றத்தி னுடைய அனைத்து உறுப்பினர்களுடைய கவனத்திற்கும் நான் விட்டுவிடுகிறேன். இன்றைக்கு இங்கே இருக்கிற உறுப்பினர் களாகிய நமக்கெல்லாம் சாதாரணக் குடிமகனைவிட ''எ பிரிவி லெஜ்ட் சிட்டிஸன்'' என்ற வகையில் அதிக பாதுகாப்புகளும் உரிமைகளும் இருக்கின்றன. இந்த உரிமைகளையும், நமக்கு இருக்கின்ற பாதுகாப்புகளையும் மக்களுக்காக, அவர்களுடைய உரிமைகளை மீட்டுத் தருவதற்காக, அவர்களுடைய பொரு ளாதார மேம்பாட்டுக்காகத் தான் பயன்படுத்த வேண்டுமே ஒழிய ஏதோ நமக்குக் கிடைத்திருக்கிற உரிமைகளை எல்லாம் தாறு மாறாகப் பயன்படுத்தக்கூடாது. ஆனால், அப்படிப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத் தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு 13 ஆண்டுக் கால இடை வெளிக்குப்பின் 10 தினங்கள் தீவிரமாகப் பரிசீலனை செய்து கண்விழித்து இந்த நிதிநிலை அறிக்கையை நம் முன்பு சமர்ப்பித் திருக்கிறார்கள். அந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள்; தன்னுடைய வரிகளிலே சொல்லியிருக்கிறார்கள். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக குரல் எழுப்பி, அதன் விளைவாக ஆட்சிப் பொறுப்பை இழந்துவிட்டதாக அவர்களே சொல்லியிருக்கிறார்கள் நிதிநிலை அறிக்கையில். 1977ஆம் ஆண்டிலே சொல்லி இருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். (குறுக்கீடு) 1975லே சொல்லியிருப்பார்கள். ஆனால் மீண்டும் வந்த தேர்தல்களைப் பற்றி அவர்கள் குறிப்பிடவில்லை. மீண்டும், மீண்டும் வந்த தேர்தல்களில் மக்கள் இவர்களை ஆட்சியில் அமர்த்தவில்லை. அப்படியானால் ஜனநாயகப் படுகொலை செய்தவர்களையா ஆட்சியில் அமர்த்தினார்கள் என்பது தான் என்னுடைய கேள்வியாகும்.

நான் கடந்த 25ஆம் தேதி இங்கே நடந்த சம்பவங்களைச் சொல்லவில்லை. ஆனால் ஜனநாயகப் படுகொலைகளைப் பற்றி யெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது வரிகளிலே

சொல்லியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் ஜனநாயகமா என்ற கேள்வியைக் கூட நான் எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு மிக முக்கியமான இந்த பட்ஜெட் விவாதத்தைப் பற்றி மக்கள் எதிர்பார்க்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாகக் கிடையாது. இன்றைக்கு ஆளுகிற கட்சிக்கு ஓரளவு ஆதரவு தந்துகொண்டிருக்கிற இந்துப் பத்திரிகை கூட சொல்கிறது. இந்த பட்ஜெட் டிஸ்கஷனை எல்லாம் 25-ம் தேதிச் சம்பவங்கள், That has totally over-shadowed everything என்று சொல்கிறது. மொத்தத்தில் இவையெல்லாம் மறக்கப்பட்டு இன்றைக்குப் பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தால் மக்கள் அன்றைக்கு நடந்த சம்பவங்களைப் பற்றித்தான் இன்றைக்கும் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்களே தவிர இந்த ஓராண்டுக்கான நிதிநிலைபற்றிய எண்ணங்கள் முற்றிலுமாக மறைக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிடிருக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரை மீது பேசும்போது நாங்கள் சில கருத்துக்களைச் சொன்னோம். தேர்தல் வாக்குறுதியிலே பலவற்றைச் சொன்னீர்கள், சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று சொல்கிறீர்கள், ஆனால் பலவற்றை விட்டு விட்டீர்களே என்று சொன்னோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இறுதியாக நன்றி தெரிவிக்கிற நேரத்திலே ஆளுநர் உரையிலே புள்ளி, புள்ளியாக வைத்து ஒரு கோட்டைத்தான் காட்டினோம் என்று சொன்னார்கள். அப்போது கூட அமைச்சர் அவர்கள் புள்ளிகளை எல்லாம் இணைத்து ஒரு நல்ல கோலத்தைப் போட்டு அழகான கோலம் கொண்டுவர முடியும் என்று சொன்னார்கள். அப்போது எதிர் தரப்பிலே இருப்பவர்கள் கூட அலங்கோலத்தைச் செய்து விடாதீர்கள், கோலமாகவே இருக்கட்டும் என்று சொன்னார்கள். ஆனால் தொழில் துறையைப் பொறுத்தவரையில் நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற ஒரு சிலவற்றை எல்லாம் பார்த்தால் அலங்கோலம் தான் நடந்திருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தொழில் துறையைப் பொறுத்தவரையில் ஆளும் கட்சியினுடைய சொல்லுக்கும், செயலுக்கும் மிகவும் அதிகமான தூரம் இருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்ட முடியும். சொன்னதையும் அவர்கள் செய்யவில்லை. செய்வதையும் அவர்கள் சொல்லவில்லை என்ற நிலைமை தான் இங்கே எங்களுக்குப் புலப்படுகிறது. ஒரு சில சாதனைகளை; ஆளுநர் உரையிலே சொன்னதையே மீண்டும் இப்போதும் தேர்தல் வாக்குறுதிகளைச் செய்திருக்கிறோம் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மேலவையைக் கொண்டுவருவோம் என்று சொன்னோம், அதைச் செய்துவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து ஒரு தீர்மானம் போட்டு நாடாளுமன்றத்திற்கு அனுப்பியாகிவிட்டது. அதைப்போல ஊராட்சி மன்றங்களுக்கும் அதிக அதிகாரங்களைக் கொடுத்து அவற்றுக்கான காலத்தையும் நீட்டித்துக் கொடுத்திருக்கிறீர்கள். இதை எல்லாம் ஏதோ பெரிய சாதனையாக இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.



இன்றைய நிலைமையில் சட்டமன்றமே தேவையா, இவ்வளவு அமளி நடக்கிறதே, இது தேவையா என்று மக்கள் யோசிக்கிற போது மேலவை ஒன்று தேவையா என்ற எண்ணம் தான் இன்றைக்கும் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு நினைக்கிறேன். ஆளுநர் உரையின்போது இது ஒரு பெரிய சாதனையாக நினைத்தேன். வரட்டும் என்று சொன்னோம். எதிர்க்கவில்லை என்று காங்கிரசும் சொன்னது.

(பிற்பகல் 12.20)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியேகூட தேர்தல் நேரத்திலே மேலவை வேண்டுமென்றுதான் அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை மறுக்கவில்லை. இன்றைக்கும் ஒத்துக் கொள்கிறேன் என்று சொல்கிறேன். வெளியிலே மக்களும் யோசிக்கிறார்கள். இந்த அவை இருப்பதே தேவைதானா என்று மக்கள் யோசிக்கிறார்கள். இதுவும் தேவையா என்று மக்கள் யோசிக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனையோ மாநிலங்களில் கவர்னர்களே தாக்கப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே மேலவை இருப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை.

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களைவிட இந்த அவைக்கு சற்று கண்ணியம் கூடுதல். நமக்கு வடக்கிலே இருக்கின்ற ஆந்திர மாநிலத்திற்குள் இரண்டு நாட்கள் முன்பு நடந்த நிகழ்ச்சிகளை நாம் பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் இங்கு நாம் நடத்தாமல் இருப்பதற்குக் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களைப்பாராட்ட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நிகழ்த்திக் காட்டப்பட்டதைவிட தொழில் துறையிலே இந்த அரசு மாபெரும் சாதனை எதுவும் செய்துவிடவில்லை. இன்றைக்கு மூடிய மில்கள் திறப்பது நடந்திருக்கின்ற விஷயம். வணிகர்கள் நல நிதி ஒன்று தனியாக ஆரம்பிப்போம் என்று சொல்லியிருக்கின்றார்கள். பட்ஜெட்டிலேயே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால் அதே நேரத்திலே மூடிய மில்களை திறப்பதிலே,

மூடிக் கிடக்கின்ற 17 கூட்டுறவு நூற்பாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு, காம்பென்சேஷன், ஈட்டுத்தொகை கொடுப்பதிலே தொழிலாளர்கள் நல நிதி கையாளப்பட்டிருக்கின்றது. தொழிலாளர் நல நிதி என்பது முற்றிலும் தொழிலாளர்களைச் சேர்ந்தது. எம்ப்ளாயீஸ் எம்ப்ளாயர்ஸ் சேர்ந்து காசு போட்டு வைக்கப்பட்டு இருப்பது. அதற்கும் அரசுக்கும் சம்பந்தம் கிடையாது. எக்ஸ் அபிசியோ சேர்மன் ஆகத்தான் தொழிலாளர் நல துறை அமைச்சர் அதிலே இருக்கின்றார்கள். சாதாரணமாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து மற்ற நிதியிலிருந்தும் கொடுக்கப்படுவதுதான் வழக்கம்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சரியாக ஒரு கருத்தைத் தெரிவிக்காத காரணத்தினால் விளக்கம் சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறேன். Labour welfare fund என்று இருக்கிறது. அதற்கு ஒரு சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தில் உள்ள சரத்துக்களையொட்டிதான் அந்த நிதி இப்போது வழங்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் அந்த சட்டத்திற்கு புறம்பாக நிதி வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். ராமகுப்பு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சட்டத்திற்குள்ளாக கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்த பணமானது தொழிலாளர் நல நிதியாக அவர்கள் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒரு ரூபாய் ஒரு ரூபாய் ஆக சேர்த்து தொழிலாளர் நலத்திற்காகச் சேர்த்து வைக்கப்பட்ட பணம். அது வீட்டுவசதிக்காக, தொழிலாளர்கள் நலனுக்காக அங்கே ஒதுக்கி வைத்த பணத்தை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் காலத்திலேகூட அவர்களுடைய நிதியிலிருந்து, அதாவது முதலமைச்சர் அவர்களுடைய நிதியிலிருந்துதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே மாண்புமிகு முதலமைச்சர் நிதியிலிருந்துதான் கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Labour welfare fund என்பது, Employers, Employees and Government மூன்றுமே சேர்ந்து பங்கு கொடுப்பதுதான் அந்த ஃபண்ட் ஆக உருவாக்கப்படுகிறது. இந்த நிதியை ஒழுங்குபடுத்துவதற்காக சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தில் என்னென்ன காரியங்





களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டுமென்று விளக்கம் இருக்கிறது. அந்த விளக்கத்தையொட்டி சட்டபூர்வமாக, சட்டத்தின் அடிப்படையில் நிதி பங்கீடு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் அதிலே முறைகேடு எதுவும் நிச்சயமாக நடைபெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைவிலே முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. வி. இராஜேந்திரன்:** இன்றைக்கு வேலைவாய்ப்பைத் தேடி அலைகின்ற வயதுதான் கூட்டப்பட்டிருக்கிறது. 26 வயது வரை வேலை வாய்ப்புக்கு காத்திருக்கலாம் என்று இருந்த வயது வரம்பு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் 28 வயதாக மாற்றி இன்றைக்கு அதை முதல்வர் கலைஞர் அவர்கள் 30 ஆக மாற்றி தந்து இருக்கின்றார்கள். ஆனால் அதற்கான வாய்ப்புகளை உருவாக்கவில்லை. அதற்குப் பதிலாக வேலையின்றி அலைகின்றவர்கள் இன்னும் ஒரு இரண்டு ஆண்டுக் காலம் வேலை இல்லாமல் அலைகின்ற பட்டாளத்தை உருவாக்கும் என்பதற்குத்தான் இன்றைய அறிவிப்பு பயன்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தொழில் துறையைப் பொறுத்தவரையில், மேலும் சொல்லப்போனால், என்னுடைய தொகுதி வேதாரண்யம் தொகுதி. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, ஆளுங்கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அண்மையில் வேதாரண்ய உப்பு சத்தியாகிரகத்தை நாடகமாக நடத்திக் காட்டியவர்களின் ஆட்சியில் உப்பு உற்பத்தித் தொழில் மரண படுக்கையில் கிடக்கிறது என்று சொல்லி அதை மாற்ற மாமல்லபுரம் கடற்கரையிலிருந்து தூத்துக்குடி கடற்கரை வரையுள்ள உப்பு உற்பத்தி தொழில் வளம் பெற்றிடவும், உப்பு உற்பத்தி தொழிலாளர் வாழ்வு மலர்ந்திடவும், உப்பை மூலப் பொருளாக உபயோகிக்கும் சோடா ஆஸ் தொழிற்சாலையை 100 கோடி ரூபாய் மூலதனத்தில் வேதாரண்யத்தில் உருவாக்கிடவும், அதற்கு நரிமணத்தில் உற்பத்தியாகும் எரிவாயுவை பயன்படுத்துவோம் என்று ஆளும் கட்சியின் தேர்தல் அறிக்கை சொல்கிறது. ஆனால் ஆளுநர் உரையிலும், இந்த வரவு-செலவுத் திட்டத்திலும் பார்த்தேன். இரண்டிலும் ஒன்றையும் காணோம். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்று சொல்வார்கள். மாமல்லபுரத்திலிருந்து தூத்துக்குடி வரைதான் உப்பு உற்பத்தியாகிறது. இப்படி உப்புத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை இப்பொழுதே மறந்துவிட்டீர்களே என்பது குறித்து எனக்கு வேதனையாக இருக்கிறது. மேலும் ஒன்றை சொல்லியிருக்கிறார்கள். உப்பு உற்பத்திக்கு தனி நிறுவனத்தை ஆரம்பிக்

போம் என்று சொல்லியிருக்கிறார்கள். 'சால்ட் மேனிபேக்சரிங் கார்ப்பரேஷன்' என்று ஏதோ ஒன்றை ஆரம்பிப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வாரியம் ஒன்றும் இது வரை ஆரம்பிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் இன்னும் ஒரு நிமிடத்திற்குள் முடிக்க வேண்டும்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிக் கொண்டிருக்கும்போது நிறைய பேர் குறுக்கிட்டபடியால் எனக்கு கொஞ்சம் கூடுதல் நேரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலையில், அன்றைக்கு பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டபோது ஒரு சில தாக்குதல்களால் இங்கே நடந்த சம்பவங்களால், என் கைகளிலும், கால்களிலும் ரத்தம் வழிந்ததேயொழிய இன்றைக்கு இந்த உரையை படித்தபோது என்னுடைய நெஞ்சிலிருந்து ரத்தம் கசிந்துகொண்டிருக்கிறது. காரணம், வேதாரண்யம் தொகுதி ஒரு காங்கிரஸ் தொகுதி என்பதால் அது இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதோ என்ற எண்ணம் கூட எனக்கே உருவாகியிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு வேதாரண்யம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு நிச்சயமாக காங்கிரஸ் என்கிற ஒரே பெயர்தான் காரணமாக இருக்குமோ என்கிற எண்ணம் எனக்கு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு சோடா ஆஸ் திட்டம் வருவதுதான் நியாயம் என்பதோடு கூட தூத்துக்குடி ஆல்காலி கெமிகல்ஸ் தொழிற்சாலை பற்றி கடந்த காலத்தில், பிரசிடெண்ட் ரூலில், அவர்கள் சரியான அறிக்கை ஒன்றை தந்திருக்கிறார்கள். இன்னும் ஒரு நிமிடம் தாருங்கள். அதற்குள் முடித்துவிடுகிறேன்.

(மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் அடுத்த உறுப்பினரைப் பேச அழைப்பேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோடா ஆஸ் தொழிற்சாலையை அங்கே கொண்டு வர ஆவன செய்ய வேண்டுமென்று மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவிரி நீர் இன்றைக்கு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதில் மாண்புமிகு முதலமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். இன்றைக்கு நாடாளுமன்றத்திலும் சொல்லியிருக்கிறார்கள். தமிழக முதல்வரும் கர்நாடக முதல்வரும் கலந்து பேசி, காதல் லெட்டர்கள் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. நடுவிலே குருமார்கள் இந்தத் திருமணத்தை செய்து வைக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திருமணம் விரைவிலே சீக்கிரம் நடக்கட்டும். காதலர்களான





நீங்கள் போனிலும் பேசிக் கொள்ளுங்கள், கடிதம் மூலமும் பேசிக் கொள்ளுங்கள். இந்தத் திருமணத்திற்காக, திருமண விருந்திற்காகத்தானே அங்கேயிருக்கின்ற, தஞ்சை டெல்டா, பகுதியிலுள்ள லட்சக்கணக்கான மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் காவிரி நீர் வரட்டும். இந்தத் திருமணம் கைகூடவில்லையென்றால், ஊடல் இருக்கிறது என்று பொருள். ஊடலுக்கு வழி காண்பதற்காக ஆவது நடுவரை அழையுங்கள், அதையும் விரைவிலே அழையுங்கள் என்று சொல்லி என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒன்றே ஒன்றை சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

7 தினங்களில் வேதாரண்யத்தில் 1,100 மில்லிமீட்டர் மழை பெய்திருக்கிறது. இதுவரை கடந்த 10 ஆண்டுகளில் இவ்வளவு மழை 7 தினங்களில் தமிழகத்தில் பெய்ததில்லை. இன்றைக்கு அதனுடைய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு வேதாரண்யத்தில், தலைஞாயிறு பகுதியில் சில நாட்களுக்கு முன்பு திட்ட கமிஷன் தலைவர் திரு. டி.வி. அந்தோணி வந்திருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், கிழக்கு தஞ்சை மாவட்டம் மட்டுமல்லாமல், இராமநாதபுரம் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தையும் பார்வையிட்டு வேளாண்மை அழிந்து இருப்பதை எல்லாம் கண்டுபிடித்து அன்றைக்கு நிவாரணமளிப்பதற்கு ஆளுநரிடம் பரிந்துரையும் செய்தார்கள். அந்த அறிக்கையை எடுத்துப் பார்த்து அதில் பரிந்துரைத்துள்ள உதவிகளை எங்களுக்கு செய்து தாருங்கள் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்துப் பேசுகிற உறுப்பினர் திரு. மு. இராமநாதன்.

*திரு. மு.இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988—89 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை தொடர்கிறேன். 13 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு அருமையான நிதிநிலை அறிக்கையை தமிழக மக்களுக்கு அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களைப் போன்று கவிஞர் உள்ளத்தை நான் பெற்றிருந்தால், பெரும் புலவன் ஒருவன் பாடியதுபோல இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றித் தனித் தனி விளக்கங்களைச் சொல்லி, மாமன்ற உறுப்பினர்கள் பாராட்டிப் பேசியது போல பேசாமல் புலவன் போல பாடியிருப்பேன்.

''தத்தித் தாதா துதி — துத்தித் துதைதி துதைத்தா தூஅதி
தாதா தித் தத்தூதி
தித்தித்த தித்தித்த தாதெது
தித்தித் தெத்தாதோ
தித்தித்த தாதூ''

என்று பெரும் புலவன் ஒருவன் பாடியிருக்கின்றான்

அது போல எல்லாமே தேனாக, எடுத்தேன், கவிழ்த்தேன் என்று
சிலர் இருந்தாலும் கூட, கொடுத்தேன் உங்களுக்கு மலர்த்
தேன் ; சில பேர் மலைத்தேன் என்று சொல்லக் கூடிய அளவுக்கு
இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்பதை நான்
மனநிறைவோடு இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

(பிற்பகல் 12-30)

இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழை மக்கள், எளிய மக்கள்,
உழைக்கின்ற மக்கள், விவசாய மக்கள், தொழிலாளர்கள்,
ஆசிரியர்கள் என்கின்ற முறையிலே அனைத்து மக்களுக்கும்,
அவர்களுடைய வாழ்விலே ஒளி ஏற்ற வேண்டுமென்ற முறை
யிலே பல்வேறு வகையான திட்டங்கள் தேனாகப் தர
பட்டிருக்கிறது. ஆனாலும்கூட, இந்தக் குறுகிய காலத்தில்
திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற
இந்த இரண்டு மாத கால இடைவெளியில், இன்று எதிர்
வரிசையில் அமர்ந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்
இந்த நிதி நிலை அறிக்கையை விமர்சனம் செய்து பேசியதை
நான் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். இதில் என்ன
ஒரு முக்கியமான கருத்து என்றால், ஆளுகின்ற கட்சி எதிர்க்
கட்சியாகவும், எதிர்க் கட்சி ஆளுகின்ற கட்சியாகவும், வரும்
போது இப்படியெல்லாம் சூடும், சுவையும் இருக்கத்தான் செய்
யும் என்று எனக்கு நானே சமாதானப் படுத்திக் கொண்டேன்.

மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் திருமதி பொன்னம்மாள்
அவர்கள் பேசும் போது ஒன்றைச் சொன்னார்கள். வரிசையாக
நீங்கள் பேசுகின்ற அல்லது சமர்ப்பிக்கின்ற பல நிதி நிலை
அறிக்கைகள், முன்பு ஆட்சிக் கட்சியாக இருந்தபோதும் சரி,
இப்போதும் சரி, மத்திய மாநில உறவுகள், மத்தியிலே கூட்
டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, இந்தித் திணிப்பு என்று
தான் சொல்லிக் கொண்டு வருகிறீர்கள் என்று, பாராட்டு
தலுக்குகிடையிலே இதையும் சொன்னார்கள். நான் இந்த
மன்றத்திலே இருக்கிற தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த
மதிப்புமிக்க உறுப்பினர்களிடத்தில் ஒன்றைக் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். நீங்கள் தொடர்ந்து இந்த மன்றத்தில் ''எங்கே
இந்தித் திணிப்பு எங்கே இந்தித் திணிப்பு'' என்று பேசிக் கொண்டு
வருகிறீர்கள், கேட்டுக் கொண்டு வருகிறீர்கள். நான் ஒன்று
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள்
விடுதிக்குப் போகின்ற வழியிலே மத்திய சர்க்காருடைய
அலுவலகம் ஒன்று இருக்கிறது. பல மாடிக் கட்டிடம் இருக்
கிறது. அந்த அலுவலகத்திற்கு முன்னாலே ஒரு பெயர்ப்
பலகை இருக்கிறது. அந்தப் பெயர்ப் பலகையிலே 'விதேஷ்
சஞ்சார் பவன்' என்று எழுதியிருக்கிறார்கள். நான் சட்ட
மன்றத்திலே இருக்கக் கூடிய எல்லா உறுப்பினர்களும் இதைத்
தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.
'விதேஷ் சஞ்சார் பவன்' என்ற மத்திய அரசுக்குச் சொந்த





மான அலுவலகத்திற்கு இந்தியிலே பெயர்ப் பலகை இருப்பதை
வாதத்திற்கு ஒத்துக் கொண்டாலும், அது என்ன அலுவலகம்
என்று தமிழ் நாட்டிலே உள்ள தமிழர்களாகிய நாம் தெரிந்து
கொள்ள வேண்டாமா ? பிறகு ஆங்கிலத்தில் இருப்பதைப்
படித்தேன். Videsh Sanchar Bhanvan என்று இருந்தது.
தமிழிலே 'விதேஷ் சஞ்சார் பவன்' என்று இருக்கிறது. இப்படி
3 மொழிகளிலே இருக்கிறது. நான் பேருந்தில் வரும்போது,
இந்த மன்றத்து உறுப்பினர்கள் பல பேர்களிடம் கேட்டேன்,
உங்களில் யாருக்காவது தெரியுமா, 'விதேஷ் சஞ்சார் பவன்'
என்றால் என்ன பொருள் என்று தெரியுமா, தமிழ் நாட்டில்
இப்படி ஒரு அலுவலகம் இருக்கிறதே என்று கேட்டேன். தெரிய
வில்லை என்று சொன்னார்கள். நானாவது சொல்லட்டுமா
என்றேன். சொல்லுங்கள் என்றார்கள். எனக்கும் தெரியாது,
ஹோல்சேல் வெங்காய வியாபாரம் செய்யுமிடம் என்று சொன்
னேன். ஹோல் சேல்வெங்காய வியாபாரத்திற்கு இவ்வளவு பெரிய
இடமா என்று பேருந்தில் வந்தவர்கள் கேட்டார்கள். 'எதுவு
மே பொருள் தெரியவில்லை, ஆகவே இப்படிப் பெயர் இரு
க்கட்டுமே என்று சொன்னேன்' உள்ளே போய் கேட்ட
போது Deparment of Foreign Commumication
சொன்னார்கள். அப்படியானால் இந்த மன்றத்திலே நான்
ஒன்று கேட்கிறேன். தமிழ் நாட்டிலே மத்திய அரசாங்கத்தின்
ஓர் அலுவலகம் இருக்கிறது. அதை 'விதேஷ் சஞ்சார் பவன்'
என்று இந்தியிலே எழுதப் பட்டிருப்பதை வாதத்திற்காக
காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏன் இருக்கக் கூடாது என்று கேட்
டாலும் கூட, ஆங்கிலத்தில் எழுதும்போது Department
of Foreign Communication என்று எழுத வேண்டு
மா, வேண்டாமா ? தமிழில் எழுதும்போது ''அயல் நாட்டு
செய்தித் தொடர்பு அலுவலகம்'' என்று எழுத வேண்டுமா,
வேண்டாமா ? அப்படியானால் இதைத் இந்தித் திணிப்பு
என்று சொல்வதிலே தவறுண்டா ? எங்கே திணிக்கப்படுகிறது
என்று திருப்பித் திருப்பி இந்த மன்றத்திலே கேட்கிறார்களே,
இந்தித் திணிப்பு என்ன கபாலீஸ்வரர் கோவில் யானையா ?
இதோ மாம்பலத்திலிருந்து புறப்பட்டு மயிலாப்பூர் போய்க்
கொண்டிருக்கிறது என்று சொல்ல. இதுதான் இந்தித் திணிப்பு.
இதற்குப் பெயர் தான் இந்தித் திணிப்பு. விதேஷ் சஞ்சார்
பவன், வாயு பவன், கிருஷி பவன்—இதுதான் இந்தித் திணிப்பு.

1500 மைல்களுக்கு அப்பாலே இருந்து வந்து ஆண்ட
வெள்ளைக்காரன் கூட தான் வெளியிட்ட நாணயத்திலே
தமிழைப் பயன் படுத்தினான். ஒரு தம்படி என்றும், ஒரு
ரூபாய்க்கு 64 காணலா என்றும் இருந்த போது 'தம்படி —
காலணா' என்று அச்சடித்தான். யுத்த நெருக்கடி வந்த
போதும் சரி, 2வது உலக மகா யுத்தம் முடிந்து 1939 லிருந்து
45 வரைக்கும் அச்சடித்த ஓட்டைக் காசில் கூட, 'காலணா'
என்று தமிழிலே இருந்தது. ஒரு தம்படி, என்று தமிழிலே
இருந்தது. 4 அணா, 8 அணா, 2 அணா, அரையணா என்று
தமிழிலே இருந்தது. ஆனால் நம்முடைய அரசு — சுதந்திர
அரசு அமைந்த பிறகு, வெள்ளைக்காரன் காலத்து உரிமைகூட

தமிழ்நாட்டில் இருக்கிற தமிழர்களுக்கு வழங்கவில்லை என்
றால் அந்த இந்தித் திணிப்பை, தி.மு.க. தன்னுடைய நிதிநிலை
அறிக்கையிலே தொட்டுக் காட்டி, மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களே 'இந்தித் திணிப்பை எதிர்ப்போம் என்று சொல்லுகிற
போது 'ஆளுகிற கட்சிக்கு இதே வேலையாகப் போய்விட்டதே'
என்று சொல்லக்கூடிய மாண்புமிகு தேசிய காங்கிரஸ் உறுப்
பினர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், "இது
தவறா".

அது மட்டுமல்ல, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத்
தமிழில் மொழி பெயர்த்தார்கள். இந்தியாவின் எல்லா மொழி
யிலும் மொழி பெயர்த்து வெளியிட மத்திய அரசிலேயிருந்து
உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அப்படி, தமிழிலேயும் இந்திய
அரசியல் அமைப்புச் சட்டம் மொழி பெயர்க்கப்படுகிறது.
அதிலே ஒரு வரியை மட்டும் உதாரணத்திற்குச் சொல்லுகிறேன்.
என்ன வரி என்றால், "சம்பூர்ண, சம்பன்ன, பிரபுத்வ, லோக
தந்த்ராத்மக கண ராஜ்யம்" இதற்கு என்ன அர்த்தம் என்று
யாருக்கும் தெரியவில்லை. பிறகுதான் விசாரித்துப் பார்த்த
போது சொன்னார்கள் "சம்பூர்ண, சம்பன்ன, பிரபுத்வ, லோக
தந்த்ராத்மக கண ராஜ்யம்" என்று சொன்னால், "சாவரின்,
டெமகிராடிக் ரிபப்ளிக், என்று பெயர் என்றார்கள். அப்படி
யானால் "சாவரின், டெமகிராடிக், ரிபப்ளிக், என்கிற ஆங்கில"
வார்த்தைகளை "முழு உரிமையுள்ள, மக்களாட்சிக் குடியரசு
என மொழி பெயர்த்தால் என்ன தப்பு வந்து விடும் என்று
டெல்லி சர்க்காரைக் கேட்பது தவறா ? மத்திய சர்க்காரைப்
பார்த்துக் கேட்பது தவறா ? என்று தான் இந்த மாமன்றத்தைப்
பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பாரதி பாடினான் :

"தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்க வேண்டும்'
என்று. அதுமட்டுமல்ல,

யான் கண்ட புலவனிலே கம்பனைப் போல், வள்ளுவன்
போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை !
வெறும் புகழ்ச்சியில்லை ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம், ஒரு சொற் கேளீர் !
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் !

என்று பாரதி பாடிய, கவிதையை ஏற்று
கொண்டிருக்கிற நாம், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல்
கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது என்பதைத்தான் பணி
வோடு கேட்க விரும்புகிறேன்.





அடுத்து, மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி
இதை ஒரு முழக்கமாகவே வைத்திருக்கிறீர்களே என்று கூட
மாண்புமிகு உறுப்பினர்கள், ஆளுநர் உரையின் மீது பேசுகிற
போது சொன்னார்கள். எதற்கெடுத்தாலும் மத்திய அரசின்
மீது பழி போடுவதுதானா உங்கள் வேலை என்று கேட்டார்கள்.
அருமை நண்பர் திரு. அல்போன்ஸ் அப்படி கேட்டார் என்று
ஞாபகம். "மழை பெய்யவில்லை என்றால் மத்திய அரசைக்
காரணம் காட்டுவீர்களா " என்று கூட கேட்டார். மத்திய
அரசிடம் அதிக நிதி ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்பது, மத்திய
அரசிடம் அதிக அரிசி கேட்பது, மத்திய அரசிடம் அதிக அதி
காரம் கேட்பது என்பதெல்லாம் தவறு அல்ல. ஒரு சம்பவத்தை
இங்கே இந்த மன்றத்தில் நினைவு படுத்த விரும்புகிறேன்.
கடந்த 1952 ஆம் ஆண்டு முதல் பொதுத் தேர்தல் நடந்து
முடிந்த பிறகு, ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் சக்கரவர்த்தி
ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், முழுமையான சென்னை
ராஜதானியின் பிரதமர் பொறுப்பை ஏற்றார். அப்படிப்பட்ட
கட்டத்தில் மத்திய அரசாங்கத்திடம் சென்னை ராஜதானியின்
நிதி நிலையை, கையறு நிலையைச் சுட்டிக்காட்டி, 10 கோடி
ரூபாய் எனக்கு வேண்டும் அதைக் கொடுங்கள் என்று மத்திய
அரசைக் கேட்டார். இப்படி 3 முறை கேட்டார். இப்படி
மூன்று முறை சென்னை ராஜதானியின் சார்பில் மத்திய
அரசுக்கு தாக்கீது போய் சேர்ந்தது. பணம் வரவில்லை.
அப்படிப்பட்ட கட்டத்தில் பழம் பெரும் உறுப்பினர்கள்—தேசிய
உறுப்பினர்கள், நான் மதிக்கத்தக்க உறுப்பினர்கள் பலர்
இந்த மன்றத்தில் இருப்பதால் சொல்லுகிறேன், அந்த
மாபெரும் அறிஞர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்
சொன்னார் சீர்கெட்டு போயிருக்கும் சென்னை ராஜ
தானியின் ஆட்சியை, நான் ஒரு சிவக்கட்டைப் போல் பொறுப்
பேற்று இந்த மாநிலத்திற்கு 10 கோடி ரூபாய் பணம் வேண்டு
மென்று கேட்டு அதற்கு இன்னும் பதில் வரவில்லை என்று
சொன்னால், எனக்கு இனி வேறு வழி—சென்னையில் இருக்கிற
அண்ணாதுரையோடு சேர்ந்து கொள்வதைத் தவிர எனக்கு
வேறு மார்க்கமில்லை என்று சொன்னார். அந்த அளவுக்கு
துணிச்சலோடு சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் இருந்தார்.

(பிற்பகல் 12-40)

அதைப் போலத்தான் உரிமைக்கு குரல் கொடுப்போமென்று
சொல்லி நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு நிதிநிலை
அறிக்கையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார் என்றால் அத
னுடைய அடிப்படை அதுமட்டுமல்ல, இன்னும் நான் ஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன். கடந்த 1967-ல் இதேபோல இந்த
மன்றத்திலே வாதம் கிளப்பப்பட்டபோது அப்போது முதல
மைச்சர் பொறுப்பில் இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் இந்த
மன்றத்தில் சொன்னதை, பேரவைத் தலைவரவர்களே, உங்க
ளுடைய அனுமதியோடு நான் படிக்க விரும்புகிறேன். "இன்
றைக்கு இந்த மன்றத்தில் இருக்கிற காங்கிரஸ் உறுப்பினர்கள்
மத்திய சர்க்கார் பேரில் பழி போட்டுத் தப்பித்துக் கொள்ளா
தீர்கள் என்று என்னைப் பார்த்து சொல்லுகிறார்கள். நான்

அவர்களுக்குச் சொல்கிறேன், மத்திய சர்க்கார் மீது பழி போடுவது மட்டுமா, மத்திய சர்க்காரை சந்தியிலே கொண்டு வந்து நிறுத்துவேன், நான் எடுத்துச் சொல்கிற முயற்சி நிறைவேறாமல் மத்திய சர்க்கார் குறுக்கிடுமானால், சந்தை சதுக்கத்திலே மக்களுக்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும் ; அதுதான் உங்கள் சர்க்காருக்கும், எங்கள் சர் காருக்கும் இருக்கிற வித்தியாசம் ; மத்திய சர்க்கார் பேரில் பழி போடாதே என்று பேசுகிறீர்கள் ; உங்களைக் கேட்கிறேன் நான் இந்த மன்றத்திலே சொல்கிறேன், அந்த வாதம் அன்று நடந்தாலும் இன்றைக்கு பொருத்தமாக இருப்பதால் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ''இப்போது உணவு நெருக்கடி இருக்கிறது. இந்த உணவு நெருக்கடி வந்த நேரத்தில் நான் தமிழ்நாட்டு முதலமைச்சர் என்கின்ற முறையில் பர்மாவி லிருந்தோ, தாய்லாந்திலிருந்தோ, தேவையான அளவுக்கு, அரிசியை வரவழைக்க வேண்டுமென்றால், நான் நேரடியாக வரவழைத்துக்கொள்கிற அதிகாரம் எனக்கு இல்லை. மத்தியச் சர்க்காரைத் தானே நான் கேட்க வேண்டும். மத்திய சர்க் காரைக் கேட்காதீர் என்றால், மத்திய சர்க்கார் மீது பழி போடாதீர் என்றால் என்ன பொருள் ? '' இன்னொன்றையும் அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு, விலைவாசி, உயரும்போதெல்லாம், மத்திய சர்க்கார் சம்பளத்தை உயர்த்துகிறார்கள், அது போலவே மாநில அரசாங்கமும் எங்களுக்கு உயர்த்திக் கொடுங் கள் என்று மாநில அரசு ஊழியர்கள் கேட்கிறார்கள், நியாயம் தானே ? அவ்வாறு அவர்கள் கேட்கும் போது .......... (மணி அடிக்கப்பட்டது) மாண்புமிகு தலைவரவர்களே, இரண்டு நிமிடம், ....இன்னொரு உறுப்பினர் நேரத்தையும் சேர்த்து ஏற்கனவே அனுமதி பெற்றிருக்கிறேன்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்ஜெட் மீது உரை நிகழ்த்துகிறரா அல்லது மத்திய சர்க்காரைப் பற்றி விமரிசனம் செய்கிற உரை நிகழ்த்துகிறாரா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பட்ஜெட்டிலே மத்திய, மாநில ஆட்சி பற்றி இருக்கிறதா இல்லையா ?

திரு. வே. கோபாலகிருஷ்ணன் : இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வளவுதான்.

திரு.மு. இராமநாதன் : தலைவரவர்களே, மத்திய, மாநில உறவுகளைப் பற்றி தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இதே வாதம், அறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலே வந்து, மத்திய அரசாங்கத்திலே மாநில அரசாங்கத்தினுடைய அன்றாட நிர்வாகத்திற்கும் பொறுப்பிருக்கிறது ; ஆக இரண்டும் கூட்டுச்



சேர்ந்து தான் ஒரு காரியத்தை நடத்த முடியும் என்கிற வகை யில் அண்ணா சொன்ன வாதத்திற்காக சொல்கிறேன். ஆக மத்திய அரசு ஊழியர்களுக்கு சம்பளம் உயர்த்தும் போது மாநில அரசு ஊழியர்களுக்கும் நாம் கொடுக்க வேண்டுமென்று எண்ணும்போது, மத்திய சர்க்கரை கேட்டால், முடியாது ; இப்போது வாய்ப்பு இல்லை என்று மத்திய சர்க்கார் சொன்னால், நாங்கள், மத்திய சர்க்காரால் நம்முடைய காரியங்கள் நடை பெற முடியாமல் இருக்கிறது என்று மக்களிடத்தில் சொல்லாமல் வேறு எங்கே சொல்வது ? இந்த மன்றத்தில் சொல்லாமல் வேறு எங்கே சொல்வது ? ஆகவே இந்த மன்றத்தில் இருக்கிற எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த மாநிலத்தின் ஒட்டு மொத்த மான முன்னேற்றத்திற்காக குரல் கொடுப்போம், அதற்கு ஒத்துழையுங்கள் என்றுதான் அண்ணா அவர்கள் கேட்டார்கள். அதைத் தான் இன்றைக்கு தமிழ்நாட்டிலே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள் அந்த அடிப்படையிலே தான்—மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் என்று நாம் ஒரு போர் தொடுப்பதற்காக இப்போது இந்த மன்றத்திலே நான் பேசவில்லை—மாநிலத்தினுடைய வளர்ச்சி, மாநிலத்தின் முன்னேற்றம், மத்திய அரசாங்கத்தினுடைய தயவைப் பொறுத்து, அவர்கள் கொடுக்கின்ற உதவியைப் பொறுத்து இருக்கிறது.

என் கையில் இருக்கிற இந்த அறிக்கை 1986–87 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் தலைமை தணிக்கை அதிகாரி இந்திய அரசாங் கத்தின் வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்து கொடுத்து இருக்கிற ஆடிட் ரிப்போர்ட்.

இந்த ஆடிட்டர்-ஜெனரலினுடைய ரிப்போர்ட்டிலே ஒரு குறிப்பை இந்த மன்றத்தின் கவனத்திற்குச் சொல்ல விரும்பு கிறேன். தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக 75 தொழிற்சாலை கள், நிறுவனங்கள், கழகங்கள் இருக்கின்றன. இவைகள் 2,000 கோடி ரூபாய் மூலதனத்திலே செயல்பட்டு வருகின்றன. இவை களிலே 45 கம்பெனிகள் மட்டும் இந்த 1986–87 ஆம் ஆண்டி னுடைய கணக்குகளை முடித்து ஆடிட்டர்-ஜெனரலின் பார் வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி வைக்கப்பட்ட நிறு வனங்களிலே 21 நிறுவனங்கள் 16.81 கோடி ரூபாயை இலாபம் என்று காட்டியிருக்கிறது. 24 கம்பெனிகள் 16.64 கோடி நஷ்டம் என்று காட்டியிருக்கிறது. ஒட்டு மொத்தமாகப் பார்த் தால், என்ன மிச்சம் என்று கேட்டால், 2,000 கோடிரூபாய் மூலதனம் போட்டு, 75-க்கும்மேற்பட்டநிறுவனங்களை ஒரு அரசு நடத்தி, ஆண்டினுடைய இறுதியிலேஇலாபநஷ்டக் கணக்கைப் பார்த்தால் சீரோ ! சீரோ ! சீரோ ! என்று இருக்கு மானால், பொதுத் துறைகளின் மீது—சர்க்காருடைய நிறுவனங் களின் மீது மக்களுக்குச் சந்தேகம் வராதா என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

பொதுத் துறையில் தொழில்கள் தொடங்கப்பட்டதனுடைய நோக்கம், தனியாருக்குப் போகின்ற இலாபங்கள் அரசாங்

கத்திற்கு வந்து, மக்கள் வரிச் சுமையிலேயிருந்து விடுபட்டு, நல்வாழ்வு வாழ்வதற்கு மக்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் இவ்வளவு நிறுவனங்களும் தொடங்கப்பட்டன. ஆனால் இந்த இரண்டாயிரம் கோடி ரூபாய் மூலதனம் ஒரு தனியார் துறையிலே இருந்திருந்தாலும் எத்தனை கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியிருக்கும் என்று பார்க்கும்பொழுது ஆடிட்டர்-ஜெனரலினுடைய ரிப்போர்ட்டைப் படிக்கும் பொழுது கண்களிலே இரத்தம் வருகிறது.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் பரவலாகப் பேசப்பட்ட, பெரிய சாதனையாகச் சொல்லப்பட்ட, தமிழ்நாடு கனிம நிறுவனம், அதாவது TAMIN Tamil Nadu Minerals Limited—Granite Cutting and Polishing Unit. இது சென்ற ஆட்சிக் காலத்தில் மிகப் பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்டது. உலகத்தில் இனிமேல் ஜப்பானைவிட, நாங்கள் ஒரு பெரிய சாதனையைச் செய்யப் போகிறோம் என்றும், வெளிநாட்டுக்கு 100 சதவிதம் ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பு உள்ள தொழில் என்றும், சொல்லி, சேலம், தருமபுரி, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களிலே இருந்து கருங்கற்களைக் கொண்டு வந்து, அவற்றை வெளிநாடுகளினுடைய தேவைக்கேற்ப வெட்டி, சைஸ் செய்து, ஒழுங்குபடுத்தி, பாலிஷ் செய்து அனுப்புவதற்கு 6.38 கோடி மூலதனத்தோடு இந்தத் தொழில் தொடங்கப்பட்டது. இந்தத் தொழிலினுடைய கதையைக் கேட்டால் பேரவைத் தலைவரவர்கள் இதற்கு இரண்டு நிமிடங்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலையைத் தொடங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கதையைத் தனியாகச் சொன்னால் நான் எழுதியே மற்றவர்களுக்குத் தெரிவிக்கிறேன். (சிரிப்பு).

திரு. மு. இராமநாதன் : இது நாட்டுக்குத் தேவையானது என்பதாலே தான் இந்த மன்றத்திலே சொல்கிறேன். 14 மாத காலம் இந்தத் தொழிலைத் தொடங்க ஏற்பட்ட காலதாமதத்தினாலே 2.17 கோடி நஷ்டம். அது மட்டுமல்ல, இந்தத் திட்டத்தை உரிய நேரத்தில் தொடங்காத காரணத்தினாலே உற்பத்தி நஷ்டம் 2.46 கோடி. அதிலே இந்தப் பிரிவினைத் தொடங்க, தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் பள்ளமாக இருந்த காரணத்தினாலே, பள்ளத்தைத் தூர்த்து, சமப்படுத்த திட்டத்திற்கு மேல் 11 பங்கு செலவழித்த காரணத்தால் 26 இலட்சம் நஷ்டம். அதுமட்டுமல்ல, திட்டம் போடும் பொழுது கான்க்ரீட் கூரை இருந்தால் போதும் என்று போட்டு, கடைசியிலே கடற்கரைப் பகுதி என்ற காரணத்தினாலே கான்க்ரீட் கட்டிடம் கட்டியதாலே 46 இலட்சம் நஷ்டம். அதுமட்டுமல்ல, இன்னொரு வேடிக்கை. இதற்கு உரிய மெஷின்கள் வெளிநாட்டிலே இருந்து தருவிக்கப்பட்டபொழுது மத்திய அரசாங்கம் (மணியடிக்கப்பட்டது).



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய உறுப்பினர்கள் ஒன்றை மறந்து விடக் கூடாது. ஏதோ பேரவைத் தலைவரவர்கள் வேறு வேலையில்லாமல் மணியடிப்பதை ஒரு தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் கருதக் கூடாது. நான் அப்படித்தான் முதல்வராக இருந்தபொழுது செய்து கொண்டிருந்தேன், இப்பொழுதும் அதே வேலையைத்தான் செய்கிறேன் என்று நீங்கள் நினைத்து விட்டால் தவறு. '' Equality '' என்பது பொருளாதாரத்தைச் சமப்படுத்துவது அல்ல ; வாய்ப்புகளைச் சமப்படுத்துவது. எனவே உங்களுக்குச் சரியாக இருபது மணித் துளிகள் முடிந்திருக்கின்றன. அடுத்துப் பேசுகிறவர் திரு. ஜி. பழனிச்சாமி.

இன்றைக்குப் பேரவை அலுவல் நேரம் 1-30 வரைக்கும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. நாளை காலையில் 9 மணிக்கு இருக்கிற வினா-விடை நேரம் நீக்கப்பட்டு, விவாதங்கள் காலை 9 மணியிலிருந்து தொடங்குகின்றன என்று குறிப்பிட்டு, திரு. ஜி. பழனிச்சாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

(பிற்பகல் 12-50).

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் அதிலே பல்வேறு கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். தமிழகத்திலே இருக்கக் கூடிய ஏழை-எளிய மக்களுக்கு, விவசாயிகளுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு, கிராமப் புற மக்களுக்குப் பல்வேறு நன்மைகளை அறிவித்திருப்பதை நான் பாராட்டுவதோடு, நான் அதிலேயுள்ள பல்வேறு விவரங்களைச் சொல்ல முன்வருகிறேன்.

இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையால் 100 கோடி ரூபாய் நிதி திரட்டுவதற்கான திட்டம் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் கூட, மதுவிலக்குக் கொள்கையை எடுத்துக் கொண்டால், இன்றைய தினம் தமிழகத்திலே போலீஸ் அதிகாரிகளோடு சேர்ந்து கொண்டு நகரங்களிலும், கிராமங்களிலும் சாராய விற்பனை என்பது எல்லாவிடங்களிலும் சர்வ சாதாரணமாக ஒன்றாக நடக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. இன்றைய தினம் இந்த அரசு அப்படிப்பட்ட நிலைமைகளை, சாராயம் விற்பதைத் தடுப்பதற்கு முன் வந்தால், கிராமப்புறத்திலே இருக்கக் கூடிய பல்வேறு கலவரங்களை, உயிர்ச் சேதங்களைத் தடுப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

இன்றைய தினம், அரசு மாற்றம் ஏற்பட்ட பிறகும் கூட மதுவிலக்குச் சட்டங்களை அமல்படுத்துவோம் என்று சொன்னதற்குப் பிறகும் கூட—இன்றைக்குத் தைரியமாகப் போலீசார்

[திரு. ஜி. பழனிச்சாமி] [1989 மார்ச் 31

உதவியோடு சாராய வியாபாரங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அதையும் கூட இந்த அரசு உடனடியாக தடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பு கிறேன்.

அதே போன்று விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி, வட்டி தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு புறத்தில் அதை வரவேற்றாலும்—அது முழுமையாக இல்லை—விவசாயிகளுக்கும் நன்மை அளிக்கக் கூடிய நிலை இல்லாமலிருந்தாலும்கூட— வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய குத்தகை விவசாயிகளுடைய நிலைமைகளை இந்த அரசு திரும்பப் பரிசீலிக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில், தஞ்சை மாவட்டத்தில் பெரும்பகுதி கோயில் குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள். அங்கே ஏற் பட்ட இயற்கைச் சீற்றத்தால் தொடர்ந்து விவசாயிகள் பாதிப் புக்குள்ளாகி, கோயில் நிர்வாகங்களுக்கு அளக்க வேண்டிய குத்தகை பாக்கியை அளக்க முடியாத நிலைமையில் இன்றைய தினம் அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இன்றைய தினம் கோயில் நிர்வாகம் அவர்கள் மீது ரெவின்யூ கோர்ட்டில் வழக்குகள் போட்டு, பல ஆயிரக்கணக்கான வழக்குகள் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்டவர்கள் கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான கல நெல்லை அளக்க முடியாமல் இன்றைய தினம் பாக்கி வைத்துக் கொண்டிருக்கி றார்கள். அதை இந்த அரசு பரிசீலனை செய்து, அந்தக் குத்தகை விவசாயிகளுடைய பாக்கியை ரத்து செய்ய மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, ரெவின்யூ கோர்ட்டை உடனடியாக நிறுத்திவிட வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்றைய தினம் தென்னை வளர்ப்பு என்று சொல்லும் போது என்னுடைய தொகுதி தென்னை அதிகமாகப் பயிரிடப்படும் இடமாகும். முத்துப்பேட்டை என்னும் பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் தென்னை வளர்க்கப்படு கிறது. முத்துப்பேட்டையில் ஏற்கனவே இருந்த அரசு, தென் னையிலிருந்து கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களைக் கொண்டு ரசாயனப் பொருள்களைத் தயார் செய்வதற்குத் தகுந்த இடங் களை தேர்ந்தெடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தது. அது சம்பந்தமாக இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, மாவட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்பதற் காக தஞ்சை மாவட்டத்தை மூன்றாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லி, ஏற்கனவே இருந்த அரசால் அறிவிக்கப்பட்டது. அதில், பெயர் மாற்றத்தால் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தை



1989 மார்ச் 31] [திரு. ஜி. பழனிச்சாமி]

மூன்றாகப் பிரிப்பதோடு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராமப் புறப் பகுதிகளை மேம்படுத்துவதற்கு, மக்கள் நலம்பெறுவதற்கு, அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு இந்த அரசுமுன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் அரசானது, 25 கோடி ரூபாய் வேளாண் துறையிலுள்ள விரிவாக்கப் பணியாளர்கள் மூலம் உதவியளிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. வேளாண் துறையைப் பொறுத்தமட்டில் விரிவாக்கப் பணியாளர்கள்—இன்றைய தினம் அனேகமாக விவசாயிகளுக்குத் தெரியாத நிலையில்— பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊழியர்கள் எங்கே போகிறார்கள், எப்படிப் போகிறார்கள் என்று தெரிய வில்லை. தேடிக் கண்டுபிடித்து, விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் சம்பந்தப்பட்ட நிலைமைகளைக் கண்டறிய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் சொல்கிறார்கள். வாரம் ஒருமுறை, மாதம் ஒருமுறை தான் நாங்கள் செல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள். விவசாயத்தில் இருக்கிற அன் றாட நிலைமை என்பது தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள் விவசாயம் செய்கிற போது என்ன பூச்சி மருந்து அடிக்க வேண்டும், என்ன உரம் போட வேண்டும் என்று உடனுக் குடன் கவனிக்கவில்லையென்றால் அந்த விவசாயிகளுடைய உழைப்பு முழுவதும் பாழாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஊழியர்களை அதிகப்படுத்த வேண்டும். அவர்கள் அந்தப் பகுதியில் நிரந்தரமாக குடியிருந்து பணிபுரிபவர்களாகச் செய்ய வேண்டும்.

எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர் தான் வேளாண்மை துறை அமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் பொறுப்பேற்ற வுடன் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை பல்கலைக் கழகத்தை அமைப்போம் என்று சொன்னார்கள். இப்போது திருச்சி மாவட் டத்தில் வேளாண்மை கல்லூரி அமைக்கவிருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தா லும் விவசாயம் அதிகமாக தஞ்சை மாவட்டத்தில் நடக்கிற காரணத்தால் அங்கே ஒரு விவசாயப் பல்கலைக்கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வன வளம். வன வளத்திற்கு இந்த அரசு முக்கியத் துவம் கொடுத்து 85 கோடி 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக் கிறார்கள். கவர்னர் ஆட்சிக் காலத்தில் சாலையோரப் பூங்கா என்று பல்வாயிரகணக்கான ரூபாய் செலவு செய்து சாலை ஓரங் களிலோ கன்றுககளை நட்டார்களே தவிர பின்னால் அவை களை பாதுகாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு நல்ல முயற்சிகளை எடுத்து வன வளத்தைப் பாதுகாக்க வேண்டும். வன வளம் என்பது இன்றையதினம் அதிகாரிகள் உதவியோடு அழிக்கப்பட்டிருக்கிறது. வன வளத்தைப் பாது காத்தால் தான் நீர் வளம், நில வளத்தை நாம் பாதுகாக்க

[திரு. ஜி. பழனிச்சாமி] [1989 மார்ச் 31

முடியும். இன்றைக்கு நமது மாநிலத்தில் நீர் பற்றாக்குறை
அதிகமான அளவில் இருக்கிறது. எனவே வன வளத்தைப் பாது
காப்பதற்கு இந்த அரசு கடுமையான முயற்சிகளை எடுத்துக்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்பிற்காக 13 கோடியே 73 இலட்சம் ரூபாய்
ஒதுக்கியிருக்கிறார்கள். ஆடு வளர்ப்புத் திட்டத்திற்காக சில
குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு இந்தத் தொகையை அறிவித்து
இருக்கிறார்கள். செங்கை அண்ணா, தென்னாற்காடு, வடாற்
காடு, சேலம், தர்மபுரி போன்ற மாவட்டங்களுக்கு இந்தத்
திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஆடு மாத்திரம்
வளர்ப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதி
யில் பசுக்கள் பண்ணை ஒன்று இருக்கிறது. தஞ்சை மாவட்டத்
திற்கு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே ஒரு மாடல் பண்ணையாக
அந்தப் பண்ணை அமைந்து இருந்தது. அந்தப் பண்ணை இன்
றையதினம் நலிவடைந்து அங்கே இருக்கிற மாடுகள் சாகக்
கூடிய நிலைமை இருக்கிறது. அந்தப் பண்ணை முற்றிலும்
பாழாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பண்ணையை இந்த அரசு
சீரமைத்து, அதற்காக அதிகமாக நிதி ஒதுக்கீட்டைச் செய்து,
மாடல் பண்ணையாகத் திரும்பவும் அதனை மாற்றிட வேண்டு
மென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். (மணி
யடிக்கப் பெற்றது) மீன் வளத்தைப் பொறுத்தவரையில் என்
னுடைய தொகுதியில் முத்துப்பேட்டை ஒன்றியத்தில் தொண்டி
யக்காடு என்ற ஒரு இடம் இருக்கிறது. அங்கே மீன் பிடிப்பதில்
நாள்தோறும் 10,000 பேர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். ஏறால்
மீன் வளர்ப்பதற்கான ஒரு மாடல் பண்ணையை அங்கே அமைத்
திருக்கிறார்கள். அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடிய உப்பு நிலம்
அதிகமாக இருக்கிறதால் அங்கே மீன் வளர்ப்புப் பண்ணையை
அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசு முன் வர வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து உச்சவரம்பு நிலம். இன்றையதினம் உச்சவரம்பு
சட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு இடங்களில்
பினாமி நிலமாக பல்வேறு நபர்களின் பெயர்களில் நிலம் எழுதப்
பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் நிலங்கள் மோசடியாக
வைத்திருப்பதை அரசுக்கும், அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்த
வேண்டுமென்று நாங்கள், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள்
கடுமையாக பல்வேறு போராட்டங்களை நடத்தி முடித்து இருக்கி
றோம். இந்தப் போராட்டங்களில் எங்கள் கட்சியைச் சார்ந்த
பல தொண்டர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு
சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் கூட இந்த அவையில்
இருக்கிறார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள் முதலில்
தேர்தல் அறிக்கையில் நிச்சயமாக இந்த நிலங்கள் எல்லாம்
எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதைப்போல ஆளும்
கட்சியின் பத்திரிகையில் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் அடித்து
என்னுடைய தொகுதியில் விநியோகித்து இருக்கிறார்கள்.
பினாமி நிலத்தை வைத்திருப்பவர் சட்டமன்ற உறுப்பினராக



1989 மார்ச் 31] [திரு. ஜி. பழனிச்சாமி]

இருக்கிற காரணத்தால் இந்த அவையில் அதை கொண்டு வரக்
கூடாது என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து மருத்துவமனை பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.
திருத்துறைப்பூண்டியில் இருக்கிற மருத்துவமனை என்பது கிராமப்
புற மக்களுக்கு மிக பிரதானமாக இருக்கிறது. அங்கே பணி
புரியும் டாக்டர்கள் ஊரில் தங்குவதே இல்லை. அங்கே இருக்கக்
கூடிய ஊழியர்களும் அங்கே தங்குவதில்லை. அவர்கள் பிரை
வேட்டாக கிளினிக்குகள் நடத்துகிற டாக்டர்களிடத்தில் தான்
பணிபுரிகிறார்கள். தாங்கள் பணிபுரியும் இடத்தில் முழுமை
யாக இருப்பதில்லை. (மணியடிக்கப் பெற்றது)

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
யோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். ஸ்ரீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் 1989-90 ஆம்
ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் பேரில் பேசுவதற்கு
வாய்ப்பு அளித்த என்னுடைய மேட்டூர் தொகுதி மக்களுக்கு
என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூற விரும்புகிறேன். நம்
முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் இன்
றைக்கு இருக்கும்படியான ஏழை எளியவர்களுடைய நல்வாழ்விற்
காக, சாதாரண மக்களுடைய வாழ்க்கையில் மிகவும் அக்கறை
கொண்டு, பல்வேறு மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு,
பல்வேறு திட்டங்களை இன்று அறிவித்திருக்கிறார்கள். இந்த
அரசு ஏற்பட்டவுடன், இந்த அரசாங்கம் பொறுப்பேற்றவுடன்
எந்தவிதமான நிதி ஆதாரமும் இல்லாமல் 40 கோடி ரூபாய்
கடனில் பொறுப்பேற்ற இந்த அரசாங்கம், இத்தகைய
திட்டத்தை முன்வைக்குமா என்று எதிர்பார்க்காத நிலைமையில்,
ஏமாறும்படியான நிலையில், மாற்றாரும் மதிக்கத்தக்க அள
விற்கு அவர்கள் மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு,
இங்கே சமர்ப்பித்திருக்கும்படியான திட்டங்களைநான் பொதுவாக
வரவேற்கிறேன்.

குறிப்பாக ஏழை எளியமக்கள், கிராமப்புறத்தில் வாழும்படி
யானவர்களுக்கு வாழ்வு அளிப்பதில் மிகவும் அக்கறை கொண்டு,
விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.
விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டு இருக்கிறார்கள்.
கிராமப்புறப் பகுதியிலே இருக்கும்படியான மக்களுக்கு வீட்டு
வசதிகளை உருவாக்கி, அவர்களுடைய வீடுகளுக்கு புதிதாக
'' தார்ஸ் '' கட்டுவது என்று அறிவித்திருக்கிறார்கள். அரிசன
மக்களுக்கு மட்டுமல்லாமல் கிராமத்தில் இருக்கும்படியான
ஏனைய பிற்படுத்தப்பட்ட இனத்து மக்கள், வாழ்க்கையில் மிகவும்
பிற்படுத்தப்பட்டு, எங்கு நோக்கிலும் வீடுகள் இல்லாமல் பல
இலட்சக்கணக்கான பேர்கள் அவதியுற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட அனைத்து ஜாதியினருக்கும், ஏழைகளாக இருக்கும்படியானவர்களுக்கும் இந்தத் திட்டம் பொருந்தும்படியான அளவிற்கு, வீடுகள் இல்லாதவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்படியான ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் லாரி, ஆட்டோ ரிக்ஷா, கார், டாக்சி, போன்றவற்றை ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கும், மற்றும் கட்டிடத் தொழிலாளர்களுக்கும், பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், அவர்கள் விபத்தில் பாதிக்கப்பட்டால், நிதி அளிப்போம் என்று அறிவித்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். அவர்கள் எல்லாம் இன்றைக்கு பாதுகாப்பற்ற ஒருநிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு படித்த இளைஞர்கள், இந்த நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையின் காரணமாக, வேலையில்லாத நிலையின் காரணமாக, பல்வேறு நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் இன்றைக்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆட்டோ, கார் ஓட்டும் வேலைகளை மாற்றாிடத்தில் வாடகைக்காக செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குப் பாதுகாப்பான சட்டத்தைக் கொண்டு வரவும் வாடகைக்காக ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு பாதுகாப்பாக இருப்பதற்காக இ. எஸ். ஐ. போன்ற சட்டங்களைக் கொண்டு வரும்படியான நிலையை வருங்காலத்தில் இந்த அரசு உருவாக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கும் குடியுரிமை கொடுத்து, வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில், திட்டங்களை உருவாக்கிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சத்துணவு மையத்தில் இருக்கும்படியானவர்களுக்கு நிரந்தரம் என்ற வகையில், அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. நிரந்தரம் என்று அறிவிக்கின்ற இந்த நேரத்தில் இந்தச் சத்துணவு மையத்தில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு பல்வேறு நெருக்கடிகள் இன்றைக்கு, அவர்களுக்குப் பின்னாலே நடந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே இந்த மன்றத்திலே சொன்னார்கள். இந்தச் சத்துணவு மையத்தில் இருக்கும்படியானவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆட்களைக் கொண்டுவர வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் மூலமாகவும், நகரசபைகள் மூலமாகவும் நிர்பந்தப்படுத்தப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அத்தகைய நிலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அவர்கள் இன்றைக்குக் குடும்பக் கட்டுப்பாட்டிற்காக ஆட்களைக் கொண்டுவரவேண்டும் என்று சொன்னால், குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கு பணம் கொடுத்து, அவர்களைப் பிடித்து வரவேண்டிய நிலைமை இன்று இருக்கிறது. ஆனால் இந்த ஊழியர்கள் மிகவும் குறைந்த ஊதியத்தை வாங்கும்படியான நிலைமையில் இருக்கின்றபோது இது அவர்களை மிகவும் பாதிப்பிற்கு உள்ளாக்குகிறது. எனவே, சத்துணவு மையங்கள் முழுமையான அளவில் செயல்பட வேண்டும் என்றால்



அங்குள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பும், அந்தக் கூடங்கள் ஒழுங்காகவும் நடைபெறவேண்டும் என்று சொன்னால், அவர் களை இந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் இப்போது அரசாங்கம் வைத் திருக்கும்படியான திட்டங்களை முறையாக அமுல்படுத்த வேண் டும் என்று சொன்னால்,—தமிழகத்தில் சென்ற ஆட்சிக் காலத் தில் நடந்திருக்கும்படியான—அரசாங்க இயந்திரம் உடனே சீர் படுத்தப்படவேண்டும் என்பது நாம் எல்லாம் அறிந்த ஒன்றுதான். அரசாங்க இயந்திரம் சீர்படுத்தப்படவில்லை என்று சொன்னால், அரசாங்க அதிகாரம் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்று சொன் னால், எந்தத் திட்டத்தையும் நாம் நிறைவேற்ற முடியாமல், அது வீணாகப் போய், மக்கள் மத்தியிலே அதனுடைய பலன் போய்ச் சேராமல் போகும்படியான நிலை ஏற்படும். என்னு டைய அனுபவம் இந்த 2 மாதங்களுக்குள்ளாகவே, பல்வேறு பஞ்சாயத்து யூனியன்களிலும் நகரசபைகளிலும் இருக்கும்படி யான அதிகாரிகள் அங்கே இருக்கும்படியான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், அரசு கொள்கைக்கு எதிரான காரியங்களைத்தான் செய்கிறார்களே தவிர மக்களுக்குத் தேவையான கொள்கை களை அவர்களுக்குச் சேரும்படியாக நிறைவேற்றுவது கிடையாது. மக்களுக்கு எந்த விதமான நன்மைகளும் செய்வது கிடையாது. அங்கே இருக்கும்படியான அதிகாரிகள் பழைய நிலையிலேயே, அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்களோ அதையே தான் செய்கிறார்கள். குறிப்பாக ஒரு லோன் கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னாலும் கூட, சில அடிப்படையான காரியங்களை வைத்து செய்து லோன் கொடுக்கப்படுவதில்லை. சாதாரண மக்களுக்கு லோன் மறுக்கப்படுகிறது. இதை நேரிடை யாக என்னுடைய தொகுதியில் பார்த்தேன். அவைகளெல்லாம் களைந்து எறியப்பட வேண்டுமென்று சொன்னால் தவறு செய்யும் படியான அதிகாரிகள், தவற்றுக்கு பொறுப்பான நிர்வாகிகள் மேல் கடுமையான நடவடிக்கை எடுத்து தீர்வு கண்டால்தான் இந்தக் கொள்கைகள் சரியாக அமல் நடத்தப்படும். அத்தோடு மேட்டூர் பகுதியில் என்னுடைய தொகுதியில் மேட்டூர் டெக்ஸ் டைல்ஸ் மூடி 4 ஆண்டுகள் ஆகின்றன. எனக்கு முன்னால் பேசிய அண்ணா தி.மு.க. உறுப்பினர்களும், காங்கிரஸ் நண்பர் களும் கூட இங்கே இதைப்பற்றிச் சொன்னார்கள்.

எங்கள் மேட்டூர் தொகுதியில் இருக்கும்படியான அந்தத் தொழிலாளர்களுக்கு 4 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த அரசு வந்த பிறகு தான் 250 ரூபாய் நிவாரணம் கொடுத்தார்கள். ஏற் கனவே இருந்த அரசாங்கத்திலே பலமுறை கேட்கப்பட்டும், கவர்னர் ஆட்சிக் காலத்திலே அவர்களுக்கு இந்த முதலமைச்சர் நிதியிலிருந்து நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும் என்று பல முறை மன்றாடியும் ஒரு பைசா கொடுக்க முடியாது என்று காலம் கழித்து வந்ததன் காரணமாக அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த வர்கள் 100-க்கு மேற்பட்டவர்கள் இறந்து விட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் ஏதாவது செய்ய வேண்டும்

என்ற உணர்வோடு தொழிலாளர்கள் நிதியிலிருந்து தான் கொடுத்தார்கள். வேறு ஏதோ பணத்திலிருந்து கொடுக்கப்பட வில்லை. ஏதோ பணத்தை எடுத்து யாரோ செலவு செய்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி யாருக்கும் கொடுக் கப்படவில்லை. அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக இந்த அரசு ஆளுக்கு 250 ரூபாய் கொடுத்ததை மனமார நான் பாராட்டுகிறேன். அதே உணர்வோடு அந்த தொழிற்சாலை விரைவிலே திறக்கப்பட வேண்டும் என்பதை என்னுடைய வேண்டு கோளாக விடுக்கிறேன். அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரியும். தீவிரமாக ஈடுபட்டால் மட்டும் போதாது. விரைவில் அந்தத் தொழிற்சாலை களை ஓட்டுவதன் மூலம் அங்கே இருக்கும்படியான 2,500 மேட்டூர் தொழிலாளர்களுக்கும் 300 அலெக்சாண்டிரியா நிறுவனத் தொழிலாளர்களுக்கும் மறு வாழ்வு அளிக்கப்படும்.

இப்போது மேட்டூர் பொருளாதார நிலையில் சீர்குலைந்து இருக்கிறது. அதை மாற்றம் செய்யப்படும்படியான நிலை உருவாக வேண்டும், அது மட்டும் அல்ல. மேட்டூர் ஒரு தொழில் நகரம். தொழிலாளர்கள் பிரதேசம். தொழில்கள் வளரும் ஒரு நகரமாக இருந்த அது இந்த பத்தாண்டுகளில் தொழில் பூராவும் நாசமாகித் தொடர்ந்து தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கொண்டு வருகின்றன.

மைக்கா என்று ஒரு பூச்சிக் கொல்லி மருந்து தொழிற்சாலை, விவசாயிகளுக்கு எல்லாம் விவசாய உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கக் கூடிய ஒரு தொழிற்சாலை இருக்கிறது. 3 ஆண்டுகளாக அங்கே பொருளாதார நிலை சீர்குலைந்து அந்த மைக்கா ஃபார்ம் நிர்வாகத்தில் இருக்கும்படியான கோளாறு காரணமாக முழுவதுமாக ஓடாமல் ஸ்தம்பித்து இருக்கிறது. லே ஆப் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேறு ஒருவர் வாங்குவதாக பேரம் பேசி அதுவும் ஓடாமல் காலம் கடத்தி வருகிறது. அப்படிப்பட்ட நிலைகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு அந்த தொழிற்சாலை களை விரைவில் திறப்பதன் மூலம் அந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மேட்டூரில் ஒரு அனல் மின்சார நிலையம் கட்டப்படுகிறது. அங்கே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த கேந்திரமான பகுதியில் காண்டி ராக்ட் முறை என்ற ஒன்றை வைத்துக் கொண்டு, அந்த மின்சார அரங்கத்தில் இருக்கும்படியான நிர்வாகிகளும் காண்டிராக்டர் களும் தொழிலாளர்களை கொள்ளை அடித்துக் கொண்டிருக் கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் அந்தக் கேந்திரமான பகுதியில் நேரிடையாக நிர்வாகத்தின் கீழ் வேலை செய்தால் குறைந்த பட்ச சம்பளம் அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால் இன்றைக்கு ரூ. 10, 15 ரூபாய் என்று அவர்களுக்குக் கொடுத்து, சர்க்கார் கொடுக்கும்படியான பணத்தை இடைத்தரகர்கள்



பகிர்ந்து கொள்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் போக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, மேட்டூரில் ஒரு நகரியக் குழு இருக்கிறது. அது நீண்ட நாட்களாக நகரியக் குழுவாகவே இருக் கிறது. அதை மக்கள் சபையாக, மக்கள் மன்றமாக மாற்ற வேண்டும், நகரசபையாக மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே 5 ஆயிரம் வீடுகளுக்கு மேல் லைசன்ஸ் கிடைக்காமல் மின்சார இணைப்பு கிடைக்காமல் காலம் கடத்தி வருவதன் காரணமாக, பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து வீடுகள் கட்டியும் கூட மின்சாரம் இல்லாமல், குழந்தைகள் படிப்பதற்கு வசதி இல்லாமல் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். அது மாற்றப்பட வேண்டுமென்று சொல்லி அதிகாரிகளிடத்தில் சென்றால் நாங்கள் மாற்ற முடியாது என்று சொல்லுகிறார்கள். இத்தகைய நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக மேட்டூரில் குடிதண்ணீர் பிரச்சினை. நீங்கள் எல்லாம் சொல்லலாம், மேட்டூரில் அணைக்குப் பக்கத்தில் இருந்துகொண்டு குடிதண்ணீர் பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கிறது என்று சொல்கிறேனே என்று .... (மணி அடிக்கப் பெற்று வேறு உறுப்பினர் அழைக்கப்பெற்றார்)

(பிற்பகல் 1-10)

*திரு. ந.ா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நான் பேசுவதற்கு தகுதி உடையவனாக ஆக்கிய எனது அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கம்பம் தொகுதியைச் சார்ந்த பெருமக்களுக்கும் மரியாதைக்குரிய எனது அண்ணன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், கம்பம் நடராஜன் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறிக் கொண்டு, நான் இந்த வரவு-செலவுத் திட்டத்தினை வர வேற்றுப் பேசுகின்றேன்.

தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்த 1989-90 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்றுப் பேசு வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்'' என்ற குறளுக்கு ஏற்ப, ஊழை மட்டுமல்லாது, ஊழலையும் சந்தித்து, அதனை சீர்செய்து ஓய்வின்றி உறக்கமின்றி பணியாற்றி, இந்த வரவு-செலவுத் திட்டம் காலச் சுருக்கத்தினால் வருமோ, வராதோ என்ற நிலையில் இயலாது என்பதையே தன் வாழ்நாளில் சொல்லியறியாத ஆற்றல்மிகு தலைவர் தன்னிகரில்லாத் தலைவர், இன்றைக்குத் தமிழக மக்களுக்கு உரிய நேரத்திலே இந்த

பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். எல்லாத் தரப்பு மக்களையும், தன்னுடைய சிந்தையிலே நிறுத்தி ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்களுடைய கஷ்டங்களை எல்லாம் தன்னுடைய இதயத்திலே நிறுத்தி, இன்றைக்கு இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், கம்பம் பள்ளத்தாக்கிற்கு, 'நேஷனல் வாட்டர் மேனேஜ்மெண்ட் ப்ராஜெக்ட்' நீட்டி அமைக்கப்பட்டிருக்கிறது என்ற திட்டம் உண்மையிலேயே கம்பம் தொகுதியிலே வாழ்கின்ற பெருமக்களின் காதுகளிலே தேனாக ஓடுகின்றது. அந்தத் திட்டம் நீட்டி அமைக்கப்படுகின்ற காரணத்தால் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இவ்வரசிற்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் பெரியார்-வைகை திட்டத்தின் இரண்டாம் பிரிவு பணிகள் நிறைவு பெறுமோ என்று எதிர்பார்த்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் அந்தத் திட்டம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை இவ்வரசு தந்துள்ளதால், அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்திலே சந்திக்கும்போது, வாக்காளர் பெருமக்களுக்கு எல்லாம் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற பல வாக்குறுதிகளை தந்து, இன்றைக்கு தமிழக மக்கள் அதை ஏற்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை இன்றைக்கு முதல்வராக ஆக்கியிருக்கிறார்கள். இன்றைக்குச் சொன்னதைச் செய்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தல் காலத்தில் வாக்குக் கொடுத்ததைப் போன்று, தைப் பொங்கல் திருநாள், சித்திரைத் திருநாள், தீபாவளித் திருநாள் ஆகிய நாட்களில் ஏழை எளிய மக்களுக்கு 5 கிலோ அரிசி இலவசமாக தருகின்ற திட்டமும், தைத் திருநாளன்று ஏழை எளிய மக்களுக்கு ஒரு ஜோடி வேஷ்டி, சேலை தருகின்ற திட்டங்களை எல்லாம் ஏழை எளிய மக்கள் வரவேற்று, இவ்வரசை மனதாரப் பாராட்டுகின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது கொண்டுவரப்பட்ட பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மக்களுக்கு கான்கிரீட்டால் கட்டிக் கொடுக்கும் வீடுகளை தொடர்ந்து இப்போதும் இந்த ஆட்சியிலே மீண்டும் கொண்டு வந்து, இவ்வருடம் 45,000க்கும் குறையாது இலவச வீடுகளை, கான்கிரீட் வீடுகளை கட்டித் தருவதை உண்மையிலேயே பொது மக்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள்.





அதுபோன்று கர்ப்பமுற்ற தாய்மார்களுக்கு பின் நாட்களிலே அவர்கள் உடல் ஆரோக்கியத்திற்காகவும், அந்தக் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காகவும் நான்கு மாதங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் இலவசமாகத் தருகின்ற திட்டத்தையும், ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் விபத்தில் இறந்தால், அந்தப் பிரிவினருக்கு மட்டும் ரூ. 10,000 வரை இனாமாகத் தருகின்ற திட்டத்தை எல்லாம் மாற்றி ஆட்டோ ரிக்ஷா, கட்டிடத் தொழிலாளி இறந்தால் அவர்களுக்கும் ரூ. 10,000 தருகின்ற திட்டம் அமைத்திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. இதையெல்லாம் பார்க்கும்போது சீனத்துக் கவிஞன் சொன்ன தத்துவ வரிகள் தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

'He who will not economise will have to face agony'

பேராசிரியரின் எச்சரிக்கையை உணர்ந்து போடப்பட்டதைப் போல் இந்த வரவு செலவுத் திட்டம் இருக்கிறது. இந்த நல்ல நேரத்திலே எனது தொகுதியிலே இருக்கின்ற சில குறைகளைச் சொல்லி அதை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக எனது தொகுதியிலே உள்ள கண்ணகிக்கோட்டம், வண்ணாத்திப்பாறை அருகே வன சரகத்திலே இருக்கிறது. இந்த கண்ணகிக் கோட்டத்திற்கு, கம்பம் தொகுதியிலிருந்து பெருமக்கள் தினந்தோறும் குறிப்பாக சித்திரா பௌர்ணமி அன்று சென்று வழிபடுவார்கள். கடந்த 5, 6 ஆண்டுக் காலமாக முன்பு இருந்த அரசாங்கத்துடன், தமிழ்நாட்டு அரசாங்கம் சுமுகமான உறவு இல்லாத காரணத்தாலே அந்த வழிபாட்டு உரிமை பறிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் அங்கே செல்லுகின்ற உரிமையும் பறிக்கப்பட்டிருக்கிறது. இப்போது கூட, வருகிற 20, 21, 22 ஆகிய நாட்களிலே கண்ணகிக் கோட்டத்திலே அந்த சிறப்புமிக்க வழிபாடு நடைபெற இருக்கிறது. அங்கு செல்லுகின்ற எனது கம்பம் தொகுதி பெருமக்களுக்கு அந்த வழிபாட்டு உரிமையைப் பெற்றுத் தருவதோடு மட்டுமல்லாமல் பாதுகாப்பு உரிமையையும், குடிநீர் பிரச்சனையையும் தீர்த்துத்தர வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் மேம்பாட்டிற்காக நல்ல பல திட்டங்களை அறிவித்த அரசு, கம்பத்தில் பெண்களுக்கான அரசு கல்லூரி ஒன்றும், ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஒன்றும் தொடங்கினால் பிற்பட்ட மக்களுக்கு பேருதவியாய் அமையும் என வலியுறுத்தி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் கம்பம், தேனி, போடி ஆகிய பகுதிகளில் உள்ள மகளிர் மேற்படிப்பு படிப்பதற்காக தற்சமயம் மதுரைக்குத்தான் செல்லவேண்டி இருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய படிப்புத் திறனை மனதிலே கொண்டு கம்பம் தொகுதியிலே ஒரு மகளிருக்கான கல்லூரியும், அல்லது ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் நிறுவ வேண்டும் என மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [1989 மார்ச் 31

அடுத்தபடியாக கம்பம் பகுதியிலே ராயப்பன்பட்டி கிராமத்திற்குப் பக்கத்திலே உள்ள ஷண்முகா நதித்திட்டம் நிறைவேற ரூ. 8 கோடி செலவிலே கடந்த 8 வருஷத்துக்கு முன்பாக அது துவக்கப்பட்டு இப்போது சாலை மற்றும் குடியிருப்பு மனைகள் அமைக்கின்ற அளவோடு அந்த வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம், அந்த சாலைக்கும் குடியிருப்பு மனைகளுக்கும் நில ஆர்ஜிதம் செய்து அந்தப் பணம் இன்னும் தராத காரணத்தினால், அந்த அணையிலே நீர் இருக்கக்கூடிய அந்த இடத்தில் உள்ள நிலச்சுவான்தார்கள் இப்போது நிலத்தைத் தர மறுக்கிறார்கள். ஆகவே அரசு உடனடியாக பரிசீலித்து அந்த நிலம் தராத உரிமையாளர்களுக்கெல்லாம் 4(1) (எ) நோட்டிபிகேஷன் கொடுத்து அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து அந்தத் திட்டத்தை வெகு வேகமாக துரிதப்படுத்துவார்களானால், கம்பம், தேனி தொகுதியிலேயுள்ள விவசாயப் பெருமக்களுக்கு குறிப்பாக 2,000 ஏக்கருக்கு மேலாக உள்ள புஞ்சை நிலங்கள் எல்லாம் நஞ்சை நிலங்களாக மாறுகின்ற நிலைமை காரணமாக அரசுக்கும் வருவாய் வருவது அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரிக்கப்படாத மதுரை மாவட்டத்திலே கொடைக்கானல் முன்பு சுற்றுலா மையமாக இருந்தது. இப்போது கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தினுடைய மாவட்டமாக திண்டுக்கல் பிரிந்துவிட்ட காரணத்தினால், மதுரை மாவட்டத்திற்கு ஒரு சுற்றுலா மையம் கூட இல்லை. 5,000 அடி உயரத்திற்கு மேலாக, அழகான தோற்றமும், தென்றல் காற்றும், விண்ணுயர ஓங்கி உயர்ந்த மரங்களும், 4 நீர்த்தேக்கங்களும் உள்ள எனது மேகமலை பகுதியிலே ஒரு சுற்றுலா மையம் உருவாக்கினால் நிச்சயமாக வெளிநாட்டவர்களைக் கவருகின்ற வண்ணம் இருக்கும் என்றும் அதே நேரத்தில் வான் பொய்த்தாலும் தான் பொய்யா என்ற அந்த சுருளி அருவி கம்பம் பள்ளத்தாக்கிலே இருக்கிறது. மூலிகைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அந்த சுருளிதீர்த்தத்தையும், மேகமலையையும் சுற்றுலா மையமாக அரசு ஏற்று அதற்கான திட்டங்களைத் தீட்டினால் வெளிநாட்டுப் பயணிகளும் உள்நாட்டுப் பயணிகளும் சேர்ந்து அங்கே வருவார்கள் என்பது திண்ணம். அரசுக்கும் நல்ல வருவாய் கிடைக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கும் என்று கேட்டு, வரவு-செலவுத் திட்டத்தில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த இந்த மாமன்றத்திற்கு நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-20)

**பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பை எனக்கு அளித்தமைக்காக முதற்கண் தங்களுக்கு நன்றியினைக் கூறி, என்னை இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்து, 1989-90 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பினை தேடித்தந்த மருங்காபுரித் தொகுதியினுடைய மக்களுக்கெல்லாம் வணங்கி, எனது நன்றியினை இங்கே தெரிவித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்குமாறு தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.



1989 மார்ச் 31] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்த நேரத்தில், ஒரு சிலவற்றை தமிழக மக்களின் நன்மை கருதி, இங்கே சொல்ல வேண்டிய அவசியம் காரணமாக என்னை அனுமதிக்குமாறு வேண்டுகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பலவாறாக, பல பேர் போற்றி அமைந்தாலும், ரூ. 100 கோடி அளவிலே பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டமாகத் தான் இது இருக்கிறது என்பதை வருத்தத்தோடு இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பற்றாக்குறையினை எப்படி இந்த அரசு ஈடு செய்யப் போகிறது என்ற கேள்விக்கு இந்த அரசு கொடுத்து இருக்கின்ற பதில்கள், மன நிறைவை அளிக்கின்ற அளவிலே இருந்தாலும்கூட, நிச்சயமாக அவைகள் செயல்படுத்தப்பட்டால் உள்ளபடியே நாங்கள் மகிழ்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சிக்கன நடவடிக்கை காரணமாகவும், செலவுகளை அதிகப்படுத்தாத அந்தச் செயல்பாடு காரணமாகவும் இந்தப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் என்கிற அளவிலேயும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே, இது செயல்படுத்தப்படுமானால், நிச்சயமாக நாங்கள் மிகவும் மகிழ்வோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

சிக்கன நடவடிக்கை என்ற பெயரால் திட்டங்கள் வெட்டுப்படுவதும், திட்டங்கள் செயல்படாமல் நிறுத்தப்படுவதும் தவிர்க்கப்பட வேண்டும் என்ற என்னுடைய தாழ்மையான கோரிக்கையை அவையிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு மிக அதிகமான சலுகைகளை அளித்துவிட்டதைப் போல, ஒரு மாயை இங்கே தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்று கூறிக் கொள்வதிலே என்னுடைய கடமையை நான் நிறைவேற்றுகிறேன். கடந்த அரசு ஏறத்தாழ ரூ.140 கோடி அளவிற்கு விவசாயிகளுடைய கடன்களையும், வட்டியையும் தள்ளுபடி செய்து ஒரு சாதனை படைத்து இருக்கின்ற ஒரு நேரத்திலேகூட, இப்போது வெறும் 39 கோடி ரூபாய் மட்டும் தான் இந்த அரசால் முடிகிறது என்பதை எண்ணும்போது ஓரளவிற்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலும்கூட, பேரளவிற்கு அந்த மகிழ்ச்சி நிலைக்கவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ. 12.5 கோடியை ஒதுக்கியிருப்பது உள்ளபடியே மிகவும் குறைவு என்பதைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசிடம் இந்த அரசு முதற்கட்டமாகக் கேட்டிருப்பதே வெறும் 25 கோடி ரூபாய் என்பதை எண்ணுகிறபோது தமிழ்நாட்டிலே தற்போது நிலவுகின்ற வறட்சியை எந்த அளவிற்கு இந்த அரசு சந்திக்கப் போகிறது என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாவட்டங்களைப் பிரிப்பதைப் பற்றி முன்பே இங்கே தர்க்கம் நடந்து விட்டது. அதிலே நுழைய நான் தயாராக இல்லை. ஆனால் ஒன்றைச் சொல்லிக் கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அண்ணா மாவட்டம் என்று திண்டுக்கல் இருந்தபோது செங்கை மாவட்டத்தை அப்படிச் சொன்னால்தான் சரியாக இருக்கும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுத்துச் செயல்பட்டதை நாங்கள் குறை கூற வில்லை. ஆனாலும் அந்த மாவட்டத்திற்கு ஒரு பெரிய தலைவருடைய பெயரை இப்போதே வைத்திருக்கிறார்கள். அந்தத் தலைவருடைய பெயரை தஞ்சை மாவட்டத்தை மூன்றாகப் பிரிக்கும்போது, அங்கே ஒரு பகுதிக்கு வைக்கவேண்டும் என்ற கோரிக்கை நெடுங்காலமாக இருக்கிறது என்பதால் அந்தச் சூழ்நிலை எழும்போது மீண்டும் அந்தத் தலைவருடைய பெயரை அங்கே டிரான்ஸ்பர் செய்யாமல் இந்த அரசு இருக்குமா என்பதை தெரிந்து கொள்ள நான் விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கன்னிப் பேச்சில் குறுக்கிடக்கூடாது என்பது மரபு. (குறுக்கீடு)

**பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒலிபெருக்கி கூட குறுக்கிடுகிறது என்பதால் இதையும் சற்று கவனிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் குறுக்கிட்டால் மட்டும், உறுப்பினர்கள் ஒலிபெருக்கி வேலை செய்யாது.

**பேராசிரியர் க. பொன்னுசாமி :** அடுத்து, அரசு அலுவலர், ஆசிரியர் நலன்களிலே அக்கறை காட்டுகின்ற இந்த அரசு அறிவித்திருக்கின்ற ஒரு செய்தி மகிழ்ச்சி அளிக்கக்கூடியது என்றாலும் கூட, ஒன்றை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசு அலுவலர், ஆசிரியர்கள் மத்திய அரசிற்குச் சமமான ஊதியம் வேண்டுமென்று போராட்டம் நடத்திய நேரத்திலே அதிகாரிகள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். ஏறத்தாழ 3½ கோடி ரூபாய் அளவிலே அதற்கு நிதி தேவைப்படுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்து இங்கே ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1—6—88 முதல் முன் தேதியிட்டு அது செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருப்பதை வரவேற்கின்ற நேரத்திலே இதற்கான நிதி ஒதுக்கீடு காட்டப்பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 53.12 கோடி ரூபாய் செலவிடப்பட்டு 230 ஏரிகள் நவீனப்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது ; அதை நான் வரவேற்கிறேன். இதிலே ஆளுங்கட்சியின் தலையீடு இல்லாமல் இந்த அரசு அதைச் செய்யுமானால் நான் மிகவும் மகிழ்வேன்.





ஆற்று நீர்ப் பாசனத்திற்கு அதிகமான அக்கறை காட்டுகின்ற அரசு, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல காவேரி நீர்ப் பிரச்சினையை மிக விரைவில் தீர்ப்பதற்கு இதுவரை எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்று நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்ற முயற்சியை மேற்கொண்டு அதை பாரதப் பிரதமர் அவர்களே கூட ஏற்றுக்கொண்டு உச்ச நீதிமன்றமும் அதை ஏற்றுக்கொண்டு நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்ற கொள்கை இருக்கின்ற நேரத்தில் மீண்டும் பேச்சு வார்த்தை என்ற அளவில் அது நீட்டிக்கப்படக்கூடாது ; அந்த நீட்டிப்பு தமிழக மக்களை குறிப்பாக தஞ்சைவாழ் மக்களையும் பாதித்துவிடக்கூடாது என்ற என்னுடைய ஆழ்ந்த கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பாசனம் வளமுறுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் செம்மையாக நடைபெறும் வகையில் பாசன நீரை தேக்கி, நஞ்சை அதிகமாக்கப்படவேண்டும் என்ற கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்காக அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சாலைகள் பராமரிப்பிலே 103 கோடி ரூபாய் ஒதுக்கி இருந்தாலும் கிராமப்புறங்களில் உள்ள சாலைகளை அமைப்பதற்கு ரூ. 1½ கோடியும், நகர்ப்புறங்களில் உள்ள சாலைகளுக்கு ரூ. 20 கோடியும் ஒதுக்கி இருப்பது போதாது. இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து கிராமப்புறங்களில் சாலை வசதியைப் பெருக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கின்ற திட்டம் நல்ல திட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு வீட்டுக்கு ஏறத்தாழ 11 ஆயிரம் ரூபாயில் அது கான்கிரிட் வீடு என்று சொல்கிறார்கள்; அந்த அளவிலே முடியுமா என்ற சந்தேகம் இருக்கிறது. தேவைப்பட்டால் இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கி நல்லமுறையில் அந்த வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிராமப்புறத்திலே 10-வது வரை படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு மாதம் 200 ரூபாய் வீதம் ஒரு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று இந்த அரசு கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் நகர்ப்புறத்தில் இருப்பவர்களுக்கு விரைவிலே ஒரு திட்டம் அறிவிக்கப்படும் என்ற ஒரு சஸ்பென்ஸ் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) மணியடிப்பதற்குப் பின்னாலே உங்களுடைய ஆணை வரும் என்று எனக்குத் தெரியும். விரைவிலே முடித்துக்கொள்கிறேன். 10-வது படித்த அந்த மாணவர்களுக்கு, வேலையற்ற இளைஞர்களுக்கு, வாய்ப்பைத் தருவதைப் போல நகர்ப்புறத்தில் இருப்பவர்களுக்கு ஒரு சஸ்பென்ஸ் கொடுத்து இருக்கிறீர்களே அது என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1989 மார்ச் 31

அதேபோல் கல்வி வளர்ச்சிக்கு உதவுகின்ற வகையில் 8-வது படித்த வேலையற்று இருக்கின்ற அல்லது திருமணம் செய்ய இயலாத நிலையில் இருக்கின்ற ஏழைப் பெண்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் 6 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். 12 ஆயிரம் பேருக்கு மட்டும் தர இருக்கிறீர்கள். எந்த அடிப் படையில் தர இருக்கிறீர்கள் என்பதை சொல்லவில்லை.

அடுத்து, ஒரு திட்டத்தில் சொல்லுகின்றபோது ஏறத்தாழ 50 லட்சம் ஏழைக் குடும்பத்திற்கு 5 கிலோ அரிசி தருவதாக சொல்லியிருக்கிறீர்கள். ஆக 50 லட்சம் ஏழைக் குடும்பங்கள் இருக்கும்போது 12 ஆயிரம் பெண்களுக்கு மட்டும் திருமணத் திற்கு ஏற்பாடு செய்வோம் என்று சொல்லியிருப்பது ஏதோ 'புரபோர்ஷனேட்' என்று சொல்வார்களே விகிதாச்சார வகை யில் ஒத்துவரவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் கர்ப்பிணி பெண்களுக்கு தர இருப்பதையும் 2 லட்சம் பேருக்கு மட்டும் தருவதாக இந்த அரசு சொல்லி யிருக்கிறது. எ க்குள்ள சந்தேகம் எல்லாம் 'சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம்' என்று சொல்லுகின்ற இந்த அரசு இங்கே சொல்லியிருக்கின்ற அளவிலே மட்டும் செய்துவிட்டு மற்றதைச் செய்யாமல் விட்டுவிடுமோ என்ற சந்தேகம் எழுகிறது என்பதை சொல்லி, அதை நீட்டிப்புச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில வார்த் தைகள் சொல்லாவிட்டால் நான் என்னுடைய கடமையிலிருந்து தவறியவன் ஆவேன் என்ற முறையில் ஒருசிலவற்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

. ன்னுடைய தொகுதி கவும் பின்தங்கிய தொகுதி. மானா வாா் நிலங்கள் நிறைந்த தொகுதி. இன்னும் 2 நிமிடங்கள் இருக்கின்றன என்பதை நான் கவனித்துக் கொண்டு தான் பேசிக் கொண்டிருக்கிறேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இடையிலே தங்களுடைய குறுக்கீடும் கூட என்னுடைய பணியை தடுத்துவிடும் என்ற எண்ணத்திலே தயவுசெய்து அனுமதிக்க வேண்டுகிறேன்.

அந்த தொகுதி மானாவாரி நிலங்களைப் பெற்ற தொகுதி. அங்கே காவேரி இல்லை. அதிகமான நீர்ப் பாசனங்கள் இல்லை. வானத்தை எதிர்பார்த்து இருக்கின்ற தொகுதி. இங்கே இருக் கின்ற அமைச்சர் பெருமக்கள் ஏறத்தாழ 12 பேருக்கு அந்த தொகுதியைப் பற்றி ஒவ்வொரு இடமாக நன்கு தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அங்கே 2 நாட்கள் கிராமம் கிராமமாக சுற்றுப்பயணம் செய்தவர்கள், மிக நன்றாகவே கிராமங்கள் பற்றி அறிந்து இருப்பவர்கள். அந்த வகையில் நான் இங்கே கேட்டுக்கொள்ளுவது எல்லாம் மிக



1989 மார்ச் 31] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

நன்றாக இந்த கிராமங்களைப் பற்றி அறிந்து இருக்கிறவர்கள் தயவுசெய்து அந்த கிராமங்களுக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமையை மறந்து விடாதீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஒன்றைச் சொன்னார்கள், நான் ஒரு பெண்ணை அலங்கரித்து அனுப்புகிறேன், திலகம் இட்டு அனுப்புங்கள் என்று சொன்னார்கள். திலகம் இடவில்லை என்ற காரணத்திற்காக அந்த மருங்காபுரி மக்களுக்கு நீங்கள் மாற்றாந்தாய் மனப் பான்மை காட்டமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக் கிறது என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடம் இருக் கிறது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்த ஒரு நிமிடத்தையும் நான் வீணாக்க விரும்பவில்லை. தயவு செய்து நீர்ப்பாசன ஏற்பாடுகளுக்காக 3 ஊராட்சிகளில் சில ஏரிகளை நவீனப் படுத்தி அதிலே நீரைத் தேக்கி இரண்டு போக நஞ்சையாக அதை மாற்றி விவசாய உற்பத்திக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வளநாடு, துலுக்கம் பட்டி ஏரியா, தெத்தூர் போன்ற இடங்களிலெல்லாம் ஏறத் தாழ குறிஞ்சி நிலங்கள்தான் உள்ளன. மலையைச் சார்ந்த இடங்கள். மலையிலே பெய்கின்ற தண்ணீரெல்லாம் வீணாகச் சென்று விடுகிறது. . . (மணியடிக்கப்பெற்றது)

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேராசிரியர்கள், மணி யடித்தவுடன் வகுப்பைவிட்டு வெளியேறுவதுதான் முறை. (சிரிப்பு) அடுத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்

### 7. அரசினர் தீர்மானம்
### விதி 32-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மா னத்தை மொழிகிறேன் :

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக் கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை 1–4–89 அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளை 1–4–1989 காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

30. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு பெண்கள் நலச் சங்கத்திற்கு சொந்தமான TCY 2138 எண்ணுள்ள அவசர ஊர்திக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 22–9–1988-ஆம் நாளிட்ட 2089-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

31. MDU 9019 எண்ணுள்ள மோட்டார் வண்டிக்காக 1977-ஆம் ஆண்டு சனவரி மாதம் செலுத்த வேண்டிய வரிபாக்கி மற்றும் தண்டத் தீர்வையினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 9–12–1988-ஆம் நாளிட்ட 2645-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

32. மதுரை, இந்திய செஸ்யர் இல்லத்திற்கு சொந்தமான TNU 9917 எண்ணுள்ள ஆட்டோ ரிக்ஷாவிற்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 2–12–1987-ஆம் நாளிட்ட 2840-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)

33. தமிழ்நாடு ஸ்பாஸ்டிக்ஸ் சொஸைட்டிற்க்கு சொந்தமான MGR 8660 எண்ணுள்ள பேருந்திற்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 2–12–1987-ஆம் நாளிட்ட 2841-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

34. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1983–84-ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள் எதுவுமில்லை,

---

800 009
144357
D
V 21, 31 MES
N 89.6.3